
# குறுங்கூத்துக்கள்



கலையார்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

( ஐந்து தென்மோடிக் கூத்துக்கள் )




கலையார்வன்

வெளியீடு

ஜெயந்த் சென்ரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : குறுங்கூத்துக்கள் |
| விடயம் | : ஐந்து தென்மோடிக் கூத்துக்கள் |
| ஆசிரியர் | : கலையார்வன் (கு. இராயப்பு) |
| பக்கங்கள் | : 160 + xvi |
| முதற் பதிப்பு | : 19.12.2011 |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| வெளியீடு | : ஜெயந்த் சென்ரர்<br>28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். |
| அட்டை ஓவியம் | : திருமதி பப்சி மரியதாசன் |
| கணினி<br>வடிவமைப்பு<br>அட்டை | : ஜெயந்த் சென்ரர் |
| அச்சுப்பதிப்பு | : யே. எஸ். பிரின்டர்ஸ் |
| விலை | : 300/= |

சர்வதேச நியம நூல் இலக்கம்
ISBN 978-955-019-701-9

| | |
|---|---|
| Title | : Kurungkkuthukkal |
| Subject | : Fivi Thenmoodi Kuthukkal |
| Author | : Kalayarvan (K. Rayappu) |
| Pages | : 160 + xvi |
| First Edition | : 19.12.2011 |
| Copy Right | : Author |
| Published by | : Jeyanth Centre<br>No. 28, Martyn Road, Jaffna. |
| Cover Design | : Mrs. Bubsy Maryathasan |
| Computer<br>Layout<br>Cover Illustrator | : Jeyanth Centre |
| Print by | : J.S.Printers |
| Price | : 300/= |

International Standard Book Number
ISBN 978-955-019-701-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணம்



மண்ணிலிருந்து மறைந்தாலும்
எண்ணத்தில் நிறைந்திருக்கும்
மனதிற்கிசைந்த மனையாள்

**திருமதி இராயப்பு லூர்துநாயகி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

கூத்து மேடையேற்றத்துக்கான பொது நோக்கத்தின் நிமித்தம் இந்தத் தொகுப்பிலுள்ள கூத்துக்களில் 'காப்புப்பாடல்', 'வாழிபாடல்' மற்றும், 'பாடி முடித்த கூத்தை தொடர்ந்து பாடப் போவதில்லை' என்ற தீர்மானத்தில், கூத்தின் நிறைவில் பாடப்படும் 'மங்களம்' பாடலும் சேர்க்கப்படவில்லை.

மரபு வழியான எழுத்துருக்களில் இப்பாடல்கள் அடிப்படை யானவை. ஒவ்வொரு எழுத்துருக்களுக்கும் இவை அத்தியாவசிய மானவை. இதனால் இப்பாடல்களின் முக்கியத்துவம் கருதி, பின்னி ணைப்பாக சில மாதிரி பாடல்கள் தரப்பட்டுள்ளன. கூத்தை மேடை யேற்றுபவர்கள், குறித்துள்ள இராக – தாளத்திற்கேற்ப பாடல்களில் உள்ள சொற்களில் மாற்றம் செய்து பாடுவதன் மூலம் நிறைவைக் காணலாம்.

### அட்டை ஓவியம்

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நடைபெற்ற
'இலங்கைக்கு மீளத் திரும்புதல்'
என்னும் காட்சிப்படுத்தலில் காணப்பட்ட
'பிரித்தானியர் கால நாட்டுக்கூத்துக் கலைஞர்களின்'
புகைப்படத்தைத் தழுவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளியீட்டாளரிடமிருந்து...

கலையார்வனின் 'குறுங்கூத்துக்கள்' என்னும் ஐந்து தென்மோடிக் கூத்துக்களைக்கொண்ட இந்நூலை வெளியீடு செய்வதில் மனநிறைவு அடைகின்றோம். செம்மைப்படுத்தப்பட்ட இராகங்களுடன், நன்கமைக்கப்பட்ட தாளக்கட்டுடன், அண்ணாவி மார்களால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அச்சாக்கம் செய்யப்பட்டுள்ளது. உங்கள் கைகளில் தவழும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து கூத்துக்களும் தமிழ் மக்களுக்கு பெரிதும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே பயனுள்ள இந்த நூலை வெளியீடு செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

எம்மால் வெளியீடு செய்யப்பட்ட கலையார்வனின் 'கூத்துக்கள் - 5' என்னும் நூல், 'அரச இலக்கிய (சாகித்திய) விருது', அகில இலங்கை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 'தமிழியல் விருது', இலங்கை இலக்கியப் பேரவையின் 'இலக்கியச் சான்றிதழ்- 2010' போன்றவற்றைப் பெற்றுள்ளமை எம்மை மகிழ்விக்கிறது. மேலும் இது போன்ற பல விருதுகளை பெறவேண்டுமென இறைவனிடம் வாழ்த்துகின்றோம்.

**ஜெயந்த் சென்றர்**

*28 மாட்டின் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*10.12.2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாசித்தறிந்ததிலிருந்து...

நீண்ட காலமாக என் மண்ணில் சிறப்புற்றிருந்த கூத்துக்கலையில் ஒன்றித்து அனுபவித்த நான், எமது 'பாரம்பரிய கூத்துக்கலை' பற்றி இலக்கிய வெளியீடுகள் பலவற்றில் எழுதிவந்த நான், தற்போது 'குறுங்கூத்துக்கள்' பற்றிய இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதற்கு முன்வந்திருக்கின்றேன்.

கூத்துக்கலையானது நாடகத் தமிழில் அங்கம் வகிப்பது. நாடகத் தமிழை விளக்கும் முகமாக முகபாவ அங்க அசைவுகளோடு பாடி, கதாபாத்திர உணர்வுகளை நடிகர்கள் வெளிப்படுத்துவர். அவ்வாறு வெளிப்படுத்தும்போது 'தாளக்கட்டு' பிசகாமல், பாடல்களைப் பாடி நடிப்பது முக்கியமானதாகும். அதில் அந் நடிகரால் நடிக்கப்படும் நடிப்பைவிட பாடலை, தாளக்கட்டு பிசகாமல் இசை வளத்தோடு பாடுவதிலே அவர்கள் முக்கிய கவனம் எடுப்பர். இவை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டுதான் 'கலையார்வன்' கு. இராயப்பு அவர்கள் மிகச் சிறப்பாக இக்கூத்து நூலை உருவாக்கியுள்ளார்.

இவர் பதினைந்து வருடங்களுக்கு மேலாக குருநகர் மக்களின் பண்பாட்டு வளங்களைச் சித்திரிப்பதிலும் அவற்றை வெளிக்கொண்டுவருவதிலும் கணிசமான பங்காற்றி, தான் பிறந்த மண்ணிற்கும் மக்களுக்கும் பெருமையை ஈட்டித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'கலையார்வன்' தனது முன்னைய வெளியீடுகளில் குருநகரில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜேம்ஸ் புலவரின் படைப்புகளையும், நாட்டுக்கூத்தின் முக்கிய கலைஞர்களாய் வாழ்ந்த இளையப்பா, சாமிநாதர், நட்டுவன் அந்தோனிப்பிள்ளை, கொண்டையர் சின்னத்துரை போன்ற 16 அண்ணாவிமார்களையும், கூத்துக்கலைக்கும், இசைநாடகத்திற்கும் ஒப்பற்ற மகுடமாய் திகழ்ந்த பக்கரி சின்னத்துரையின் ஆற்றலையும், கலைத் தொண்டையும் வெளிக்கொண்டுவந்துள்ளமை இவரது கலைஞான ஆற்றலைக் காட்டுவதாகும். அத்துடன், இந்நூலுக்கான தமதுரையில் வெளிப்படுத்தியிருக்கும் 'கூத்துக்களை எழுத முயற்சிப்பதற்கான காரணங்கள்' இவரது பரந்த நோக்கத்தைச் சுட்டிநிற்கின்றது.

மணல்கொண்டு மேவப்பட்டு அமைக்கப்பட்ட குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் இருந்த மைதானம் போன்ற வெளிகளிலெல்லாம் ஒவ்வொரு கலைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவும் போட்டிபோட்டு, புனித யாகப்பர் திருவிழா, பரி. புதுமைமாதா திருவிழா, பர. கார்மேல்மாதா திருவிழா, இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு போன்ற விசேட நாட்களில் பெரும் பணச்செலவோடு கூத்துக்களை அரங்கேற்றும் சிறப்புகள் பற்றி, கலையார்வன் தன் நூல்கள் பலவற்றில் குறிப்பிட்டுள்ள வரலாற்றுக் குறிப்புகள் பலரும் அறிந்துகொள்ள வேண்டியவையாகும்.

மேலும், கலையார்வனின் 'குறுங்கூத்துக்கள்' என்னும் இந்நூலை எடுத்து நோக்கும்போது, அதிலுள்ள ஐந்து கூத்துக்களையும் நீண்ட கூத்துக்களாய் அமைக்காமல், எடுத்துக் கொண்ட ஒவ்வொரு நாடகக் கதையிலும் முக்கிய அங்கங்களை எடுத்துப் படிப்போர், பாடுவதைக் கேட்போர், பார்ப்போர் நெஞ்சை ஈர்க்கும் வண்ணம் குறுங்காவியமாய் படைத்திருக்கிறார். அதுமட்டுமன்றி, வழமையாக மேடையேற்றப்பட்டுவந்த பழைய கூத்துக்களிலிருந்து விடுபட்டு புதிய கதைகளைக்கொண்ட கூத்துக்களை ஆக்கியுள்ளமை யாவரும் விரும்பிக் கற்றுணரக்கூடிய, மேடையேற்றக்கூடிய தன்மையைத் தோற்றுவிக்கின்றது. எடுத்துக்கொண்ட ஒவ்வொரு சம்பவத்தையும் மக்கள் இரசனைக்கேற்ப நாடகக் கதையாக அமைப்பதில் அவரது அனுபவம் மேலோங்கி நிற்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக பொருத்தமான இடத்தில், பொருத்தமான இராகத்தைத் தேடியெடுத்து இணைந்திருப்பது அவரது முதிர்ச்சியைக் காட்டுகின்றது. இதுபோன்ற பல சிறப்புக்களை உள்ளடக்கிய இந்நூலிலுள்ள கூத்துக்கள் பின்வருமாறு:

### சகுந்தலை

இக்கதை, காளிதாசர் எழுதிய 'சகுந்தலை' என்னும் காவியத்தின் ஒரு பகுதியாகும். சகுந்தலையின் பிறப்பை துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கும் இக் கூத்தில், துஷ்யந்தன் மன்னன் சகுந்தலையைச் சந்திக்கின்ற காதல் களம், கூத்துக்கலை சித்திரிப்புடன் உரையாடலையும், பாடலையும் ஒன்றுக்கொன்று தழுவியதாய் அமைத்திருப்பது சுவைக்கக்கூடியதாக உள்ளது.

*"கானகம் தன்னில் காவியம் போலொரு*
*கன்னியைக் கண்டேனே - இவள்*
*தேனின் இனிமையோ தெவிட்டாத சுவையோ*
*தேடியெடுத்த தேன்தமிழ் பாவோ - இல்லை*
*தேரினில் வந்த தேவதையாளோ..."*

### அனார்க்கலி

இந்திய வரலாற்றில் மொகலாயர் காலம் வீரம் விளைந்த காலப்பகுதி. இக்காலப்பகுதியில் இந்திய மண்ணின் பெரும்பகுதியை ஒருமுகப்படுத்தி ஆண்ட பெருமை அவர்களுக்கு உண்டு. என்னதான் பெருமையுறு ஆட்சியாக இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் தன் மகனின் தூய காதலுக்கு பெருமையளிக்காத அக்பரின் ஆளுமையின் பெருமிதம், காதலின் விளைந்த அமரத்துவத்துக்கு முன்பாக துன்ப இயலின் கோளமாய், தீராத களங்கமாய் விளங்குகின்றது. அனார்க்கலியை உயிரோடு வைத்து சமாதியாக்கிய துன்பக் காட்சியும், அவளது ஜீவமரணப் போராட்டத்தின் உச்சகட்டமாய் முடிக்குரிய இளவரசன் சலீம் அங்கலாய்த்து துடிதுடித்து அவ்விடத் திலேயே தன்னை மாய்த்துக்கொள்வதும் படிப்போர் நெஞ்சைக் கலக்கமுறச் செய்கிறது. இதைப் படித்ததும் மகாகவி பாரதியாரின் குயில் பாட்டில்; "காதல் காதல் காதல் காதல் போயின் - சாதல் சாதல் சாதல்" என்னும் காதலின் அமரத்து வமான கீதம் எம் நெஞ்சில் ஒலிக்கச் செய்கிறது.

"மண்ணில் - அநியாய மாயரசன் குற்றமற்ற
கன்னியுயிர் தன்னைப் பறித்தானே
விண்ணில் நாமிணைய என்னுயிரை - இக்கணமே
ஈகை யாகவே கொடுத்திடல் தவறாகுமோ
ஈடிணை யற்ற மன்னாவிது நீதிதானே..."

## காசியப்பன்

அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த மன்னன் காசியப்பனின் சூழ்ச்சித்திறன் கொண்ட கதையமைப்பை ஆசிரியர் எடுத்துள்ளார். நாடகக் கதையின் சுவையூட் டலுக்காக சற்றுக் கற்பனை சேர்த்து ஆக்கப்பட்டிருந்தபோதும், சிங்கள தேசத்தின் வரலாற்றை உள்ளடக்கி அதன் தரவுகளை ஒருமுகப்படுத்தி சிறப்புடன் வெளிப் படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

"நாட்டை மொகல்லானனுக்கு நீட்டிக் கொடுப்பதற்கு
நாட்டம் கொண்டவிந்த ஈனச்செய லெதற்கு
மனிதக் குணமுமற்று புனிதத் தனமுமற்று
வினவல் எதுவுமற்று அரசின் மரபுமற்று
நெறிகுன்றி அறிவின்றி பிறரறியா முறைநின்று
அறமற்ற வழிநின்று துயரெனக்கு செய்தீரே..."

## மந்தரை சூழ்ச்சி

இராமாயணத்தில் அயோத்திய காண்டத்தின் முக்கியமான பகுதி மந்தரை சூழ்ச்சிப் படலமாகும். இதில் அமைந்துள்ள கதையில் இராமனின் வாழ்க்கை மந்தரையின் சூழ்ச்சியால் சீரழிந்தாலும் அவளால் ஏற்பட்ட திருப்பு முனைகள் இராமனுக்குப் புகழை ஈட்டிக்கொடுத்தது என்பது மறக்க முடியாத வொன்று. இக்கூத்தில் மந்தரையின் தன்மையையும், இராமபிரானின் பண்பையும் நூலாசிரியர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

"அரசபாரம் நீங்கிவிட்ட தாலே - மகிழ்வு
அடைகின்றேனே கவலையில்லை தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சீர்பெறுவோன் பரதனென்றால் நன்றே - இதைச்*
*சொல்வதற்கு தயக்கமேனோ தாயே..."*

## சங்கிலி செகராசசேகரன்

கி.பி. 16 ஆம் நூற்றாண்டு எம் தேசத்தில் அன்னியர் கால் பதித்த முக்கிய காலப்பகுதியாகும். போர்த்துக்கேயர் வருகையிலே வடபிரதேசத்தின் மண் சூறையாடப்பட்டு, மதத்தின் பெயரால் மக்களை அடக்கி, ஆளுமைப் படுத்திய வடுக்களை நம் சந்ததியினர் மறக்கவே முடியாது. அக்காலத்தில் அன்னியருக்கு எதிராக போராடிய சங்கிலிய மன்னனின் ஆட்சிப் பரம்பலையும், மக்கள் வாழ்வையும் ஆசிரியர் மிக அழகாகச் சித்திரிக்கிறார். இம் மண்ணின் வரலாறே வீரம் பொருந்தியதாக இருந்தாலும், சூழ்ச்சித் திறத்தால் வல்லமை கொண்ட இவன் அரசு உரிமையை தனதாக்கிய கெடுமதியின் நெஞ்சை அறியக்கூடியதாய் இருக்கின்றது. எந்நிலையில் இருந்தாலும், சங்கிலி மன்னன் தமிழ் மக்களின் உள்ளத்திலே அசையாத வீர புருசனாய், தாய் நாட்டின் தனித்துவத்தில் அன்னியர் தலையீட்டை அனுமதிக்காத செம்மலாய் விளங்கு கின்றான். இவனால் விளைந்த வீரமதை, மண்ணின் சுதந்திரத் தனித்துவத்தை ஆசிரியர் மிக சிறப்பாகக் காட்டுவது இக் 'குறுங்கூத்து' இலக்கியத்துக்கு மகுடம் வைத்தது போலாகும்.

*"எந்தன்நலங்காக்க எதையும் செய்திடத் துணிந்த*
*என்னண்ணன் பண்டாரன் சிரந்தனை அறுத்த*
*தந்தையைக் கானகம் ஏகிடவழி காட்டிய*
*தனையனும் நான்தானே என்பதை அறியாயோ*
*வைப்பாட்டி மகனென்ற வசையினைத் தீர்த்திட*
*எப்பாடு பட்டேனும் என்கர்வம் விடமாட்டேன்..."*

இந் நூலாசிரியர் 'கலையார்வன்' கு. இராயப்பு அவர்களின் கலைத் தொண்டை மறந்தவர் தமிழையே மறந்தவராவர். இவர் நம் பிரதேச மக்கள் மறக்க முடியாத வகையில் இரண்டு நூல்களுக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 'சிறந்த இலக்கியநூல்' விருதுகளும், ஒரு நூலுக்கு 'அரச இலக்கிய (சாகித்திய) விருதும்', அகில இலங்கை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 'தமிழியல் விருதும்' பெற்றுள்ளமை எம் மண்ணின் கலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கக்கூடியவையாகும். இந்நூலுக்கும் உரிய கௌரவம் கிடைக்கும் என நம்புகின்றேன். வாழ்க கலையார்வனின் கலைத் தொண்டு! வளர்க நாடளாவிய அவரின் அரும்பணி!

**புலவர் வேல்மாறன்**
(பி. ஆனந்தராயர்)

10.12.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாடலைச் சீரமைக்க உதவிய அண்ணாவியாரிடமிருந்து...

'கலையார்வன்' கு. இராயப்பு அவர்கள் எனது பள்ளி நண்பன். 1961 ஆம் ஆண்டுமுதல் சிறுவர்களாகவே அவர் வசித்த வீட்டின் ஒரு பகுதியில் நாடகங்களை மேடையேற்றியுள்ளோம். நிலையறியாப் பருவத்தில், அரிக்கன் விளக்கின் ஒளியில், அரங்கமின்றி நாடகத்தை மேடையேற்றிய நாட்கள் பசுமையானவை. அப்போது முதலே இவர் நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களை எழுதுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார். இவர் எழுதிய 40 இற்கு மேற்பட்ட நாடகங்களில் 20 நாடகங்களுக்கு மேல் நானும் நடித்திருக்கிறேன். அந்தவகையில் இவரது ஆளுமையை என்னால் இனங்காணமுடியும். 20 வருட கால இவரது வெளிநாட்டு வாழ்க்கையில் எம்மிடையே இடைவெளி காணப்பட்டாலும் அங்கும் தமது கலைப்பணியை செவ்வனே ஆற்றுகின்றமையை அறிந்து சந்தோஷமடைந்தேன்.

'வயிற்றுக்கு உணவு ஈந்தால் போதாது செவிக்கும் உணவு ஈய வேண்டும்' என்று முதியோர் கூறுவார்கள். செவிக்கு அளிக்கும் உணவு நல்ல இசையோடு கூடிய பாடல்கள். இதற்கென பண்டுதொட்டு வழக்கிலிருந்து வந்தவை நாட்டுக்கூத்துப் பாடல்களே. அவற்றையே அவர்கள் முதன்மைப் படுத்திக் கூறியிருந்தார்கள். எமது பாரம்பரிய கலைவடிவமாகத் திகழும் நாட்டுக்கூத்தில் தென்மோடிக் கூத்தை வளர்ப்பதில் எனக்கும் சிறிய பங்குண்டு என்பதால் 'கலையார்வன்', தம்மால் எழுதப்பட்ட பல கூத்துக்களைப் பாடிப் பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தை எனக்குத் தந்திருந்தார்.

இதன் தொடராக 'கூத்துக்கள் ஐந்து' என்னும் பெயரில் நூலாக்கம் செய்வதற்கு நண்பன் 'கலையார்வன்' ஐந்து கூத்துக்களை எழுதியபோது அவற்றை என்னிடம் பாடிப் பரிசீலித்து சீரமைக்க உதவுமாறு கேட்டிருந்தார். அவற்றைப் பாடிப் பார்த்தபோது ஆச்சரியமடைந்தேன். மிகக் குறைந்த பாடல்களில் மட்டும் சில சொற்கள் நீட்சிபெற்றுக் காணப்பட்டன. ஏனையவை இராக, தாளத்துக்கு ஏற்றவாறு பிசகின்றி சீர் அமைக்கப்பட்டிருந்தது. இதனால் எனது பணி இலகுவாக இருந்தது.

நாட்டுக்கூத்துப் பணியில் கூத்து எழுத்தாளர் முதன்மை பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால்; அவர் தேர்ந்தெடுத்த கதையை வைத்துக்கொண்டு அதற்குரிய நாடக பாத்திரங்களை உருவாக்கி, அவர்களுக்கு உரிய முறையில் கூத்து இராகங்களைத் தேர்வுசெய்து எழுதவேண்டும். அதில் இராகம், தாளம், சொற்கள் பிசகாமல் இருக்கவேண்டும். வரும் காட்சிகளில் எந்தெந்த இடங்களுக்கு என்னென்ன இராகங்கள் போடவேண்டும், சொல்வரிசைகள் விலகாமல் இருக்க வேண்டும், கதையின் தன்மை கெடாமல் பாடல்கள், வசனங்களை எழுத வேண்டும் என்பன போன்றவற்றை எழுத்தாளன் தன்னுள் கொண்டிருக்கிறான். எழுதுகிறவர் சரியாக எழுதினால்தான் பாடுகிறவர் சரியாகப் பாடமுடியும்.

இத்தகைய வெளிப்படுத்தல் சிறப்பாக அமைந்திருந்ததை என்னிடம் ஒப்படைத்த 'குறுங்கூத்துக்கள்' என்னும் இந்நூலிலுள்ள ஐந்து கூத்துகளிலும் கண்டேன். அவற்றைப் பாடிப் பார்த்தபோது கலையார்வனின் எழுத்தாற்றல் முன்னைய கூத்துக்களைவிட சிறப்பாக வெளிப்பட்டுக் காணப்பட்டதை உணர்ந்தேன். ஐந்து கூத்துக்களிலுமுள்ள நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களில் ஆறு பாடல்களில் மட்டுமே சொற்கள் சிலவற்றில் நீட்சி காணப்பட்டது. அவற்றை இலகுவாக சீர்செய்தார். மொத்தத்தில் பாடல்கள் ஒவ்வொன்றினதும் இராகம், தாளம், எழிமையான - இனிமையான சொற்பிரயோகங்கள் எனக்கு ஆச்சரியத்தையும் அதேவேளை சந்தோஷத்தையும் கொடுத்தது.

கதையை நாடகமாக அமைத்ததில் அவரது இயல்பான தன்மை வெளிப்பட்டுள்ளமையைக் காணமுடிந்தது. ஒவ்வொரு பாத்திரத்திற்கும், கதையின் தன்மைக்கும், ஒவ்வொரு காட்சிக்கும் ஏற்ப அவர் தேர்ந்தெடுத்து புகுத்தியுள்ள நாட்டுக்கூத்து இராகங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலாக, இந்நூலிலுள்ள ஒவ்வொரு கூத்துகளும் நாட்டுக்கூத்து ஆர்வலர்களை கவரும், அவர்களைப் பாடத் தூண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்தகைய சிறப்புகளுடன் கூடியதாக இக்கூத்துக்கள் அமைந்துள்ளன. இவரது கலைப்பணி மேலும் தொடரவும், இவரது நாட்டுக்கூத்து ஆற்றல் மேலும் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

**அண்ணாவியார், யாழ் ரத்னா**

**த. யேசுராசா**

(குருநகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிறைவில் பாடலைப் பரிசீலித்த அண்ணாவியாரிடமிருந்து...

'கலையார்வன்' கு.இராயப்பு அவர்கள் 'குறுங்கூத்துக்கள்' என்னும் ஐந்து கூத்துகள் உள்ளடங்கிய இந்நூலின் பிரதியை என்னிடம் ஒப்படைத்து "நூலிலுள்ள அனைத்துப் பாடல்களும் உரிய இராக தாளத்துடன் அமைகின்றதா?" எனப் பாடிப் பரிசீலித்துத் தரும்படி கூறியிருந்தார். பாரிய பொறுப்பு, என்றாலும் மறுப்பின்றி ஏற்றுக்கொண்டேன்.

அவரது கோரிக்கையின்படி பாடல்களை, நூலில் குறிக்கப்பட்டுள்ள இராக, தாளத்தில் பலமுறை பாடிப் பார்த்தேன். மனதிற்கு நிறைவைத் தந்தது. அவ்வாறு பாடல்களைப் பாடிப் பார்த்தபோது என் மனதில் பட்டதை தெரிவிக்க வேண்டியது கடமையென்பதால் அவற்றை இங்கு அறியத்தருகின்றேன்.

நீண்ட தொடரைக்கொண்ட ஒவ்வொரு கதையிலும் கலையார்வன் தேர்ந்தெடுத்துள்ள பகுதியையும், கதையின் தன்மை கெடாமல் அதனை நாடகமாக அமைத்துள்ள சிறப்பையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

கதையில் உலாவரும் பாத்திரங்களுக்கு ஏற்பவும், கதை இடம்பெறும் சூழலுக்கேற்பவும் பொருத்தமாக, உயிரூட்டம் பெறும் வகையில் பாடல் மெட்டுக்களை தேர்ந்தெடுத்து புகுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. இது பாடுவதற்கு ஆவலைத் தூண்டும் யுத்தியாகவும் உள்ளது.

இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலும் சிரமம், தடங்கலின்றி பாடக்கூடிய வகையில் 'சீர்கள்' சிறப்பாக அமைந்துள்ளன. சீருடன் இணைந்தாற்போல் நாட்டுக்கூத்துக்கு முக்கியமான சந்தம், தாளம், தாளவரிசை போன்றவையும் சிறப்புற அமைந்துள்ளன. கலையார்வன் இவற்றில் கூடிய கவனம் செலுத்தியுள்ளமையை உணரக்கூடியதாக இருக்கின்றது.

சில பாடல்களில் 'வலிதான' சொற்களும் இணைந்துள்ளன. சில சொற்களை நேரிடையாக அல்லாமல் மறைமுகமாக வெளிப்படுத்துவதற்கும், சொல்ல வந்த கருத்தை குறியீடாக உணர்த்துவதற்குமென அத்தகைய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்மையை ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது. பாடலின் இராகத்திற்கேற்ப சொற்களைப் புகுத்துவதற்கும், சீருக்கு ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களை உருவாக்குவதற்கும் உள்ள வேறுபாடும் இத்தகைய வலிதான சொற்கள் இணைவதற்கு ஒரு காரணம். இருப்பினும் முன்னைய கூத்துக்களில் காணப்பட்ட வல்லினமான சொற்கள் பெருமளவு குறைந்து பார்வையாளர் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் இலகு சொற்கள் மேலோங்கியே காணப்படுகின்றமை பாராட்டத்தக்கது.

இந்நூலிலுள்ள ஐந்து கூத்துக்களின் பாடல்கள் யாவற்றையும் நான் பாடிப் பார்த்த வகையில் ஐந்து கூத்துக்களும் சிறப்பாக அமைந்துள்து. இவை ஆர்வலர்களுக்கும், பாடகர்களுக்கும், பார்வையாளருக்கும் விருந்தாக அமையும் என்பது திண்ணம்.

நன்றி

**அண்ணாவியார், கலாபூஷணம்**
**அன்ரனி பாலதாஸ்**
(பாஷையூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளத்திலிருந்து...

நூல் வரிசையில் 'குறுங்கூத்துக்கள்' என்னும் இந்நூல் எனது 14 ஆவது ஆக்கமாகும். 'கூத்துக்கள் - 5' என்னும் நூலுக்கு அரச இலக்கிய (சாகித்திய) விருது- 2010, தமிழியல் விருது- 2010, இலக்கியச் சான்றிதழ்- 2010 போன்றவை கிடைத்துள்ளமை மனதிற்கு மகிழ்வைத் தருகின்றது. மேலும் எழுதவும் தூண்டுகிறது. இந்நூலில் உள்ள கூத்துக்களுடன் இதுவரை பதினொரு கூத்துக்கள் எழுதியுள்ளேன். இவ்வாறு கூத்துக்களை எழுத முயற்சிப்பதற்கு; பாடசாலை மாணவர்களும், இளையோரும் நாட்டுக்கூத்துப் போட்டிகளில் பயன் படுத்துவதற்கு ஏதுவான முறையில் கூத்துக்களை எழுதவேண்டும் என்பதுடன் வேறு காரணங்களும் உள்ளன. அவை பின்வருமாறு:

எமது தனித்துவமான, பாரம்பரிய கலை வடிவமாக நிலைத்து நிற்பதும், அடையாளம் காட்டுவதுமான 'நாட்டுக்கூத்து' அழிவுறும் நிலையைத் தொட்டு நிற்பதாக உணரப்படும் இந்தக் காலகட்டத்தில், அதனை ஓரளவேனும் அழிவு றாது பாதுகாக்கவேண்டும் என்ற அவா...

பழைய கூத்துக்களை, அதுவும் சில கூத்துக்களை மட்டும் திரும்பத் திரும்ப மேடையேற்றுவதால் மக்களிடையே ஏற்படும் சலிப்பைப் போக்கி, அவர்களுக்கு இரசனையை ஏற்படுத்தும் வகையில் மாறுபட்ட வரலாற்றுக் கதைகளைக் கொண்ட புதிய கூத்துகளை எழுதுவதன் மூலம் நிவர்த்திசெய்து, புதிய மேடையேற்றத்திற்குச் சந்தர்ப்பம் அளிக்க முடியும் என்ற நம்பிக்கை...

கூத்துப்பாடல்களில் வழக்கிலிருந்துவந்த கடின சொற்பாணியை கூடியவரை தவிர்த்து இலகுவில் எவரும் புரிந்துகொள்ளவும், பொருள் விளங்கிக் கொள்ளவும் தக்கவகையில் எளிமையான மொழிநடையில் சொற்களை அமைத்து கூத்துப் பாடகர்களுக்கு இலகுவையும், பார்வையாளர்களுக்கு கூத்தில் ஒன்றிப் பையும் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம்...

தொடர்ந்துவரும் தலைமுறையினரும் சிரமமின்றி கூத்துக்களைப் பாடுவதற்கும், பழக்குவதற்கும் ஏற்றவகையில், தேர்வுசெய்யப்பட்ட பாடலின் மெட்டு (மூல மெட்டு); அம்மெட்டு பாடப்பட்ட கூத்து; பாடலுக்கான இராகம்; தாளம்; போன்றவற்றை உரிய முறையில் வெளிப்படுத்தி ஊக்கமளிக்கவேண்டும் என்ற ஆவல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கள் பலவற்றில் காணப்படுவதுபோலல்லாமல் சீர், தளை, அடி போன்றவை சிறப்புற அமைய முயற்சிக்கவேண்டும் என்ற விருப்பம்...

காலத்தின் தேவைக்கேற்ப, மக்களின் இயந்திர வாழ்வியற் சூழலுக்கேற்ப குறைந்த நேரத்தில் மேடையேற்றத்தக்க கூத்துக்களை உருவாக்குவதன் மூலமே பலரும் பயன்படுத்தவும், பார்வையாளரிடையே ஈர்ப்பை ஏற்படுத்தவும் முடியும் என்ற சிந்தனை... போன்றவையாகும்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்." என்ற பாரதியாரின் கூற்று இங்கு நோக்கத்தக்கது

கூத்துக்களின் உருவாக்கத்தில், பாடல்களின் இராக, தாளத்தைப் பரிசீலித்து சீரிய முறையில் நிறைவுசெய்ய அண்ணாவிமாரின் பணி அவசியமாக இருந்தது. இந்நூலிலுள்ள பாடல்கள், அவர்களால் பலமுறை பாடப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. இதற்கு ஆரம்பம் முதல் நிறைவான ஒத்துழைப்பை வழங்கிய 'யாழ் ரத்தினா' அண்ணாவி த. யேசுராசா (குருநகர்) அவர்களுக்கும், நூலை நிறைவுசெய்த பின்னர் பாடல்களை பரிசீலனை செய்த 'கலாபூஷணம்' அண்ணாவி அ. பாலதாஸ் (பாசையூர்) அவர்களுக்கும்;

எனது வேண்டுகோளை மறுப்பின்றி ஏற்று இந்த நூலை பொறுமையுடனும், பொறுப்புடனும் வாசித்து நூலுக்கு அணிகலனாய், பொருத்தமான அணிந்துரையை வழங்கிய புலவர் வேல்மாறன் அவர்களுக்கும்;

பல்வகை சுமைகளின் மத்தியிலும் கணினிசார் வேலைகளைச் செய்து, எண்ணம்போல் வடிவமைத்து உதவியதுடன் வெளியீடு செய்ய முன்வந்த 'ஜெயந்த் சென்ரர்' நிறுவனத்தினருக்கும்;

அட்டை ஓவியத்தை வரைந்து உதவிய திருமதி பப்சி மரியதாசன் அவர்களுக்கும்;

எழுத்துக்களுடன் ஒட்டிக்கொண்ட பிழைகளைக் கண்டறிய உதவிய திரு. றோ. க. கில்பேட், திரு. யோ. மரியாம்பிள்ளை ஆகியோருக்கும்; அச்சிட்டு உதவிய யே. எஸ். பிரின்டர்ஸ் நிறுவனத்தினருக்கும்;

வாசகர்களாகிய உங்களுக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகிறேன்.

ஒவ்வொருவரும் காட்டிய அசாதாரண சிரத்தையையும், பொறுமையையும், மிகுந்த கவனத்தையும் நினைத்து எனது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி

அன்புடன்,
**கலையார்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உள்ளே...


கூத்து - ஒன்று

சகுந்தலை ........................ 01

கூத்து - இரண்டு

அனார்க்கலி ........................ 31

கூத்து - மூன்று

காசியப்பன் ........................ 63

கூத்து - நான்கு

மந்தரை சூழ்ச்சி ........................ 93

கூத்து - ஐந்து

சங்கிலி செகராசசேகரன் ........................ 127

பின்னிணைப்பு

மாதிரி காப்பு பாடல்கள் ........................ 156

மாதிரி வாழி பாடல்கள் ........................ 158

மாதிரி மங்களம் பாடல்கள் ........................ 159




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

## கூத்து ஒன்று



# சகுந்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச்சுருக்கம்

குடிமக்களை துன்புறுத்திய மிருகங்களை வேட்டையாடச் சென்ற மன்னன் துஷ்யந்தன், கண்ணுவர் ஆச்சிரமத்தில் செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்த சகுந்தலை என்னும் பெண்ணைக் காண்கிறான். செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும்பொழுது வண்டு ஒன்று சகுந்தலையைத் துன்புறுத்த, மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த துஷ்யந்தன் முன்வந்து அவளைக் காக்கிறான். சகுந்தலை; விசுவாமித்திரர் - மேனகை ஆகியோரின் மகளெனவும், கண்ணுவர் மகரிசியின் வளர்ப்பு மகளெனவும் தோழிகள் வாயிலாக அறிந்த துஷ்யந்தன் அவள்மீது காதல் கொள்கிறான். அவளும் அவன்பால் காதல் கொள்கிறாள்.

துஷ்யந்தன் நாடு திரும்பவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் இருவரும் மனமொத்து காந்தர்வ மணம் புரிகிறார்கள். காந்தர்வ மணத்தின் அடையாளமாக துஷ்யந்தன் தனது கணையாளியை சகுந்தலைக்கு அணிவித்து நாடு திரும்புகிறான்.

எதிர்பாராமல் ஆசிரமம் வந்த துருவாசர், சகுந்தலை நினைவிழந்து, தம்மை எதிர்கொண்டு வரவேற்காதது கண்டு சினந்து "எவனைத் தியானம் செய்துகொண்டிருக்கிறாயோ, அவன் உன்னை மறந்துபோவானாக!" எனச் சாபமிடுகிறார். பின்னர், சகுந்தலையின் தோழியான அனசூயையின் வேண்டுதலுக்கு மனமிரங்கிய துருவாசகர் 'அடையாளம் கண்டு, மீண்டும் பழைய நினைவுடன் அவளை ஏற்றுக் கொள்வான்' எனச் சாப விமோசனமும் கூறுகிறார். நாடு திரும்பிய கண்ணுவர் சகுந்தலையை அழைத்துக்கொண்டு துஷ்யந்த மன்னன் ஆளும் அத்தனாபுரி நோக்கிச் செல்கிறார்....

## பாத்திரங்கள்

கட்டியகாரர்
சகுந்தலை
துஷ்யந்தன் (மன்னன்)
கண்ணுவர் (முனிவர்)
துருவாசகர் (முனிவர்)
அனசூயை (தோழி)
பிரியம்வதை (தோழி)
வீரன்
சீடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுந்தலை

## காட்சி - 1

**இடம் : வீதி (திரைக்கு முன்னால்)**

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

அங்கம் குலுங்கிட தங்கநிறக் கோலினை ஏந்தி
கிங்கிணித் தாளமும் சலங்கையும் சேர்ந் தொலிக்க
சிங்கார மாநகர மக்களுக்கு சங்கதி கூறவென்றே
மங்கல மொழி கட்டியகாரர் சபைதனில் வருகிறாரே

**கட்டியகாரர் ஆடியவாறு வரல்**

**மெட்டு : நவசங்க சபைதங்கு** *(தேவசகாயம்பிள்ளை, பக். 120)*
**தாளம் : ஆதி (மிஸ்ர நடை)** **இராகம் : கீரவாணி**

***கட்டியகாரர்:***

பகைகொண்ட பலமன்னர் வென்றுமே - நாளும்
பசிதீர்ப்போன் நாட்டிலே - எழில்
நகைமுட்டும் மங்கையைப் பாடவே - இப்போ
நாங்களு முங்கள்முன் தோன்றினோமே

அணிகொண்ட மலர்தனைச் சூடினாள் - பணி
அயராதுபுரிந் தேகினாள் - தன்
கணையாளி இழந்ததன் கதையினை - உடன்
கருத்தாக உரைக்கவெனத் தோன்றினோமே

சகுந்தலை என்னுமோர் தாரகை - கண்ணுவர்
சன்னிதானத்தில் வாழ்பவள் - புதிர்
புகுந்ததே வாழ்வினில் துணையென - அதனை
பண்புடன் எடுத்தோதிடத் தோன்றினோமே

**கட்டியகாரர் ஆடியவாறு உள்ளே செல்லுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகுந்தலை வரவு

**மெட்டு : வானநாதா** *(தேவசகாயம்பிள்ளை, பக். 29)*

**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : நடபைரவி**

***சகுந்தலை:***

காணுமிந்த அழகைப் படைத்தோனின் - பாதம்
காணவிழையும் பேதை நானல்லோ
ஈனப்பிறவி யெடுத்தவ ளானேனே - இதை
ஈறாகவே எடுத் துரைப்பேனோ

விசுவாமித்திர முனிவரின் மகள்நானே - என்னை
வளர்த்தவர் கண்ணுவ முனிதானே
அசையாத உறுதியை கொண்டுமே - வாழும்
அரிவை சகுந்தலை நான்தானே

## கண்ணுவர் மகரிஷி வரல்

***சகுந்தலை:***

தந்தையே! தாங்கள் என்னைத் தேடி இங்கு...

***கண்ணுவர்:***

ஆம் மகளே! உன்னை தக்க ஒருவனுக்குத் திருமணம் செய்து வைக்கும்வரை எனக்கு ஓய்வேது. நான் பாரிய பொறுப்பை சுமக்க வேண்டியவனாக உள்ளேன.

***சகுந்தலை:***

இப்போ ஏன் தந்தையே இந்த அவசரம்.

***கண்ணுவர்:***

நேரம் நெருங்குகிறதை உணருகிறேன் சகுந்தலை.

**மெட்டு : தார்தலத்தோர்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 84)*

**தாளம் : கரகரப்பிரியா** **இராகம் : ரூபகம்**

***கண்ணுவர்:***

சந்திரனொளி முகத்தாள் - எனதரும்
சற்குணவதி யானமகளே
சிந்தைநிறை அன்பால் - என்தோளில்
சுமந்து வளர்த்தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகுந்தலை:**

கண்ணாயுமை நினைத்தேன் - கருணைக்
கடலாயெனை பாதுகாத்தே
வேண்டியதெலாம் அளித்தே - வாழ்வினை
விளங்கிடச் செய்தீரே

**கண்ணுவர்:**

அன்புறு மகளாய்நீயும் - என் குடிலில்
அறிவுடன் வளர்ந்தாயே
துன்புறலற்ற மேன்மையை - தந்தநானும்
துயரோங்க விடுவேனோ

**சகுந்தலை:**

பண்புள்ள வளர்தந்தையே - என்றென்றும்
பாசம் மறப்பேனோ
எண்ணிநான் ஏக்கமுற - துன்பம்
எதுவுமெனக் கில்லையே

**கண்ணுவர்:**

இல்லையம்மா உன்னை சிலகாலம் பிரியும் நேரம் வந்து விட்டது.

**சகுந்தலை:**

தந்தையே என்ன சொல்லுகிறீர்கள்?

**கண்ணுவர்:**

உண்மை மகளே! நான் தீர்த்த யாத்திரை செல்லவேண்டும். நான் திரும்ப நீண்ட நாட்கள் தேவைப்படும். அதுதான் என் கவலை. வா ஆச்சிரமம் செல்வோம்.

இருவரும் போதல்
துஷ்யந்த மன்னன் வரவு

**மெட்டு : மதிமெத்திய சூரன்** *(கண்டி அரசன், பக். 07)*

**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : ஹம்சத்வனி, கீரவாணி**

**துஷ்யந்தன்:**

பகைவென்ற தீரன் பார்மெச்சும் வீரன்
தகைகொண்ட மேலோன் தளராத மார்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் மெச்ச பதில்கூறும் உச்ச
துஷ்யந்த மன்னன் தேரில் வந்தேனே
வேற்புயம் விளங்கி விந்தைசேர் துலங்க
பொற்புயம் புகழ பொங்குபடை கொண்டோன்
நற்றளம் கோட்டை கொண்டுமே காக்கும்
அத்தனா புரியாளும் அரசனும் நானே

**வீரன் அம்பு வில்லுடன் வரல்**

***வீரன்:***

அரசே! தாங்கள் குறிப்பிட்ட இடத்தில் நன்கு தேடிப் பார்த்தேன் தொல்லை தரக்கூடிய மிருகங்கள் பெரிதாக எதனையும் காணவில்லை.

***துஷ்யந்தன்:***

அப்படியானால் மக்கள் தந்த முறைப்பாடு?

***வீரன்:***

இனங்கண்ட சிலவற்றைக் கொன்றேன். ஒரு மான் மட்டும் வேகமாக ஓடி மறைந்து செல்கிறது. அதை என்னால் இலக்கு வைக்க முடியவில்லை.

***துஷ்யந்தன்:***

விசித்திரமானாக இருக்கிறதே! இதை விடக்கூடாது. நீ வந்த திசையாலே செல். நான் எதிர்த்திசையில் எதிர்கொள்ளுகிறேன்.

**துஷ்யந்த மன்னனும் வீரனும் இருபுறமாக உள்ளே செல்லுதல்**
**கண்ணுவர் ஆச்சிரம சீடர்கள் வரல்**

மெட்டு : **பொன்னும் நிறமும்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 77)*
தாளம் : **ரூபகம்** **இராகம் : சிந்துபைரவி**

***சீடன்-1:***

கண்ணுவ முனிவரை ஆசானாய் பெற்று
கானகம் தன்னிலே குறையின்றி வாழ்கிறோம்
கடந்த வாழ்வில் அடைந்த பயன்கள்
கிடைத்தபாக்யமே - அனைத்துமே - ஆசான்தந்ததே

***சீடன்-2:***

இல்லை யென்காத கண்ணுவ மகரிஷி
இன்னல் களைவதில் இணையிலா பேரொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள முருகிட அணைக்கும் தாயவர்
அள்ளியிறைக்குமே - கள்ளமில்லா - உள்ளமவரதே

**துஷ்யந்தன் மன்னன் அம்பு வில்லுடன்**
**மானுக்கு இலக்கு வைத்தவாறு வரல்**
**சீடர்கள் மானை இனங்காணுதல்**

*சீடன் - 1:*

வேண்டாம் பிரபு வேண்டாம். சற்றுப் பொறுங்கள் பிரபு!

**துஷ்யந்த மன்னன் நிற்றல்**

*சீடன்-2:*

பிரபு! நாங்கள் கண்ணுவர் மகரிஷியின் சீடர்கள். தாங்கள் துரத்தி வந்தது எமது ஆச்சிரமத்து மான். அதனைக் கொல்லுவது ஆசாரமல்ல.

*சீடன்-1:*

பிரபு! எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள். அண்மையில்தான் ஆச்சிரமம் இருக்கின்றது. மானைக் கொல்லாமல் விடுத்து ஒருமுறை வந்து தரிசித்துச் செல்லுங்கள்.

**துஷ்யந்தன்:**

உங்கள் கோரிக்கை நியாயமானதே. இன்று விபரீதம் நிகழாமல் தடுத்ததற்கு நன்றி. நான் உங்கள் ஆச்சிரமம் செல்கிறேன்.

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 2

## இடம் : நந்தவனம்

சகுந்தலை, அனசூயை, பிரியம்வதை வரல்

மெட்டு : அங்கே பாராய் (விசயமனோகரன், பக். 32)
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை) இராகம் : சங்கராபரணம்

***சகுந்தலை:***

தொங்கும் கொடியில் தங்க நிறமாய்
துலங்கும் பூக்களே - அதில்
பங்கம் இல்லாது அங்கு மிங்குமாய்
படரும் துளிர்களே

***பிரியம்வதை:***

திங்கள் கண்டதும் மலரும் பங்கயம்
தடாகம் நிரம்பவே - அதன்
அங்கம் முழுதும் குங்கும நிறம்
அணைக்கச் சொல்லுதே

***சகுந்தலை:***

கொங்கார் றோசா தொங்கும் அழகு
களிக்க அழைக்குதே - அங்கே
சிங்கம் போலவே சிலிர்த்து நிற்கும்
செந்நிற மலர்களே

***அனசூயை:***

ரஞ்சித மலர் மஞ்சம் விரித்து
ரசனை தூண்டுதே - அதன்மேல்
கொஞ்சும் கிளிகள் கவலை இன்றியே
கூடியும் குலாவுதே

**துஷ்யந்தன் ஆச்சிரமம் வரும் வழியில் சகுந்தலையையும்
தோழியரையும் கண்டு மறைதல்
அவர்கள் துஷ்யந்தனைக் காணவில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியம்வதை:

செடிகளுக்கு தண்ணீர் வார்க்க வேண்டும் நாங்கள் குடங்கள் எடுத்து வருகிறோம்.

சகுந்தலை:

அதுவரை நான்...

அனசூயை:

வழமைபோல் மலர்களுடன் பேசு.

**அனசூயை, பிரியம்வதை போதல்**
**சகுந்தலை மலர்களை பார்வையிடல்**
**இருவரும் மூன்று குடங்கள் எடுத்து வரல்**
**பாடலின்போது குடத்தில் நீரெடுத்து மரங்களுக்கு ஊற்றுதல்**

**மெட்டு : பூரண சந்திர** *(கண்டி அரசன், பக். 28)*
**தாளம் : ஆதி** **இராகம் : சிந்துபைரவி**

சகுந்தலை:

கண்ணுவர் குடிலில் கண்ணிய மாகவே
குலவிடு மெந்தன் தோழி மாரே
எண்ணரும் செடிகள் சோர்ந்து விடாமல்
எடுத்தே நீர் ஊற்று வோமே

பிரியம்வதை:

மின்னிடும் அழகை முன்னிலைப் படுத்தும்
மஞ்சள் செடியின் எழிலைப் பாரீர்
தண்ணீர் ஊற்றியே தளிரைக் காத்துமே
துணையாய் அதற் கிருந்திடு வோமே

அனசூயை:

மயிலதின் ஒயில்நடை கொண்ட தோழியே
மங்கையர் மனமதில் நிறைந்த சேடியே
குயிலதன் குரலினை வென்ற சுந்தரி
குறைவின்றி நீர் ஊற்றிடு வோமே

**வண்டு ஒன்று சகுந்தலையைத் துரத்துகிறது**
**அனசூயை, பிரியம்வதை செய்வதியாது நிற்கும்வேளை**
**துஷ்யந்தன் வெளிப்பட்டு காப்பாற்றுகிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கணம் துஷ்யந்தன் சகுந்தலையை ஏறெடுத்துப் பார்த்தல்

மெட்டு : எண்சீர் விருத்தம் இராகம் : சங்கராபரணம்

**துஷ்யந்தன்:**

*மாமயில் தோகையை விரித்தாடும் காட்சி*
*மனதிற்கு மகிழ்வினை தருவது போலவே*
*கோமகளென நிற்பதை கணமதில் கண்டேநான்*
*கோடிபெற்ற மகிழ்வில் குளிர்ந்து விட்டேன்*
*காமனும் கணைவீசும் கன்னியின் அழகு*
*குவிந்த ஒளியாக குவலயம் வந்து*
*சாமரம் வீசிடும் காட்சியாய் அமைந்திட*
*கன்னியும் எந்தன் கண்ணெதிர் வந்தாளே*

மெட்டு : மதனத்துரையே *(அலங்காரரூபன், பக். 90)*
தாளம் : ஆதி மெட்டு : சிந்துபைரவி

**துஷ்யந்தன்:**

*கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியம்*
*கண்டு மலைத்தேனே - தினம்*
*விண்ணில் உலவும் விண்மீன் சுடரோ*
*விடியுமதி காலைக் கதிரோ - வந்து*
*விழுந்த தங்கச்சிலை ஆனதுவோ*

*கானகம் தன்னில் காவியம் போலொரு*
*கன்னியைக் கண்டேனே - இவள்*
*தேனின் இனிமையோ தெவிட்டாத சுவையோ*
*தேடியெடுத்த தேன்தமிழ் பாவோ - இல்லை*
*தேரினில் வந்த தேவதையாளோ*

சகுந்தலை துஷ்யந்தன் எதிரெதிரே சந்தித்தல்
நாணிப் புன்னகையுடன் உள்ளே செல்லுதல்

**அனுசூயை:**

*எங்கள் தோழிக்குச் செய்த உதவிக்கு கோடி நன்றிகள் பிரபு. நாங்கள் விடைபெறுகிறோம்.*

**துஷ்யந்தன்:**

*உதவிசெய்த என்னைத் துணையின்றி விட்டுச் செல்லுகிறீர்களே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரியம்வதை:**

மன்னிக்கவேண்டும் பிரபு. தங்களை நாம் இதுவரை கண்டதில்லை. தாங்கள்...

**துஷ்யந்தன்:**

அத்தனாபுரி மன்னன் நான். வேட்டையாட வந்தேன். அழகிய பெண் மான் ஒன்றைக் கண்டேன். யார் அந்தப் பெண் என்பதை அறியலாமா?

**அனசூயை:**

அவள் எமது உயிர்த்தோழி சகுந்தலை. எப்போதும் பயந்த சுபாவத்தைக் கொண்ட அவள், விசுவாமித்திரரின் மகள்.

**துஷ்யந்தன்:**

விஸ்வாமித்திரரின் மகளா? அவள் எவ்வாறு இங்கே...!

**பிரியம்வதை:**

இமய மலைச்சாரலில் தவமிருந்த விசுவாமித்திரர், இந்திரனால் அனுப்பப்பட்ட மேனகாவின் அழகில் மயங்கி, காமவசப்பட்டு அவளுடன் கூடியதன் விளைவாய் இருவருக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அவர்கள் குழந்தையைக் காட்டில் விட்டுச் சென்றனர்.

**அனசூயை:**

அந்த வழியே வந்த கண்ணுவமகரிஷி, குழந்தையின் அழுகுரல் கேட்டுத் திரும்பியபோது சகுந்தலைப் பட்ஷிகள் தமது சிறகுகளால் சூரிய ஒளியிலிருந்து குழந்தையைப் பாதுகாத்து வந்ததைக் கண்டார். உடனே அக்குழந்தையை தமது கரங்களால் அணைத்து ஆச்சிரமத்துக்கு எடுத்துவந்து சகுந்தலை எனப் பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தார்.

**பிரியம்வதை:**

தக்கவொருவனுக்கு மணம் முடிக்கும் நாள் வரை அவள் கண்ணுவரின் வளர்ப்பு மகளாக இருப்பாள்.

**துஷ்யந்தன்:**

இந்த விபரத்தை சகுந்தலை அறிந்திருக்கிறாளா?

**அனசூயை:**

ஒருதடவை கண்ணுவமகரிஷியும் முனிவர் ஒருவரும் இவள் பிறப்புப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தபோது கேட்டு அறிந்து கொண்டாள்.

**பிரியம்வதை:**

இவை போதுமா? அல்லது...

**துஷ்யந்தன்:**

போதும்... என்னைப் பற்றி உங்கள் தோழியிடம் சொல்ல முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அனசூயை:*

*ஏன்?... ஓகோ கண்டதும் மையலோ... சரி சொல்லுகிறோம். தங்களை எப்படி அழைப்பது என்று சகுந்தலை கேட்டால்?*

*துஷ்யந்தன்:*

*துஷ்யந்தன் என்று சொல்லுங்கள்.*

*பிரியம்வதை:*

*நாங்கள் இப்போது போகலாமா?*

**துஷ்யந்தன் புன்னகையுடன் தலையசைத்தல்**
**தோழியர் உள்ளே செல்லுதல்**

**மெட்டு : கச்சளமொத்து நெய்** *(அலங்காரரூபன், பக். 78)*
**தாளம் : ஆதி** **இராகம் : நடபைரவி**

*துஷ்யந்தன்:*

*நெஞ்சி லுறைந்திட்ட செவ்விள முகத்தாளோ*
*மஞ்சம் பகிர்ந்திட இசைந்து வருவாளோ*
*கொஞ்சு மிதழினை தஞ்சமென் றெண்ணியே*
*வஞ்சக மின்றி வாஞ்ஞையா யணைத்து*
*சுவைக்கக் கிடையாளோ - உடன்*
*அவைக்கு வருவாளோ - தன்*
*தேவை உரைப்பாளோ - கண்டு*
*பாவை சிரிப்பாளோ*

*கண்ணினால் கண்டே மையலுங் கொண்டேனே*
*எண்ணத்தால் நானும் விரகங் கொண்டேனே*
*திண்ணமாய் அவளை மணக்கத் துணிந்தேனே*
*பெண்ணும் சம்மதம் தந்தெனை யணைத்து*
*சுகத்தைத் தருவாளோ - தினம்*
*முகத்தால் இணையாளோ - என்னை*
*அகத்தில் ஏற்பாளோ - ஏற்று*
*முகமன் மொழிவாளோ*

**துஷ்யந்தன் உள்ளே போதல்**
**சகுந்தலை வரல்**
**அவள் முகத்தில் வாட்டம் தெரிகிறது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : ஐயையோ கெட்டேனே** *(தேவசகாயம்பிள்ளை, பக். 41)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : சங்கராபரணம்**

***சகுந்தலை:***

*கடுகணம் நடந்ததோர் நிகழ்வால்*
*கவலைக் குள்ளானேனே - என்றும்*
*கடுமனம் கொண்டதென் வாழ்வினை*
*கடுதினில் கடுகாயு டைத்தேனே*

*என்நெஞ்சிற் புகுந்ததே துயரம்*
*எவருக்குத்தான் தெரியும் - அன்று*
*மின்னலாய் கவர்ந்தாரே உள்ளத்தை*
*மறுத்திட மரபேது என்பேனே*

*கண்ணுவ மகரிஷியிதை அறிந்தால்*
*கடிதாய் ஏசிடுவாரோ - மண்ணில்*
*என்றுமே அவர்பிள்ளை நான்தான்*
*ஏற்று அபயம் தருவாரோ*

**தோழியர் வரல்**

***பிரியம்வதை:***

*சகுந்தலை!*

**சகுந்தலை கேட்காமல் நிற்றல்**

***அனசூயை:***

*சகுந்தலை!*

**சகுந்தலை திடுக்குற்று திரும்புதல்**

**மெட்டு : வாரும் வாரும் நீலம்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 52)*
**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : ஹரிஹாம்போதி**

***பிரியம்வதை:***

*வாராய் கேளாய் சகுந்த லையாளே - தனியே*
*வந்ததென்ன பதில் சொல்வாய் - உயர்*
*பேருங் குலமதைக் கொண்டாய் - வந்த*
*பண்பென்ன நீயே சொல்வாய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகுந்தலை:**

மானினம் வாழுமிக் கானகமே தோழி - இது
மகிழ்வுறத் தக்க நேரமே கேளாய் - அங்கே
நாணியே இருளுது அடிவானம் - பார்த்து
நான் மகிழ வந்தேனே பாங்காய்

**அனசூயை:**

ஏனிந்தப் பொய் யெமக் குரைத்தாய் - பதில்
ஏற்ற தில்லையென்றே கணம் விழித்தாய் - வந்த
நாணத்தை மறைக்கவே துணிந்தாய் - நாமும்
நங்கைய ரென்பதை யேன் மறந்தாய்

**சகுந்தலை:**

உண்மையை உரைக்கிறேன் நங்கைகாள் - உள்ளம்
உந்துது தொல்லை பல தந்துமே - நேற்று
எண்ணத்தில் பதிந்தா ரோரிளங் காளை - அந்த
எண்ணமே எனை யிங்கு அழைத்ததே

**அனசூயை:**

ஓகோ! வண்டிலிருந்து காப்பாற்றிய மன்னவன் வண்டாக மாறி மனதிற்குள் புகுந்துவிட்டாரோ?

**சகுந்தலை:**

........

**பிரியம்வதை:**

கண்ணியக் காதலில் மூழ்கிவிட்டாய். இனிமேல் எங்களையும் வெறுத்திடுவாய்... வா போகலாம்.

**சகுந்தலையும் தோழியரும் போதல்**
**துஷ்யந்தன் வரல்**

மெட்டு : **செப்பரிய பூவில்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 44)*
தாளம் : **ரூபகம்** **இராகம் : நடபைரவி**

**துஷ்யந்தன்:**

மங்கைநினை வினாலே வந்தசோகம் - நாளாய்
மெருகுஏறி எனைக் கொல்லுதேதினம்
பங்கமின்றி பகருவாளோ காதல்மொழி - அவள்
பேசும்பொற் சித்திரமாய் நின்றாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்விழிமா தினைதினம் மனந்தேடுதே - இப்போ
மாலைசூடி மகிழ்கொள்ள வருவாளோ
தேன்மொழியை பேசுமந்த தேவதையாளோ - என்று
தேர்வேந்தன் மணமகளாய் நிற்பாளோ

**பிரியம்வதை, அனுசூயை வரல்**

**பிரியம்வதை:**

பூவுலகினா சைகளோ பொல்லாதே - அதை
பொறுதியுடன் காத்திடுக மன்னவரே
ஆவதெல்லாம் இறைவனின் சித்தமே - மன
அமைதியையே நாடிடுவீர் ஐயனே

**அனசூயை:**

கண்டதுங்காதல் கொண்டனை மன்னா - உமைக்
கண்டதால் ஊமையுமாகினாள் நங்கை
கொண்டதுகோலம் என்றவள் தொடர்ந்து - இப்போ
காதலாகினாள் காரிகை யன்றோ

**துஷ்யந்தன்:**

நீங்கள் சொல்வது...

**பிரியம்வதை:**

உண்மை... அவள் பேச்சில், செயலில் மாற்றத்தைக் காண்கிறோம். உங்கள் நிலைபோல்தான் சகுந்தலையின் நிலையும்.

**துஷ்யந்தன்:**

கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. என் எண்ணம் ஈடேறப் போகிறது. உங்களிடம் ஒரு உதவி...

**அனசூயை:**

கேளுங்கள்...

**பிரியம்வதை:**

உங்கள் தோழியை நான் சந்திக்க முடியாதா?

**அனசூயை:**

.... கண்வர் மகரிஷி தீர்த்த யாத்திரை சென்றிருப்பதால் அவளைச் சந்திக்க ஏற்பாடு செய்யலாம் என்றே நம்புகிறோம்.

**பிரியம்வதை:**

நாளை ஆச்சிரமத்திற்கு வடதிசையிலுள்ள ஆற்றோரம் வாருங்கள். அங்கே அவளை அழைத்துவர முயற்சிக்கிறோம்.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 3

## இடம் : ஆற்றோரம்

**சகுந்தலை முன்வர அனசூயை, பிரியம்வதையும் தொடர்தல்**

*பிரியம்வதை:*

*மன்னவனை இல்லையில்லை... மன்மதனைச் சந்தித்த சில நாட்களிலே சகுந்தலை நன்றாக இளைத்துவிட்டாள்.*

*அனசூயை:*

*இந்த நிலை நீடித்தால்... நினைக்கவே பயமாயிருக்கிறது. சகுந்தலை! உடம்பையும் கவனித்துக்கொள்.*

*சகுந்தலை:*

*உங்களின் கேலிக்கு அளவேயில்லையா?*

**சகுந்தலை திரும்பி கையை விலாவில் ஊன்றியபடி**
**ஆற்றோரத்தைப் பார்த்தவாறு நிற்றல்**
**துஷ்யந்தன் வரல்**
**அனசூயையும், பிரியம்வதையும் விலகிச் செல்லுதல்.**

**மெட்டு : காணரும் மேலான** *(எஸ்தாக்கியார், பக். 26)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம், மாயா மாளவ கௌளை**

*துஷ்யந்தன்:*

**பல்லவி**

தேவரும் கண்டிடா நங்கையோ - கண் காண்பது
தேவரின் லோகத்து மங்கையோ

**அனுபல்லவி**

நாணலாய் வளைந்து நூலிடை சேர்ந்திசைந்து
நானிலம் வந்ததோர் விண்மீன் உருவமோ
- தேவரும்

**சரணம்**

காமன் வடித்த காவிமலர்க் கண்ணாளோ
கவிஞர் உரைத்த கற்பனைப் பெண்ணாளோ
தாமரைப் பூவிதழின் தாயுறவு முறையாளோ
தேவரும் மயங்கிய தெவிட்டாத கலையகமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் காதலலை பாயுதே விழியாலென்னை
வாவென் றழைத்தே நின்றாளோ
என்றென்றும் இதயம் கவர்ந்த ஏந்திழையாள் இவளே

**துஷ்யந்தன்:**

எழில்தரு கற்சிலை உயிர்பெற்று விட்டதோ?

**சகுந்தலை நாணத்துடன் திரும்புதல்**
**தலை கவிழ்ந்தவாறு நிற்றல்**

**துஷ்யந்தன்:**

சகுந்தலை...! உன்னைக் கண்டதுமுதல் என்னை இழந்தேன். இப்போ எதிலும் நாட்டமில்லையெனக்கு. என் காதலை ஏற்றுக் கொள்ளுவாயா?

**சகுந்தலை சம்மதித்ததுபோல் புன்னகைத்தல்**

**மெட்டு : பொறையு முத்தம்** *(மரியதாசன்; பக். 45)*
**தாளம் : ஏகம்** **இராகம் : புன்னாகவராளி**

**துஷ்யந்தன்:**

சிரித்த முகமோ குறித்த மொழியால்
சிந்தை குளிர்ந்தேனே - அகம்
விரிந்த மலர்ச்சி முகத்தில் தெரிய
வாழ்வைப் புரிந்தேனே

மங்கை எழிலோ மனதைக் கவர்ந்தே
மருவ அழைக்குதே - அவள்
அங்கம் புடைத்து மிளிரும் அழகில்
அணைக்கத் துடிக்குதே

**துஷ்யந்தன்:**

சகுந்தலை! நான் வேட்டையாட வந்த இடத்திலே தற்செயலாக உன்னைச் சந்தித்தேன். அக்கணமே உன்னை என் மனைவியாக்கிட விரும்பினேன்.

**சகுந்தலை:**

என் நிலையும் அதுவே. எந்நேரமும் உங்கள் நினைவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : அஞ்சுகமே (தேவசகாயம்பிள்ளை, பக். 35)
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : ஹரிஹாம்போதி

**துஷ்யந்தன்:**

நெஞ்சமற நிறைந்த பெண்ணாளே - நானும்
நெக்குருகி நின்றேன் காதற்போதையாலே
அஞ்சுகின்ற குணநிறைப் பேதையாளே - மருவ
ஆவல்தனை கொண்டேன் உன்குணத்தால்தானே

**சகுந்தலை:**

ஆச்சிரம பெண்ணாய் வளர்ந்தேனே - என்றும்
ஆசையற்ற வாழ்வு எனக்கொண்டதாலே
துச்சமென எனைக்காக்கத் துணிந்தீரே - இப்போ
தூண்டிற் புழுவாகி துடிக்கிறேன்நானே

**துஷ்யந்தன்:**

காலையல ருங்கமல முகத்தாளே - கண்டு
காதலுறா ஆடவரும் உண்டோபாரில்
மாலைசூடி இணைந்திடவே திடங்கொண்டு - உடன்
மாதேயுன்னை தேடிவந்தேன் ஆசைகொண்டதாலே

**சகுந்தலை:**

வீரமிகு மன்னவராய் கண்டேனுமை - நானோ
வலிமையற்ற பெண்ணாய் நிற்கின்றேனே
பார்புகழும் கண்ணுவ முனிவர்க்கு - நானும்
பாதகம் செய்திட்டேன் இப்பொழுதுதானே

**துஷ்யந்தன்:**

சகுந்தலை... நான் இங்கு வந்து அதிக நாட்களாகிவிட்டது. என் பணி நாட்டிற்கு அவசியமானது. நாம் தாமதியாது திருமணம் செய்துகொள்வதுதான் நல்லது.

**சகுந்தலை:**

உங்கள் பணியை உணருகிறேன். என் வளர்ப்புத் தந்தை வந்தவுடன் உமது கருத்தினை நிறைவேற்றுவதே தங்களுக்குத் தகுதியானது

**துஷ்யந்தன்:**

எனக்கும் அதுதான் விருப்பம்தான். ஆனால் அதுவரை என்னால் தாமதிக்க இயலாதே... ஒன்றைக் கேள் சகுந்தலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : **விருத்தம்** இராகம் : **சங்கராபரணம்**

***துஷ்யந்தன்:***

பிரமம் பிரசாபத்தியம் பைசாசம் காந்தருவம்
ஆரிடம் இராக்கதம் அசுரம் தெய்வமென
ஈர்நாலு வகையான திருமணங்கள் உள்ளதே
யாருமின்றி இருவருந் தன்னிடத் தெதிர்ப்பட்டு
புரிந்துகொண்டு தாமே கூடுவது காந்தருவமணம்

***சகுந்தலை:***

நீங்கள் கூறுவது புரியவில்லையே.

***துஷ்யந்தன்:***

சகுந்தலை! கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந் தன்னிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவதற்சாய் ஏற்படுத்தப்பட்டதே காந்தருவமணம். இதனை உன் வளர்ப்புத் தந்தையும் அறிவார். இப்போதைக்கு நாம் காந்தருவமணம் செய்துகொள்வதே உகந்தது. அவர் வந்த பின்னர் கூறினால் இதனை உவப்புடன் ஏற்றுக் கொள்வார்.

***சகுந்தலை:***

இது எந்தவகையில் சாத்தியமாகும். நானோ கானகத்தில் குடிலில் வாழ்பவள். நீங்கள் நாடாளும் மன்னர்....

***துஷ்யந்தன்:***

சகுந்தலை! அச்சம் கொள்ளாதே. ஏற்கெனவே என் மனதில் உன்னை மனைவியாக வரிந்துகொண்டேன். எனவே நீயே என் மனைவி. உன் வயிற்றிலுதிக்கும் புத்திரனே என் பட்டத்துக்குரியவன். இதற்கு ஆகாயவாணியும் பூமிதேவியும் சாட்சியமாய் இருப்பார்கள். என்னை நம்பு.

***சகுந்தலை:***

.... உங்களை நம்புகிறேன். உங்கள் விரும்பம் போலவே எல்லாம் நல்லனவாக அமையட்டும்.

மெட்டு : **ஆசைமருமகன்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 39)*
தாளம் : **ரூபகம்** இராகம் : **சிந்துபைரவி**

***துஷ்யந்தன்:***

கண்ணைப் பறித்திடும் வண்ணக் கானகத்தில்
எண்ணம் போலமைந்தாய் என தெண்ணம் போலமைந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னிற் சிறந்திடும் முகவண்ண அழகோடு
பொய்கை ஓரத்தில் பொற்குடம் ஏந்தியே
மின்னும் அழகுடன் வந்தெதிர் பட்டாயே
மார்பி லணைத்துமே எனதாக்க நினைத்தேனே

**சகுந்தலை:**

கண்ணின் மணியாக காத்தவென் உள்ளத்தை
கணமதில் உடைத்துமே காதலை ஏற்றேனே
அன்புப் பெருக்கால் என்னையும் மறந்தே
அடைக்க லமாகவே உமதடி வந்தேனே

**துஷ்யந்தன்:** *(வசனம்)*

*சகுந்தலை! ஆகாயவாணியையும் பூமிதேவியையும் சாட்சியாக வைத்து, எமது காந்தருவமணத்தின் அடையாளமாக இந்த கணையாழியை உனக்கு அணிகிறேன்.*

**துஷ்யந்தன் தனது விரலிலிருந்த கணையாளியைக் கழற்றி சகுந்தலையின் விரலில் அணிதல்**

**துஷ்யந்தன்:**

உண்மையின் சாட்சியாய் கணையாளி அணிந்தேனே
உலகத்தில் உனக்கெந்த பழியுமோ இருக்காதே
திண்ணமாய் ராணியாய் ஆக்குவே னென்றேனே
தயங்காதே பெண்ணே தாகத்தை தீர்க்காயோ

**சகுந்தலை:**

வளர்ப்புத் தந்தையில்லா வலியும் தெரியதே
வாஞ்சையோ டுரைக்கும் வார்த்தையோ பெரியதே
உளமார உமதுரை உயர்வாக ஏற்றுமே
உயிராக உறவாட உறுதியை கொண்டேனே

**துஷ்யந்தனும் சகுந்தலையும் இணைந்தாற்போல் உள்ளே செல்லுதல் மறுபுறம் அனசூயையும் பிரியம்வதையும் வரல்**

**அனசூயை:**

*சகுந்தலையும் மன்னரும் இங்கேதான் இருந்தார்கள். அதற்குள் எங்கே போய்விட்டார்கள்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரியம்வதை:**

எங்கேனும் உலாவச் சென்றிருப்பார்களோ?

**அனசூயை:**

வா ஆற்றோரம் சென்று பார்த்து வருவோம்.

**அனசூயையும் பிரியம்வதையும் உள்ளே செல்லுதல்**
**மறுபுறம் துஷ்யந்தனும் சகுந்தலையும்**
**தத்தமது ஆடையைச் சீர்செய்தவாறு வரல்**

**சகுந்தலை:**

பிரபு! நாம் தவறிழைத்து விட்டோமே!

**துஷ்யந்தன்:**

இல்லை சகுந்தலை. ஆகாயவாணியையும் பூமிதேவியையும் சாட்சியாக வைத்து நாம் முறைப்படி காந்தருவமணம் செய்து கணவன் மனைவியானோம். அதன்பின்னர் கூடுவதில் எந்தத் தவறுமில்லை.

**சகுந்தலை:**

இதனால் ஏதாவது விபரீதம் நடந்தால்?

**துஷ்யந்தன்:**

நீயே என் மனைவி. உன் வயிற்றிலுதிக்கும் புத்திரனே என் பட்டத்துக்குரியவன் என்று உறுதியளித்திருக்கிறேனே. மேலும் ஏன் கலங்குகிறாய். நாம் பிரியும் நேரம்வந்துவிட்டது. நீ ஆச்சிரமம் செல். மந்திரிகள் மூலம் உன்னை அத்தனாபுரி அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன்.

**அனசூயையும் பிரியம்வதையும் வரல்**

**அனுசூயை:**

நீங்கள் இங்கேயா நிற்கிறீர்கள். நாங்கள் எங்கெல்லாம் தேடியலைந்தோம்.

**துஷ்யந்தன்:**

இதோ உன் தோழியர்களும் வந்துவிட்டார்கள். நீ அவர்களுடன் செல். நான் விடைபெறுகிறேன் அனார்க்கலி.

**துஷ்யந்தன் மூவரிடமும் கரங்கூப்பி விடைபெற்றுச் செல்லுதல்**
**செல்லும்போது சகுந்தலையைத் திரும்பிப் பார்க்க**
**அவளும் பார்த்தவாறு நிற்பதைக்கண்டு புன்னகையுடன் செல்லுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை வேதனையுடன் நிற்றல்

*பிரியம்வதை:*

காதலனின் பிரிவு காதலிக்கு வேதனையைக் கொடுக்கிறதோ?

*சகுந்தலை:*

இப்போது அவர் என் காதலனல்ல கணவர்.

*அனுசூயை:*

என்ன சொல்கிறாய் சகுந்தலை.

*சகுந்தலை:*

அவர் நாடு திரும்பவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் நாம் இருவரும் காந்தருவமணம் செய்து கொண்டோம். விபரமெல்லாம் ஆச்சிரமத்தில் சொல்லுகிறேன். வாருங்கள்.

*பிரியம்வதை:*

ஓகோ! திருமணமும் முடிந்ததோ?

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 4

## இடம் : வீதி

துருவாச முனிவர் வரவு

மெட்டு : மாசிலா சுந்ரறோமை *(எஸ்தாக்கியார், பக். 12)*
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : சிந்துபைரவி

*துருவாசர்:*

*மண்டல மதிரக்கடுந் தவமே புரிந்தோன்*
*கண்டில ரென்போல் கடுங்கோபம் கொண்டோர்*
*வணங்காதோர் வகையின்றி வருந்திட*
*கணக்கற்றோர் கதியின்றி கதறியே*
*தேசதேசந் துதிக்க ராசர் மேலாய்மதிக்க*
*பூசிப்போர் கையில் தீர்த்தமும் அளிப்பேன்*
*ஈரேழுலோகமே அடங்கி நின்றிட*
*வார்கடலொலியென பேரிகை சாற்றிட*
*கானகம் வாழ்ந்து கவலைகளை ஒழித்து*
*ஞானத்தில் முதிர்ந்த துருவாசர் வந்தேனே*

துருவாச முனிவர் உள்ளே போதல்

**திரை விலகல்**

## இடம் : ஆச்சிரமம்

சகுந்தலை குடிலின் வெளியே சிந்தனையுடன் அமர்ந்திருத்தல்
துருவாச முனிவர் வரல்
அவர் வருவதை சகுந்தலை கவனிக்கவில்லை
துருவாச முனிவர் சகுந்தலை பார்த்தல்

*துருவாசர்:*

*யாரங்கே!... யாரங்கே!...*

சகுந்தலை தொடர்ந்தும் கவனியாது சிந்தனையில் இருத்தல்
துருவாச முனிவர் கோபமடைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : கல்வெட்டு சிந்து
தாளம் : சதுஸ்ர ஏகம் மெட்டு : கீரவாணி

பல்லவி

துருவாசர்:

கண்டுயெனை மதிக்க மறந்தாளோ - சகுந்தலையாள்
கண்டுயெனை மதிக்க மறந்தாளோ
கண்டுயெனை மதிக்காது கொண்டகோலம் எதுவாமோ
பண்டுதொட்ட மரபினை பாழடித்த இவளோ
(கண்டு...)

அனுபல்லவி

கன்னி யிவள் கர்வத்தை கணத்தினில் இல்லா தொழித்து
முன்ன மிவள் காணாதுயர் கண்டிடச் செய்வேனிப்போ
(கண்டு...)

**சகுந்தலை, துருவாச முனிவரை இப்போது கண்டு எழுதல்**

சரணம்

ஆச்சிரம மரபொழித்த ராட்சகியின் நினைவழித்து
பூச்சரம் கொண்டுளனை பூசிக்க மறந்தவளை
பொறுப்பது தகுமாமோ - வினைசுமக்க
வெறுப்பதே உவப்பாமே - இந்தக் கணத்தினிலே
கொண்ட இவள்எண்ணம் உடனழிய
மண்டலமே கலங்கினும் கவலையற்று
கண்ணுவர் மகளென்று தயங்கிடாது
இன்றே இவளுணர சாபமளிப்பேனே
(கண்டு...)

**துருவாச முனிவர் கோபத்தில் அங்குமிங்கும் நடத்தல்**
**அனுசூயையும் பிரியம்வதையும் ஓடி வரல்**
**சகுந்தலை துருவாச முனிவர் காலில் விழல்**

சகுந்தலை:

குருவே! நான் செய்தது தவறு. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் குருவே!

துருவாசர்:

விருந்தினரைப் புறக்கணிப்பவளே!... எவனைத் தியானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டிருக்கிறாயோ, அவன்... உன்னை மறந்து போவானாக!

**துருவாச முனிவர் தீர்த்தத்தை அள்ளி சகுந்தலைமீது தெளித்தல்**

**சகுந்தலை:**

வேண்டாம் குருவே! எனக்கு சாபமிட வேண்டாம் குருவே!

**மெட்டு : எல்லையற்று** *(தேவசகாயம்பிள்ளை, பக். 33)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : ஹரிஹாம்போதி**

**சகுந்தலை:**

அன்பு கொண்ட தந்தை யில்லை - இப்போ
ஆலைத் துரும்பாகினேன் மண்ணில்
இன்ப துன்பம் கொண்ட வாழ்வில் - என்றும்
இடரை மட்டும் கொண்டேனே

கள்ளங் கபடம் அற்றதென் னுள்ளம் - இன்றோ
கலங்கி துடிக்கிறதே கணமென்னில்
வெள்ளம் போல் வந்ததென்ன துயரம் - தீர்ந்திட
வழியுமேது என்றுநானும் அறியேனே

பெற்றவர் தூக்கி எறிந்தார் காட்டில் - எடுத்து
பாசத்துடன் வளர்த்தார் கண்ணுவமுனிவர்
பெற்றவரா யெண்ணி கெஞ்சுகிறேன் குருவே - இரங்கி
பேதையை மன்னிக்க மாட்டீரோ

**துருவாசர்:**

என்னைக் கண்டும் வரவேற்காத நீ என் சினத்திற்கு ஆளாகி விட்டாய். என் முடிவில் மாற்றமில்லை.

**அனுசூயை:**

சுவாமி அவள் கள்ளங்கபடம் அறியாதவள். அவளது பொல்லாத காலம் இந்த நிலை ஏற்பட்டது. அனைத்தும் அறிந்தவர் தாங்கள். அவளை மன்னித்து விமோசனம் அளித்திட உங்களை வேண்டுகிறோம். தயைகூர்ந்தருளும்.

**துருவாச முனிவர் கோபத்துடன் நிற்றல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : வண்டலம்பூங்குழல் (தேவசகாயம்பிள்ளை, பக். 107)
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : சிந்துபைரவி

*சகுந்தலை:*

அன்னையில்லாப் பிள்ளைநானே - பாச
அணையறியா குழந்தையானேன்
என்பிறப்பை அறிந்தபின்னும் - கூறா
ஏதலியாய் கலங்குறேனே

*அனசூயை:*

அனைத்துமறிந்த குருநாதரே - வாடும்
அபலையிவள் குறைதீருமே
வினைசுமந்த வெள்ளையுள்ளம் - தன்
விடிவிற்காக ஏங்குறதே

*பிரியம்வதை:*

தேவர்போற்றும் தவமுனியே - சாபம்
தீர்த்திடுவீர் மனமிரங்கி
பாவையிவள் பிழைபொறுத்து - தூய
பேறடைய அருளுவீரே

மெட்டு : ஆசிரிய விருத்தம் இராகம் : சங்கராபரணம்

*துருவாசர்:*

கண்ணுவர் குடில்தேடி களிப்புடன் வந்தஎன்னை
கருத்தினில் எடுக்காத காரிகையிவள்
எண்ணத்தில் மூழ்கியே ஏளனம் செய்திட்டாள்
எளிதினில் இதைநான் மறப்பேனோ

மங்காத எனதுபுகழை விண்ணவரே அறிவார்
மங்கையிவள் அறியாத மார்க்கமென்ன
சிங்கார மிகுவாழ்வை சிரத்தையாய் கொண்டாள்
சினத்தினால் உரைத்தேனே சாபமதை

*துருவாசகர்:*

அனசூயை! உன்னுடைய வேண்டுதலுக்காக நான் மனம் இரங்குகிறேன். அதற்காக நான் இட்ட சாபத்தை மீளப்பெற முடியாது. இருப்பினும் சாப விமோசனம் தருகிறேன். இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் இவளை அடையாளங்கண்டு மீண்டும் பழைய நினைவுடன் ஏற்றுக் கொள்வான்.

**அனசூயை:**

நன்றி குருவே.

**மூவரும் கரங்குவித்து வணங்குதல்**
**துருவாச முனிவர் போதல்**
**சகுந்தலை கலக்கத்தில் நிற்றல்**

**அனசூயை:**

சகுந்தலை இன்னும் ஏன் கலக்கம். இப்போது உனக்கு சாப விமோசனம் கிடைத்துவிட்டதே.

**சகுந்தலை:**

பிறந்தது முதல் எனக்கு எல்லாம் சோதனையாகவே இருக்கிறது. அது ஏன் என்றுதான் தெரியவில்லை.

**பிரியம்வதை:**

நல்லவர்களுக்கான சோதனை சகுந்தலை. குழந்தையிலேயே சகுந்தலைப் பட்சிகள் நிழல்கொடுக்கும் பாக்கியத்தை பெற்றவள் நீ. கண்ணுவர் முனிவரின் வளர்ப்பு மகளாகும் பேறைப் பெற்றவள் நீ. கலங்கக்கூடாது.

**சகுந்தலை:**

எல்லாம் நல்லனவாகவே இருக்கட்டும். நான் ஆற்றில் நீராடி வருகிறேன். நீங்கள் ஆச்சிரமத்தில் இருக்கிறீர்களா?

**அனசூயை:**

நீ சென்றுவா சகுந்தலை. உனது உள்ளம் அமைதியடைய நன்றாக நீராடி வா.

**சகுந்தலை போதல்**

**பிரியம்வதை:**

அனசூயை! சகுந்தலைக்கு ஏன் இத்தனை துன்பம், துயரம். தவத்தில் சிறந்த விஸ்வாமித்திரரை தந்தையாகக் கொண்ட இவளுக்கு ஏனிந்த நிலை.

**அனசூயை:**

எத்தகை துயரிலிருந்தும் அவளை விடுவிப்பது எமது கடமை. வா போகலாம்.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம் : (வெளி) திரைக்கு முன்

**சகுந்தலை வரல்**

மெட்டு : **ஆரறியபோறாரையா** *(தேவசகாயம்பிள்ளை, பக். 47)*
தாளம் : **ஆதி** **இராகம் : சாவேரி**

**பல்லவி**

*சகுந்தலை:*

எப்படி உரைப்பேன்நானே - என்துயர்தன்னை
எப்படி உரைப்பேன்நானே

**சரணம்**

எப்படி உரைப்பேன்நான் என்னரும் தந்தையிடம்
எட்டி உதைப்பாரோ என்னையவர் கண்டவுடன்
எப்போதும் அவரெந்தன் பாசம்மிகுந்த தந்தையே
எந்தன் மணவாளனை ஏற்றிடுவார் மறுப்பில்லாமலே

**சகுந்தலை கையைப் பார்த்தல்**
**விரலிலிருந்த மோதிரம் காணப்படவில்லை**

*சகுந்தலை:*

ஐயோ! என் மோதிரம் தவறிவிட்டதே. காந்தருவமணத்தின் அடையாளமான அந்த மோதிரம் ஆற்றில் தவறிவிட்டதே. என்ன செய்வேன். வயிற்றிலே குழந்தையை சுமந்து வெளியே சொல்ல முடியாது தவிக்கின்றேன். இனிமேல் என் கணவருக்கு எந்த அடையாளத்தைக் காட்டமுடியும்.

மெட்டு : **ஆரறியபோறாரையா**

*சகுந்தலை:*

கன்னியாய் இருந்தநான் குழந்தையை சுமக்கிறேன்
கண்ணாளன் கணையாளி ஆற்றிலே தொலைந்ததே
இனிமேல் எதைக்கொண்டு அடையாளம் காட்டுவேன்
இன்னலில் மிதப்பதே இம்மண்ணில் என்விதியோ

**கண்ணுவர் மகரிஷி வரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகுந்தலை:**

தந்தையே! (அழுதல் - பாதத்தில் விழுதல்) என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் தந்தையே.

**கண்ணுவர்:**

அனைத்தும் அறிந்தேன் சகுந்தலை. நீ துஷ்யந்த மன்னனைச் சந்தித்தது. அவரை காந்தருவமணம் புரிந்தது. அதனால் நீ கர்ப்பமாயிருப்பது, துருவாச முனிவர் சாபமிட்டது அனைத்தும் அசரீரி வாயிலாக அறியப்பெற்றேன் மகளே.

**மெட்டு : வாறாகவந்தது** (தேவசகாயம்பிள்ளை, பக். 27)
**தாளம் : ரூபகம்** **இராகம் : தன்னியாசி**

பல்லவி

**கண்ணுவர்:**

வேதனை யென்பது வாழ்விலிணைந்தது
மகளே அஞ்சாதே உண்மைதான் சொல்கிறேன் - மகளே

தரு

பாரினில் பிறந்தவர் பேரோடு புகழோடு
பாங்குடன் வாழ்ந்தவர் எத்தனை உள்ளரோ
காருற்ற பெண்ணாக காலம் கணித்தாலும்
காப்பது என்கடன் கவலையும் உனக்கேது

விதியின் வலியது வந்தெமைத் தொடர்ந்திடும்
வீண்பயம் கொள்வதால் வாதைகள் குறையுமா
புதைத்திடு எண்ணத்தை புரிந்திடும் உன்நிலை
பிசிறின்றி வாழலாம் பரமனை நினைத்திடு

**சகுந்தலை:**

பற்றற்றுப் பெற்றவர் பற்றைக்குள் விட்டனர்
பாசத்தை பகிர்ந்தேன் தந்தையே உம்மிடம்
பற்றுக்கோடாக இருந் தென்னைக் காப்பவரே
பாக்கியம் செய்தேனே பாவியை மன்னியும்

**அனுசூயை, பிரியம்வதை வரல்**
**இவர்கள் பாடலை தொடர்ந்து பாடுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுசூயை:**

என்னுயிர் தோழியை எண்ணியே கலங்கிறோம்
எண்ணிய அவள்வாழ்வு ஏற்றமுடன் இருக்கும்

**பிரியம்வதை:**

மென்மனம் கொண்டவள் மலரிலும் சிறுவிதழ்
மனமது தவறினாள் மாண்புடன் வாழச்செய்யும்

**கண்ணுவர் ஆச்சிரம சீடர்கள் வரல்**

**கண்ணுவர்:**

உங்களுக்குக் கவலை வேண்டாம்... சகுந்தலை! நீயும் நடந்த துயர்களை மற. உன் கணவர் உன்னை நிச்சயம் அடையாளம் கண்டு ஏற்றுக்கொள்ளுவார். உன்னை உன் கணவனுடன் சேர்த்து வைப்பது என் கடமை. கவலையை விடுத்து வா என்னுடன் இப்போதே அத்தனாபுரி புறப்படுவோம்.

**பிரியம்வதை:**

நன்றி குருவே! இவ்வையகத்தில் என் தோழிக்கு இது பேருதவி.

**கண்ணுவர்:**

எனக்குகந்த சீடர்களே! நான் வரும்வரை ஆச்சிரமத்தை கவனித்துக்கொள்ளுங்கள்.

**சீடர்கள் கரங்கூப்பி கண்ணீர்மல்க விடைகூறுதல்**
**சகுந்தலை, கண்ணுவர் முனிவர் போதல்**

## திரை மூடுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

## கூத்து இரண்டு

# அனார்க்கலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச்சுருக்கம்

அக்பர் சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்ட மொகலாய சாம்ராஜ்யத்தில் அனார்க்கலி ஒரு நாட்டியக்காரி. சலீம் அக்பர் சக்கரவர்த்தியின் மகன். சலீம்; அனார்க்கலி மீது காதல் கொள்கிறான் அவன் தன் காதலை வெளிப்படுத்தியபோது தன்னை ஒரு போர் வீரனென்றே தெரியப்படுத்தினான். போர்வீரன் உடையில் காணப்பட்ட சலீமை போர்வீரனென்று நினைத்த அனார்க்கலி, சம்மதமளித்து இருவரும் காதலர்களானார்கள்.

இருவரும் மனமொத்த காதலர்களாய் தனிமையில் சந்தித்து வரும் தகவலை மந்திரி வாயிலாக அறிந்த அக்பர் சக்கரவர்த்தி ஆத்திரமடைந்தார். முறையற்றுக் காதல்கொண்ட இருவரையும் பிரித்தாக வேண்டுமென்று முடிவு செய்து அதற்கான திட்டத்தையும் வகுத்துக்கொண்டார்.

அந்தத் திட்டத்தின் செயற்பாடாக சலீமை அழைத்து அவனை சடுதியாக போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டு, சலீமை மறந்து விடும்படி அனார்க்கலியை வற்புறுத்தினார் அக்பர். சலீமை மறக்க முடியாது என அனார்க்கலி உறுதியாகக் கூறிவிட்டதால் மேலும் கோபமடைந்த அக்பர், அவளை உயிருடன் வைத்து சமாதி கட்டும்படி ஆணையிடுகிறான்.

இதைக் கேள்வியுற்று போர்க்களத்திலிருந்து சலீம் திரும்பியபோது சமாதிக்குள் அனார்க்கலி இறந்துவிடுகிறாள். அவளது பிரிவைத் தாங்கமுடியாத சலீம் தன்னைத்தானே மாய்த்துக் கொள்கிறான்.

## பாத்திரங்கள்

கட்டியகாரர்

சலீம்

அனார்க்கலி

தோழியர்

அக்பர்

மந்திரி

மேஸ்திரிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனார்க்கலி

## காட்சி - 1

### இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

**சபை விருத்தம்**

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

அங்கம் குலுங்கிட தங்கநிறக் கோலினை ஏந்தி
கிங்கிணித் தாளமும் சலங்கையும் சேர்ந் தொலிக்க
சிங்கார மாநகர மக்களுக்கு சங்கதி கூறவென்றே
மங்கல மொழி கட்டியகாரர் சபைதனில் வருகிறாரே

**கட்டியகாரர் ஆடியவாறு வரல்**

**மெட்டு : இராசமகா இராசன்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 7)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : மாயா மாளவ கௌளை**

**பல்லவி**

***கட்டிக்காரன் - 1:***

கதையொன்று கூறிடுவோமே - மொகலாயத்தின்
கதையொன்று கூறிடுவோமே

**அனுபல்லவி**

***கட்டிக்காரன் - 2:***

பாரிலுள்ளோ ரிடை பேர்பெற்றுவிளங்கிய
தார்வேந்த னக்பரின் ஆளுமையில் நிகழ்ந்த
(கதை...)

**சரணம்**

***கட்டிக்காரன் - 1:***

முத்துப் பவளம் நிறைந்த மனையில் - இரு மருங்கும்
மாட மாளிகை களமைந்திருக்க
அத்தர்மணங்கமள இரத்தினமணி யொலிக்க
அண்டையமன்னர் தாழ்பணிய ஆளும் அக்பர்
(கதை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டிக்காரன் - 2:**

மகன் கொண்ட முறையற்ற காதலினை - பிரித்திடவே
மன்னன் போட்ட திட்டமுண்டு
அகத்திற்கொண்டகாதல் அழிந்ததா மண்ணில்
அத்தனையுமொத்த கதையுண்டு அவர் வாழ்விலே
(கதை...)

**கட்டிக்காரன் - 1:**

காதற் கதை இதுவன்றோ

**கட்டிக்காரன் - 2:**

காவியக் கதையுமன்றோ

**கட்டிக்காரன் - 1:**

சோகம் நிறையவுண்டு

**கட்டிக்காரன் - 2:**

சூழ்ச்சியும் நடந்ததுண்டு

**கட்டிக்காரன் - 1:**

காட்சி காணத்துடிக்கும் உங்களை

**கட்டிக்காரன் - 2:**

காக்கவைக்காமல் பராக்! பராக்!

**கட்டியகாரர் ஆடியவாறு உள்ளே செல்லுதல்**
**இளவரசர் சலீம் வரவு**

மெட்டு : **கிரீடத்தரசர் முழ** *(தேவசகாயம்பிள்ளை, பக். 15)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** (மிஸ்ர நடை) **இராகம் : ஹம்சத்வனி, கீரவாணி**

*சலீம்:*

நாற்றிசையுலகெங்குந் தோற்றமதுடன் போற்ற
ஏற்றியகொடியோடு வலம்வரும் மாவீரன்
தோற்றம்முதலாக மொகலாய தேசமே
சாற்றிடும்அக்பரின் புதல்வனும் நானன்றோ

வளம்பலகொண்டு போர்கள்பல வற்றைவென்று
தளகர்த்தனாய்நின்று பொருதியசலீம் நானே
களம்பலகண்டதால் விழுப்புண்கள் பெற்ற
அளவற்றபுகழ்கொண்ட மொகலாயன் தானே

எதிர்கொண்டபடைகளை காலடியில் வீழ்த்தி
சதிசெய்யும்மன்னரை தேர்க்காலி லழுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிசெய்யுமனைவர்க்கும் துணைசெய்து நிற்கும்
அதிமேதைஅக்பரின் வாரிசாய் வலம்வருவேனே

**சலீம் உள்ளே செல்லுதல்**
**அனார்க்கலி வரவு**

**மெட்டு : மெல்லச் செல்லுவேன்** *(எஸ்தாக்கியார் பக். 36)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

தொல்லை களில்லாத நல்லோர்மத்தியில்
நாட்டியமாடிடவே - கற்ற
கல்வியையும் தப்பின்றி செப்பிடவே - நானும்
மெல்லச் செல்லுவேன் கண்ணியம் கொண்டுமே
நல்மனங் கொண்டுமே

மொகலாய மண்ணினின் மானங்காத்திடும்
கலையின்மகள்நானே - மன்னர்
அகங்குளிர்ந் தளிக்கும் பொன்மணிகளை - பெறும்
புகழ்பெற்ற நாட்டியத் தாரகை ஆகினேன்
அனார்க்கலி என்பெயராமே

**தோழி - 1:**

அனார்க்கலி! நீ இங்கேயா நிற்கிறாய்? நாங்கள் எங்கெலாம் தேடினோம்.

**அனார்க்கலி:**

நாட்டியப் பயிற்சி முடிந்துவிட்டது. ஓய்வுக்காய் நேரத்துடன் வந்துவிட்டேன்.

**தோழி - 2:**

ஓய்வுக்காகவா? அன்றேல் மனதில் புகுந்த யாரோ ஒருவருக்காகவா?

**அனார்க்கலி:**

நீயா இப்படிக் கேட்கிறாய்? நான் இதுவரை எந்தவொரு ஆணையும் ஏறெடுத்துப் பார்த்ததுண்டா? எவருக்கும் சலனத்தைக் கொடுக்க நாட்டியமாடியதுண்டா?

**தோழி - 2:**

அனார்க்கலி நான் கேலி பண்ணவே சொன்னேன். உன்னைப் பற்றி நீ சொல்லியா நாம் தெரிந்துகொள்ளவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோழியர் இருவர் வரல்

மெட்டு : மானே மடமங்கையரே (தேவசகாயம்பிள்ளை, பக். 116)
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : சிந்துபைரவி

***அனார்க்கலி:***

*கயலின் விழிமங்கையரே என்றும்*
*கனிவான பாங்கியரே - இப்போ*
*அரும்பும் மலர்கொய்து மகிழ்ந்திட*
*வளம்மிகு வனம் புகுவோம்*

***தோழி - 1:***

*சோலையின் அழகினிலே கண்கள்*
*சோபித்து நிற்குதுவே - அதி*
*காலையின் எழிலினிலே மனம்*
*குளிர்ந்திட மகிழ்வு கொள்வோம்*

***அனார்க்கலி:***

*இளமை காலமினிமை கொண்டுமே*
*இதயம் மகிழ்ந்திட பாவையரே - இன்று*
*அழகு மலரிதழ்களை முகர்ந்து*
*ஆர்ப்ப ரித்திடுவோம் வாரீர்*

***தோழி - 2:***

*பஞ்சினை யொத்தபூஞ்செடி மீதிலே*
*பூவையரே நாங்கள் அமர்ந்திட - மனம்*
*மஞ்சத்தி லமர்ந்த மகிழ்வுடனே*
*மலரும் பூக்களை பறித்திடுவோம்*

***அனார்க்கலி:***

*தாரகை போலொளிர் மலர்களை*
*தங்கமய மொத்த இதழ்களை - நாடி*
*ஆரத்தழு விடவேண்டு மென்றாவலை*
*அடைந்திட வேண்டுமே வாரீர்*

**அனார்க்கலி மலர்களை அணைப்பதுபோல் நிற்றல்**
**தோழியர் உள்ளே செல்லுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலீம் போர்வீரன் உடையில் வரல்

**மெட்டு : காணரும் மேலான காட்சி** *(எஸ்தாக்கியார், பக். 153)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** **மெட்டு : சங்கராபரணம், மாயாமாளவ கௌளை**

*சலீம்:*

**பல்லவி**

காண்பதொரு செம்பொற் சிலையோ - என்கண்கள்
காண்பதொரு செம்பொற் சிலையோ

**அனுபல்லவி**

சிற்பிகள் செதுக்கிடாத தங்கநிறக் கற்சிலையோ
கற்பனைக்குள் அடங்கா அற்புதக் கலையகமோ

**சரணம்**

சிந்தையைக் கவரவந்த சித்திரத் தேரிதுவோ
வந்தனை செய்துநிற்கும் நாட்டிய மயிலிவளோ
அதி ரச சுவைதரு எழில்மிகு உடலது
விந்தை நிறை இன்பம் எழுகுதே
வந்தென்னெதிரேநின்று
எண்ணத்தாலொரு உரிமை தாராயோ - அருகேவந்து
அணைத்தேநின்று காதலு ரைக்காயோ

*அனார்க்கலி:*

மீண்டும் மீண்டும் ஏன் என்னைத் தொல்லைப்படுத்துகிறீர்கள்?

*சலீம்:*

உன்மேல் உள்ள காதலால்தான்.

*அனார்க்கலி:*

நீங்கள் அரச பணியாற்றும் போர் வீரர். நானோ நாலுபேரை மகிழ்விக்க நாட்டியம் ஆடுபவள்

*சலீம்:*

உன் நாட்டியம் கண்டேன். நானதில் மயங்கி விட்டேன். மயக்கத்தினால் உன்மேல் காதல் கொண்டேன்.

*அனார்க்கலி:*

இது நடக்கக்கூடியதா?

*சலீம்:*

நடக்கும் நீ மனது வைத்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனார்க்கலி:**

என்னால் முடியாது.

**சலீம்:**

அப்படியானால் என் முடிவையும் கேள்... என் காதலை நீ ஏற்கவில்லையானால் பகைவரை மட்டும் வெட்டிய எனது வாள் என்னையும் வெட்டிக்கொல்லும். இது உண்மை. பார்க்கப் போகிறாயா? (வாளை உருவுதல்)

**அனார்க்கலி:**

வேண்டாம்... வேண்டாம்... உங்களின் உண்மையான காதலை புரிந்துகொள்ள இந்த பேதை தவறிவிட்டேன். அன்பரே இன்று முதல் எனது உள்ளம் உமதே... நான் விடைபெறுகிறேன்.

**சலீம்:**

ஆகட்டும் அனார்க்கலி!... அனார்க்கலி மீண்டும் எப்போ...?

**அனார்க்கலி சிரித்துவிட்டுச் செல்லுதல்**

**மெட்டு : விட்டுப்பிரியாதே** *(தேவசகாயம்பிள்ளை, பக். 34)*
**தாளம் : பரசு** **மெட்டு : ரூபகம்**

**சலீம்:**

பல்லவி

காரிகை வந்தாளே - மனமொத்த
காரிகை வந்தாளே

தரு

காரிகையாம் எந்தன் சிந்தையைக் கவர்ந்தவள்
கண்டதும் காதலை கொண்டவன் நான்தானே
தூரிகை கொண்டுமே வரைந்த சித்திரம்போல்
துவளும் மெல்லிடையென காட்சி தந்திட
(காரிகை...)

புன்னகை யாளெந்தன் மனதினை ஈர்த்தவள்
பண்பு தவறிடாத நாட்டியத் தாரகையவள்
விண்ணக தேவதையின் உருவத்தை கொண்டுமே
வரிந்து என்னைக் கவர்ந்து நின்றிட்ட
(காரிகை...)

**சலீம் உள்ளே செல்லுதல்**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 2

## இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

அக்பர் சக்கரவர்த்தி வரவு

மெட்டு : அதி உக்ரம கோலன் (தேவசகாயம்பிள்ளை, பக். 7)
தாளம் : சதுஸ்ர ஏகம் மெட்டு : கீரவாணி

*அக்பர்:*

மதிமிஞ் சிடு தீரன் - அல்லாவை
துதித்திடும் மக ராசன் - இகமதில்
அறமற்ற செயலொன்று நிகழாது ஆண்டுமே
திறன்கொண்டு திடமுடன் நட மிடுவேனே

மதி மந்திரர் கூட - எனைநாடி
மதி கேட்டி டுவாரே - மறுமன்னர்
சிரந்தாழ துதிபாடி மலர்தூவி வணங்கிட
முரசொலி மத்தியில் வலம் வருவேனே

புகழொன் றிய ராசன் - தர்மநெறி
மிகவொன் றிய நேசன் - தனையிகழ்
பகைவரை கடிதினில் கைதெனச் செய்திடும்
இகமதில் தகையோன் அக்பரும் நான்தானே

**அக்பர் சக்கரவர்த்தி உள்ளே போதல்**
**சலீமும் அனார்க்கலியும் பாடியவாறு வரல்**

மெட்டு : மதனத்துரையே (அலங்காரரூபன், பக். 90)
தாளம் : ஆதி மெட்டு : சிந்துபைரவி

*சலீம்:*

அனிச்சம் மலரே நாட்டியத் தளிரே
அழகின் உருவமே - எந்தன்
மனதைக் கவர்ந்த தங்கச்சிலையே
மனதிலாடும் அனார்க் கலியே - வந்து
கன்னம் சிவக்கமுத்தந் தாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அனார்க்கலி:*

என்னில் இணைந்த விண்ணின் ஒளியே
எண்ணமெலா முமதே - மிஞ்சும்
மண்ணின் வீரந்தோளில் துலங்குதே
மதியையொத்த வதனம் உமதே - காதல்
கொண்டதனால் பேற்றை அடைந்தேனே

*சலீம்:*

கொவ்வைப் பழம்போல் இதழின் அழகோ
கொங்கைகள் அழகோ - ஒளி
கௌவிடும் கண்கள் கயல்மீன் விழியோ
அன்னநடை கண்ட யர்ந்தேன் - உன்னை
கண்டதால் என்னையே இழந்தேனே

*அனார்க்கலி:*

நாட்டைக் காக்கும் கடமை கொண்டீரே
நானும் காதலியானேன் - தினம்
நாட்டியம் காக்கும் பணியைக் கொண்டுமே
நாதாவுன்னிடம் நானடிமை யானேன் - என்றும்
நானிலம்போற்ற நாம் வாழ்ந்திடுவோமே

**சலீமும் அனார்க்கலியும் உள்ளே செல்லுதல்**

**மந்திரி வரவு**

**மெட்டு : ஆனிப்பொற் பணிய** *(தேவசகாயம்பிள்ளை, பக். 9)*

**தாளம் :- சதுஸ்ர ஏகம்** **மெட்டு : ஹம்சத்வனி, கீரவாணி**

*மந்திரி:*

மதிசொல்லிடும் ஞானன் பலர்மெச்சிடும் சூரன்
அதியுத்தம போசன் மொகலாயமக ராசன்
அதர்மத்தை கண்டால் அழித்திடுமொரு வீரன்
மதிமெத்தக் கூறிடும் மதிமந்திரி வந்தேனே

படைகொண்டு தடை பலகடந்திடும் தீரன்
நடைபெற்ற போர்களில் அடைந்தது வெற்றியே
திடங்கொண்ட படையினை தமக்கெனக் கொண்ட
வடநாட்டு மன்னனின் வழிகாட்டி வந்தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சலீமும் அனார்க்கலியும் பாடியவாறு வரல்**
**பாடலின் இடையில்**
**மந்திரி இருவரையும் பார்த்துவிட்டுச் செல்லுதல்**

மெட்டு : அஞ்சுகமே (தேவசகாயம்பிள்ளை, பக். 35)
தாளம் :- சதுஸ்ர ஏகம் மெட்டு : ஹரிஹாம்போதி

*சலீம்:*

தேவதையே தேவலோகக் கன்னிகையே - எழில்
தாரகையைப் போலே யொளிர்பவளே கேளும்
பாவையுன் நாட்டியம் பார்த்தகணம் - என்
பணியையும் மறந்துநான் - பித்தனாகி எனைமறந்தேனே

*அனார்க்கலி:*

சுந்தரரே பேதையுள்ளமதைக் கவர்ந்தவரே - தலை
சுற்றுகின்ற ஆணழகை கொண்டவரே ஏக்கம்
வந்தலையும் வேளைதன்னி லேதான் - சொன்ன
வார்த்தை சகாயமென்றே - கொண்டென்னைத் தந்தேனே

*சலீம்:*

காலையொளி கண்டமலர் எழில்போலே - நீயும்
காட்டிய மலர்ந்தமுக அபிநயத்தைக்கண்டு
மாலைமுதல் காலைவரை கண்ணயராது - எந்தன்
மனதொடிந்த நிலையில் - தேடியலைந்தேனே உன்னை

*அனார்க்கலி:*

சந்திரனை யொத்தசந்தண முகத்தவரே - உம்மை
சிந்தையில் ஏற்றதால் பாக்கியமானேனே
எந்தவிடமும் உங்கள்முகம் தெரியுதே - இப்போ
என்னிடம் நானில்லை - பித்துப் பிடித்தவளானேனே

**சலீமும் அனார்க்கலியும் உள்ளே செல்லுதல்**

**திரை விலகுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 3

## இடம் : அரண்மனை

அரண்மனையில் அக்பர் நிற்றல்

மெட்டு : எண்சீர் விருத்தம் இராகம் : சங்கராபரணம்

அக்பர்:

அண்டமெலாம் நிறைந்த பரமனே அல்லா
ஆண்டருளும் எந்தன் உள்ளத்தி லிருந்தே
விண்டலஞ்சேர் தண்மதியாய் அருளைத் தந்து
வழிகாட்டி நல்லாட்சி நிலவச் செய்வாயே
தண்ணொளி கொண்ட தயாபரா உனைப்போற்றி
தாயினும் இனிமை கண்டேன் இம்மண்ணிலே
மண்டிருள்சேர் மானிடர் வாழ்வினில் ஒளியாகி
மாயிருஞால மெலாம் வகுத்திடு பரமேபோற்றி

மந்திரி வரல்

மெட்டு : கலித்துறை இராகம் : பைரவி

மந்திரி:

எத்தனை இடரிலும் எத்துணை தயக்கம் இன்றியே
புத்தியைக் கூறுவோன் பதறியே நிற்கிறேன் இன்று
இத்தகை தகவலை இயம்பவே வழியின்றி நானும்
உத்தரவு வேண்டியே உரைத்திடக் காத்தி ருக்கிறேன்

மெட்டு : சந்தத விருத்தம்
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : சங்கராபரணம்

அக்பர்:

அச்சமோ இன்றியே கச்சித மாகவே கூறிடும் மந்திரியே
இச்சண மட்டுமே அச்ச வுணர்வுடன் நிற்பது விந்தையன்றோ
நிச்சய மென்றிடின் உச்ச மரபுடன் உரைத்திடும் வல்லபரே
துச்சமா யெண்ணி இச்சபை தன்னிலே இயம்பிடும் மந்திரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்பர்:**

சொல்லுங்கள் அமைச்சரே! தாங்கள் ஏதோ அதி முக்கிய விடயமாக வந்துள்ளீர்கள் என்று நினைக்கிறேன்.

**மந்திரி:**

உண்மைதான் சக்கரவர்த்தி.

**அக்பர்:**

கொண்டுவந்த தகவலை சொல்வதற்கு என்ன தயக்கம்?

**மந்திரி:**

தங்களது மைந்தன் சலீம்....

**அக்பர்:**

அவன் எல்லைக்குச் சென்றிருந்தான். அவனுக்கு என்ன நடந்தது?

**மெட்டு : சொல்லமுடியாது** *(தேவசகாயம்பிள்ளை, பக். 24)*
**தாளம் : ஆதி** **இராகம் : பரசு**

**மந்திரி:**

பல்லவி

நானறிந்த காதையே சொல்லுவேன் - மனம் துடிக்க
நானறிந்த காதையே சொல்லுவேன்

தரு

நானறிந்த காதைதன்னை கனவென்பர் இங்குகூறின்
நல்லகுலம் தனைமறந்த வல்லோனாம் இளவலின்
தேனருந்த அலைபாயும் கானகத்து வண்டினைப்போல்
தேடியோடி புரிகிறார் கன்னியுடன் காதல்லீலை

இன்பசுக வாழ்வுதனை இந்நிலத்தில் பெற்றிடவே
இழிகுல பெண்ணுடன் களிப்புடன் களிக்கிறார்
மன்னராகும் தகுதியை இழந்திடவே நேருமென்று
மன்னன் மகனறியாத மார்க்கமே புரியவில்லை

**அக்பர்:**

அமைச்சரே! என்ன பிதற்றல்?

**மந்திரி:**

நாட்டிய மாடுகின்ற கொடியிடையாள் மடியில்
நம்மிளவல் தலைசாய நானுமதைக் கண்ணுற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டிலொரு கருமையை ஏற்றிவிடும் இச்செயலோ
ஏற்படாது தடுக்கவே எடுத்தோத வந்தேனையா

அக்பர்:

என்மகன் சலீம் நாட்டியக்காரியுடன் காதலா? என்னை நம்பச் சொல்லுகிறீர்கள்

அக்பர்:

மன்னா! நாட்டு மக்களுக்கு, நாட்டை ஆளும் உங்களுக்கு நன்மையையே செய்ய விரும்புகிறவன் நான். நான் சொல்வது உண்மை. என் கண்களால் கண்ட உண்மை. அவள்பெயர் அனார்கலி

**அக்பர் கோபத்தில் செங்கோலை கையிலெடுத்தல்**

**மெட்டு : கல்வெட்டு சிந்து**
**தாளம் : சதுஸ்ர ஏகம்**

**மெட்டு : கீரவாணி**

அக்பர்:

**ஆசிரிய விருத்தம்**

தோள்கொடுத்துத் தூக்கியே செல்லப் பலர்
தலைசாய அமர்ந் திருப்பர்
வாள்பிடித்தே புவியாளும் அரசர்கள் என்
வாசலில் பணிந் திருப்பார்
ஆள்ரசிக்க அரங்கினில் ஆடிடும் கலைமாது
அவையிலே குடியேற நினைத்து
ஆள்பவனை மணம் புரிந்து அரங்கேற
ஆணவம் கொண்டாளோ அவள்

அரசனின் புத்திரன் அரசோச்சும் வீரன்
அவன்மீது காதல் கொள்வதுதகுமா
சரசநிலை யறிந்த நாட்டியக் காரியவள்
சங்கீதம் பாடவா சலீமையணைத்தாள்
முரசொலி கேட்டதும் புயலெனச் சீறிடும்
மறவனை கோழையாக்கிடத் துணிந்தாளோ
சிரமதைச் சிதைத்து உடலையும் அறுத்து
சிறுக்கியை மண்ணில் விதைத்திடுவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்து

### பல்லவி

நாட்டையாள முடிவெடுத்தாளோ - நாட்டியக்காரி
நாட்டையாள முடிவெடுத்தாளோ

### அனுபல்லவி

நாட்டையாள முடிவெடுத்த நாட்டிய சிங்காரியின்
நாடிநரம் பறுக்க நானும் துணிந்துவிட்டேன்
(நாட்டை...)

### சரணங்கள்

நம்பியே யவனை எல்லைக் கனுப்பிவைத்தேன் - மின்னாமல்
நம்ப வைத்துக் கழுத் தறுத்தாளே
கண்டதுண்டமாக வெட்டி
கண்டவர் அஞ்சி நடுங்க
பண்டமாய் பறவைக்கீந்து
கொண்டகோபம் தணிக்க
(நாட்டை...)

மன்னன் புதல்வனை மாசுறச் செய்தாளோ - அந்தபுரத்தில்
அன்ன நடை நடக்கத் துணிந்தாளோ
சட்டதிட்டம் கொண் டொடுக்க
வெட்டித்தலை துண் டெடுக்க
கெட்டியாய் முடிவெடுத்தேன்
சட்டென முடித்து அழிக்க
(நாட்டை...)

**மந்திரி:**

அரசே! ஆத்திரமடைவதற்கு இது தருணமல்ல. ஆராய்ந்து திட்டமிடவேண்டிய நேரம். சாதுரியமாக கையாளவேண்டிய சம்பவமிது.

**அக்பர்:** (யோசித்தல்)

நல்லது அமைச்சரே... அமைச்சரே! என்னைச் சந்திக்கும்படி சலீமுக்கு தகவல் கொடுங்கள்.

**மந்திரி:**

உத்தரவு

**அக்பர்:**

அனார்க்கலியைச் சந்தித்து, அவள் சலீமை மறந்துவிடும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயுறுத்துங்கள். மன்னனின் ஆணை என்று எடுத்துரையுங்கள். அதற்கு ஈடாக பொன்னோ பொருளோ தருவதாகக் கூறுங்கள்.

**மந்திரி:**

சம்மதிப்பாளா?

**அக்பர்:**

நாட்டியமாடுபவள்தானே பொன்னைப் பொருளை அள்ளிக் கொடுத்தால் சம்மதிக்காமலா விடுவாள். அத்துடன் அவள் இந்த நாட்டில் வசிக்கக்கூடாது என்று அறிவித்து விடுங்கள்.

**மந்திரி:**

உத்தரவு மன்னா.

மந்திரி உள்ளே போதல்

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 4

## இடம் : நந்தவனம்

அனார்க்கலி முன்னே வரல்
தொடர்ந்து சலீம் பாடியவாறு வரல்

மெட்டு : வாராய் என் வஞ்சகியே (ஜெனோவா)
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை) இராகம் : சிந்துபைரவி

*சலீம்:*

கேளாய் நடன சுந்தரியே என்னைக்
கொள்ளை கொண்ட வெள்ளி நிலவே
நாளாய் உருகி நதியாய் அலைந்து
நெஞ்சார அணைத்தேனே புள்ளி மானே

*அனார்க்கலி :*

பாரோர் புகழும் வல்லோரே உம்மை
பார்க்காத நேரமோ முள்ளாய் குத்துதே
தீராத காதலால் தடுமாறு கின்றேன்
தணியாத தாகமாய் உமைத் தேடுகிறேன்

*சலீம்:*

உன்னரிய இதழின் சுவையை நானறிய
உத்தரவு தாராயோ உளம் நிறைந்தவளே
முன்னது மார்பில் முகமதைப் புதைக்க
முன்ன னுமதியை கோருறேன் கோதையாளே

*அனார்க்கலி:*

தேனதை குடித்திட தேடிடும் வண்டாக
தேவையை கூறினீர் தேனிலும் இனிமையாய்
ஆனதோ திருமணம் அயலவர் முன்னால்
அனைத்தும் உமதே அனுமதி முறையேன்

இருவரும் உள்ளே போக முனைதல்
எதிரே மந்திரி வரல்
இருவரும் திகைத்து நிற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி:

இளவரசரே! மன்னர் உங்களை அவசரமாக சந்திக்கும்படி அழைத்துள்ளார்.

**அனார்க்கலி ஆச்சரியமாகப் பார்த்தல்**

சலீம்:

நல்லது அமைச்சரே!

அனார்க்கலி:

தாங்கள் இளவரசரா?

சலீம்:

அனார்க்கலி! குழப்பமடையாதே. விபரத்தை நான் வந்து கூறுகிறேன். இப்போ விடைபெறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அமைதியாய் இரு. நான் மீண்டும் சந்திக்கிறேன்.

**சலீம் உள்ளே போதல்**
**அனார்க்கலி போக முனைதல்**

மந்திரி:

அனார்க்கலி! நில்.

அனார்க்கலி:

பிரபு!

மந்திரி:

அனார்க்கலி! நீ ஒரு நாட்டியக்காரி என்பதை மறந்துவிட்டாயா?

அனார்க்கலி:

இல்லை பிரபு.

சலீம்:

சக்கரவர்த்தி அக்பரின் புதல்வனை, வருங்கால மன்னனை நீ காதலிப்பது தகுமா?

அனார்க்கலி:

அவர் இளவரசர் என்பதை இக்கணம்தான் அறிந்தேன் பிரபு.

மந்திரி:

அப்படியானால், யார் என்று நினைத்தாய்?

அனார்க்கலி:

அவரைப் போர்வீரன் உடையில் சந்தித்தேன். போர்வீரன் உடையிலே என்னுடன் பழகினார். போர்வீரனென்றே நம்பினேன். அதனால் என்மனதைப் பறிகொடுத்தேன். இத்தனை நாளும் என்னவரென்றே வாழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி:

நடந்தவை முடிந்தவையாகட்டும். நீ இளவரசனை மறந்துவிடு.

அனார்க்கலி:

பிரபு! இது உங்களுக்கே தகுமா? நான் இளவரசனைக் காதலிக்க வில்லை. ஏழை போர்வீரனையே காதலித்தேன். உள்ளத்தில் உருவாகும் காதலுக்கு ஏற்ற இறக்கம் தெரியாது. பிரபு! என் உள்ளமெலாம் நிறைந்திருப்பவரை என்னால் மறக்க முடியாது. தயைகூர்ந்து என்னை மன்னிக்கவேண்டும் பிரபு.

மந்திரி:

உன்னிடம் நான் விளக்கம் கேட்க வரவில்லை. நீ இளவரசர் சலீமை மறக்கவேண்டும். இது சக்கரவர்த்தி அக்பர் இட்ட ஆணை. அதற்கு மாற்றீடாக நீ விரும்பும் பொன்னோ பொருளோ கேள் தருகிறேன்.

அனார்க்கலி:

பிரபு! நான் நாட்டியமாடுகிறவள்தான். ஆனால், பொன்னுக்கும் பொருளுக்கும் விலை போகிறவளில்லை. என் உயிர் போக் கினும் நான் கொண்டகாதலை மறவேன்.

மந்திரி:

நீ இதனை உசாதீனம் செய்தால் பெரும் கேட்டைச் சந்திப்பாய். இப்போ செல்லுகிறேன். மீண்டும் வருவேன் உன்னை இழுத்துச் செல்ல வீரர்களுடன்.

**மந்திரி உள்ளே போதல்**
**அனார்க்கலி விரக்கியில் நிற்றல்**

**மெட்டு : வந்ததிந்த மாய** *(தேவசகாயம்பிள்ளை, பக். 16)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சிந்துபைரவி**

அனார்க்கலி:

கொச்சகம்

யாரென்றறியா மனமதை இழந்து என் உள்ளம் புயலானதே
பாராளுகின்ற மன்னர் மகனே பாவி யென்னை ஏமாற்றியே
பாரிற்பழி யேற்கநீயும் உடந்தையாய் நின்றனையோ

தரு

மன்னாவின்று துயரமென் நெஞ்சில் - மனந்துணிந்து
மடந்தையென்மேல் முறைமறந்து காதல் கொண்டாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவரே என்னசெய்குவேன் - இப்புவியில்
என்னாலான வினையை நான் சுமந்தேனே

சிந்தைகொதித் தெழவே என்கண்ணில் - நீர்சொரிய
சிவந்தகண்ணும் அணைத்த மார்பும் அங்கலாய்க்குதே
என்னுயிரே பிரியும் விதிதானோ - தப்பென்மேல்
என்றேநீயும் எண்ணியெனை துணிந்து ஏற்பாயோ

**மந்திரி:**

என் அல்லாவே! எனக்கு நீதான் வழிகாட்ட வேண்டும். எம் காதல் நிறைவேற துணைநிற்ற வேண்டும்.

**அனார்க்கலி உள்ளே செல்லுதல்**

**திரை விலகல்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 5

## இடம் : அரண்மனை

அரண்மனையில் அக்பர் நிற்றல்

மெட்டு : **இன்னிசை** இராகம் : **நடபைரவி**

*அக்பர்:*

வாட்டியெனை வதைக்குமிந்த இளவரசர் காதலினை
நாட்டிலுளோர் அறிந்திடாமல் நலமுடன் தீர்ப்பதற்கே
பூட்டியுள்ள கதவுக்குள்ளே பாதையின்றித் தவிக்கிறேனே
கேட்டினை நீக்கவல்ல அல்லாவேயெனக் அருள்தாரீரோ

சலீம் வரல்

மெட்டு : **ஆசிரியம்** இராகம் : **சங்கராபரணம்**

*சலீம்:*

எதுவரினும் திடமுடன் நின்றெ திர்கொள்ளும் தந்தையே
நிதமுமது பதம் பணிந்து நிழல்தேடும் பலமன்னர் கொண்டு
அதிமேவு மொகலாய தேசம் அகிலத்தின் சிறந்த நாடாக
மதிநுட்ப திறனுடன் தினம் பதியாளும் தந்தையே வாழ்க

*சலீம்:*

இனிய வந்தனம் தந்தையே!

*அக்பர்:*

வா சலீம்... உன் வரவைத்தான் எதிர்பார்த்திருந்தேன்.

*சலீம்:*

சொல்லுங்கள் தந்தையே! என்னால் ஆகவேண்டிய காரியம் ஏதேனும் உண்டா?

*அக்பர்:*

இருந்தபடியால்தானே உன்னைச் சந்திக்கவேண்டி தகவல் அனுப்பினேன்.

*சலீம்:*

தங்கள் உத்தரவிற்காய் காத்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : ஏடாகிய பதுமாமணி (தேவசகாயம்பிள்ளை, பக். 10)
தாளம் : ரூபகம் இராகம் : கீரவாணி

*அக்பர்:*

இன்னல் பெரிதில்லை ஆனால் தொல்லை தருமன்றோ- என்றும்
பின்னால் வருமிடரை முன்னால் தடுத்தல் முறையன்றோ
தன்னந்தனி யாளாய் நின்று நாட்டை யாளுதலால் - உன்னை
என்னுடன் இணைத்தே உயர் வாக்கத்திடம் கொண்டேன்

கிழக்கு எல்லையோரம் எதிரி கண்வைத்துள்ள பகுதி - உடன்
அழிக்க முனையாவிடின் நாடு அழியும்நிலை வரலாமே
கொழிக்கும் செல்வமெலாம் இனி இழக்க நேரிடலாம்- இன்றே
செழிக்கும் கிழக்கை நோக்கி செல்வாய் படைகொண்டு

*சலீம்:*

என்ன சொல்கிறீர்கள் தந்தையே!

*அக்பர்:*

சலீம்! கிழக்கு எல்லையில் எதிரிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக உளவுத் தகவல்கள் கூறுகின்றன. வருமானத்தை அதிகம் ஈட்டித்தரும் அந்தப் பகுதியை கைப்பற்றுவது அவர்களின் நோக்கமாக இருக்கலாம்.

*சலீம்:*

உளவில் நிகரற்று விளங்கிய மொகலாய சாம்ராஜ்யத்து ஒற்றர்கள் இவ்வளவும் நடக்கும்வரை ஏன் வாளாவிருந்தார்கள்?

*அக்பர்:*

எல்லைக்குச் சென்ற உனது தகவல் சரிவரக் கிடைக்கவில்லை. அதனால் நடவடிக்கை மேற்கொள்ளாமல் காத்திருந்தேன். உனக்கு ஏதேனும் முக்கியமான வேலை இருக்கலாம்.

*சலீம்:*

நாட்டைக் காப்பதைவிட முக்கியமான விடயம் வேறொன்றுமில்லையப்பா.

மெட்டு : கத்துநத்தஞ் (எஸ்தாக்கியார், பக். 62)
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை) இராகம் : சங்கராபரணம்

*சலீம்:*

யுத்தம்செய்ய துணிந்தேயெதிரி
சத்தமிட்டால் சளைத்தோர்நாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகையிடர் எதிரில்வந்தாலும்
அத்தனையும் சுக்குநூறாகுமே

கண்டதுண்டமாய் கண்டவுடன்வெட்டி
அண்டைநாட்டார் அதிர்ச்சியிலாழ
கொண்டபகையை முற்றாயழித்துமே
மண்டலம்காக்க செல்லுவேன்நானே

கொட்டமடித்தவன் கோட்டைக்கடப்பதோ
எட்டிப்பிடித்து தடுத்திடமாட்டேனோ
இட்டவார்த்தை இன்னதென்றாலே
கட்டளையைாய் ஏற்றுச்செல்வேனே

*சலீம்:*

ஆணையிடுங்கள் தந்தையே.

*அக்பர்:*

எமது படைகளுடன் கிழக்கு எல்லை நோக்கி இந்தக்கணமே புறப்படு. கூடவே எமது உளவாளிகளில் சிலரையும் அழைத்துச் செல். சலீம்! உன்னிடம் பாரிய பொறுப்பை ஒப்படைத் துள்ளேன். நீ மிக அவதானமாகச் செயற்படவேண்டும்.

*சலீம்:*

ஆகட்டும் தந்தையே. இப்போதே புறப்படுகின்றேன்.

**சலீம் வெளியே உள்ளே போகுதல்**
**அக்பர் சிரித்தவாறு சலீம் போவதைப் பார்த்தல்**

*அக்பர்:*

ஹ ஹ ஹ என் திட்டத்தின் ஒரு பகுதி வெற்றி. மறுபகுதி...

**அமைச்சர் உள்ளே வரல்**

*மந்திரி:*

சக்கரவர்த்தியின் பதம் பணிந்தேன்.

*அக்பர்:*

மதி சொல்லும் மந்திரியே நீங்கள் சென்ற விடயம்...

*மந்திரி:*

இளவரசர் சலீமை தங்களிடம் அனுப்பிவைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்பர்:**

அவன் செய்யவேண்டிய கடமையைச் செய்யுமாறு பணித்து விட்டேன். அவன் இப்போது பல காத தூரம் கடந்திருப்பான். அமைச்சரே! அனார்க்கலியும் நாட்டைவிட்டு வெளியேறி யிருப்பாளே.

**மந்திரி:**

இல்லை மன்னா.

**மெட்டு : வெற்புயம் விளங்குமணி** *(மரியதாசன், பக். 11)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : நடபைரவி**

**மந்திரி:**

பொற்புயம் புகழ்படைத்த வல்லோனே - உடன்
பொங்கியெழு படையணியின் தளகர்த்தனே
தற்புகழை கொண்டிராத வித்தகனே - மொகலாய
தொன்மையை காத்துநிற்கும் தூயவனே

கன்னியவள் காதல்தனை மறந்திடாளாம் - உயிர்
களைந்திடினும் கொண்டகாதல் மாறிடாதாம்
மன்னன்மகன் என்பதையே அறிந்திடாளாம் - காதல்
மறப்பதற்கு ஏற்றவொன்று இல்லையென்றாள்

**அக்பர்:** *(ஆவேசத்துடன்)*

*மந்திரி!...*

**மந்திரி:**

வேந்தே நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் ஏற்றுக் கொள்வதாயில்லை. தன்னால் சலீமை மறக்கமுடியாது என உறுதியாகக் கூறிவிட்டாள். வேறு வழியின்றி அவளை கைது செய்து வந்துள்ளேன்.

**மெட்டு : ஆழிப்பார்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 73)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** **இராகம் : நடபைரவி**

**அக்பர்:**

மானத்தைக் காத்திடும் மரபினை
மறந்திடு என்றவள் சொல்வதா
ஈனந்தான் காதல் கொண்டதே
ஈடேறும் வழியினை மறுத்தாளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணித்தான் நாட்டைக் காத்திடும்
பேரனின் நெறிமுறை கொண்டதால்
மண்டலர் போற்றிட ஆள்வதை
மதித்திட மறந்தாளோ தீயவள்

என்றென்றும் என்னாணை நிலைத்திட
எதனையும் எதிர்கொள்ளத் தயங்கிலேன்
இன்றவள் இல்லையென்று ரைப்பதை
இலகுவில் ஏற்றிட விரைந்திடேன்

**ஆக்பர் ஆத்திர மிகுதியால் அங்குமிங்கும் நடத்தல்**

**அக்பர்:**

அமைச்சரே! என் ஆணையென்றால் அகிலமே அதிரும். இந்த அனார்க்கலி. அதுவும் நாட்டியம் ஆடுபவள் என் ஆணையை ஏற்க மறுத்தாளா?

**மந்திரி:**

ஆம் வேந்தே! அவள் தன் காதலில் உறுதியாக இருப்பதாகக் கூறிவிட்டாள்.

**அக்பர்:**

யாரங்கே!

**வீரன் வந்து தலைவணங்கி நிற்றல்**

**அக்பர்:**

காவலில் வைத்திருக்கும் நாட்டியக்காரி அனார்க்கலியை இழுத்துவா.

**வீரன் தலைவணங்கிவிட்டுப் போதல்**
**அக்பர் கோபத்தில் ஏங்கோ பார்த்தவாறு நிற்றல்**

**வீரனுடன் அனார்க்கலி வரல்**
**அக்பர் இயல்பாக திரும்பி அனார்க்கலியைப் பார்த்தல்**

**அக்பர்:**

அனார்க்கலி! என் கட்டளையை ஏற்க மறுத்தாய். அரண் மனைக்குள் குடிபுக முடிவெடுத்தாய். இது மன்னிக்க முடியாத குற்றம் உனக்கு உரிய தண்டனை... உயிருடன் சமாதி... ஆம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரே! நாளை மறுதினம் பூரண நிலவு. அன்று இவள்... இந்த நாட்டியக்காரி அனார்க்கலியை உயிருடன் சமாதி கட்டி விடுங்கள்... இது என் உத்தரவு.

*மந்திரி:*

ஆகட்டும் வேந்தே. (அனார்க்கலியைப் பார்த்து) உனக்குரிய முடிவை நீயே தேடிக்கொண்டாய் வா.

**திரை**

## இடம் : வீதி (திரைக்கு முன்)

**அனார்க்கலி பாடியவாறு முன்செல்ல வீரன் தொடர்தல்**

**மெட்டு : பதிநிகர் தந்திரியே** *(ஜெனோவா)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : நடபைரவி**

*அனார்க்கலி:*

புரியாத புதிரானேனே - என்னை
பரிகாசம் செய்யலாமோ
பரிகாரம் இல்லையாமோ - அம்மா
பழிதனைச் சுமந்தேனே

உருக்கமுள்ள அன்னையரே - எந்தன்
உள்ளத்தைப் பாருங்களே
இருளான வாழ்வினிலே - வந்த
இடர்தனை தீருங்களே

பொற்புயம் நோக்கிடேனே - அவர்
போர்வீரர் என்றிருந்தேன்
கற்பிற் களங்கமில்லை - என்னை
காத்திட யாருமில்லையே

**அனார்க்கலி உள்ளே செல்லுதல்**
**வீரர்கள் மறு திசைக்கு சென்று இரண்டு மேஸ்திரிமாரை அழைத்துவரல்.**

**திரை விலகல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 6

## இடம் : சமவெளி

**அனார்க்கலியை உயிருடன் வைத்து கற்களால் சமாதி கட்டுதல்**
**சமாதி கட்டும் வேலை பாதிக்குமேல் முடிவுற்ற நிலையில்**
**சமாதிக்குள்அனார்க்கலி நிற்பது தெரிகிறது.**

**மெட்டு : அள்ளிக்கொள்ளை** *(தேவசகாயம்பிள்ளை, பக். 77)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சிந்துபைரவி**

***அனார்கலி:***

கள்ளம் மில்லாதெனனுள் ளமதை
அள்ளிக் கொடுத்தேன் நல்வீரனொருவருக்கே - என்றும்
இம்மண்ணில் ஒன்றாய் வாள்வோமென்றே
செம்பொற்பாதம் நம்பினேன் நம்பினேனே

நாட்டிய மொன்றேஎன் வாழ்வென
காட்டிய அக்கறை பாதியில்முறிந்ததே - அன்னை
சொற்கேளாது காதலில் புகுந்ததால்
தற்கொலைக் கொப்பான நிலைக்குள்ளானே

பூவுலகில் கொண்டஆசை நல்லனவே
ஆவதெலாம் இறைவன் செயலன்றோ - கன்னியரே
என்காதல் உங்களுக்கு பாடமாகட்டும்
கண்ணெதிரே காண்பவை நிஜங்களல்லவே

***அனார்கலி:***

என் அல்லாவே! இறுதியின் விளிம்பில் நிற்கிறேன். ஆவது எல்லாம் உன்சித்தம்...

**மேஸ்திரி - 1:**

இந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு தண்டனையா?

**மேஸ்திரி - 2:**

நாமென்ன செய்வது? அரச கட்டளை மறுக்க முடியுமா?

**மேஸ்திரி - 1:**

உண்மைதான். அம்மா! எம்மை மன்னித்துக்கொள்ளுங்களம்மா. எமது கடமையைத்தான் செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேஸ்திரி - 2:*

மேஸ்திரி! மந்திரியார் வருவதற்குள் நாம் இதனைக் கட்டி முடிக்க வேண்டும். அன்றேல் எமக்கும் சமாதிதான்.

**திரை**

## இடம் : வீதி (திரைக்கு முன்)

**சலீம் ஓடிவரல்**

*சலீம்:*

*அனா! அனா! என் அனார்க்கலியை எங்கு கொண்டு சென்றார்களோ? உயிருடன் சமாதி கட்டப்போவதாக என் ஆருயிர் நண்பன் தகவல் தந்தானே! எங்கு சமாதி கட்டுடப்போவதாகச் சொல்லவில்லையே! அனா! (அழுதல்)*

மெட்டு : **தேவாரம்** இராகம் : **ஹரிஹாம்போதி**

*சலீம்:*

மலையாய் நம்பியே நானும் சூழ்ச்சியில் சிக்குண்டு தனியானேன்
அலைகிறேன் அனாவைத் தேடி அசதியும் வேதனையும் கூடி
தலையதை இழந்து மாள்தலே என்னவளைப் பிரிவதிலும் மேலாம்
கலையாது என்றும் என்பெயர் அழியா வடுவாய் நிலைத்திடுமே

*சலீம்: (வசனம்)*

பெரியோரே! தாய்மாரே! என் அனார்க்கலியை கொடியவர்கள் எங்கு வைத்துள்ளார்கள் அறிவீரா? சொல்லுங்கள்... சொல்லுங்கள்... நான் அவளைக் காப்பாற்றவேண்டும். என் காதலுக்கு உயிர் கொடுக்கவேண்டும். யாருக்குமே தெரியாதா? ஐயோ என்ன செய்வேன்? எங்கு செல்வேன்?....

**சலீம் உள்ளே செல்லுதல்**

**திரை விலகல்**

## இடம் : சமவெளி

**அனார்க்கலியை உயிருடன் வைத்து சமாதி கட்டும் வேலை முடிவுற்றது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேஸ்திரிமார் சமாதியை சுற்றுமுற்றும் பார்த்தல்

**மெட்டு : வணங்கிலர் சிரமும்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 60)*
**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : ஹரஹரப்பிரியா**

***மேஸ்திரிமார்:***

*மன்னனின்ஆணை - கேட்டு - இணங்கினோம்நாமே - ஆழி*
*மண்டலமெல்லாம் - கலி - கொண்டிடும்தானே*

*கன்னியின்துடிப்பு - உள்ளே - அடங்கிடும்தானாய் - இதனை*
*கண்டவர்துடிப்பு - நாளும் - நீண்டிடும்தானே*

*காதலைத்தடுக்க - பாவை - உயிரழித்தோமே - இனி*
*காதலர்வாழ்வில் - ஒளி - கிடைப்பதுஅரிதே*

*சாதனையில்லை - கடும் - வேதனைகொள்வீர் - நீள்*
*சோதனைவெல்ல - இது - விலையாகஇருக்குமே*

***மேஸ்திரி - 1:***

*காற்று உள்ளே போகவோ வெளியே வரவோ முடியாது. சில நாளிகையில் அனார்கலியின் உயிர் போய்விடும்.*

***மேஸ்திரி - 2:***

*உண்மைதான்... அற்புதமாக செய்துமுடித்த எமக்கு. மந்திரி சன்மானம் ஏதும் தருவார்தானே.*

**மேஸ்திரிமார் உள்ளே போதல்**

**சலீம் ஆவலோடு ஓடிவரல்**

***சலீம்:***

*அனா! அனா! என் இதய தெய்வமே! சமாதிக்குள் உன்னை அடக்கிவிட்டார்களா? உன் புன்னகை... நாட்டியச் சிறப்பு... எல்லாமே சமாதிக்குள் அடங்கிவிட்டதா? (அழுதல்)*

**சமாதியில் கைகளால் அடித்தல்**
**தலையால் இடித்தல்**

***சலீம்:***

*மோசம்போய்விட்டோம் அனா! நீசன் என் அப்பா சதிசெய்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக் கொன்றுவிட்டான். உயிருக்குயிராய் காதலித்த என்னை எல்லையில் எதிரியென்று பொய்கூறி அனுப்பிவிட்டு நான் இல்லாதநேரம் என் நெஞ்சமெலாம் நிறைந்திருக்கும் என் அனார்க்கலிக்கு இந்தத் தண்டனையா?

**மெட்டு : வந்ததிந்த மாய** *(தேவசகாயம்பிள்ளை, பக். 16)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சிந்துபைரவி**

*சலீம்:*

கொச்சகம்

காதலென்னுந் தண்ணொளிபரப்பி யெனதுள்ளம் நிறைந்தவளே
ஆதரவின்றி அந்தரித்தேநீயும் ஆவதின்றி சமாதியுள் புகுந்து
வேதனைமிகுந் துடியாய்த்துடித்து மூச்சடங்கி இன்னலுற

தரு

வந்துதித்த துயர மென்நெஞ்சில் - மனமொடிந்து
வழிமறந்து ஆணையேற்று இன்று உயிரிழந்தாயே
என்னுயிரே என்னசெய்குவேன் - இப்புவிமீதில்
என்னாலான பழியின் வடு சுமந்தேனே

வஞ்சமின்றியே மஞ்சம் வரைசென்றேன் - நீர்சொரிய
அணைத்த கரமும் இணைந்த இதழும் அங்கலாய்க்குதே
கண்ணையிழந்தேனே என்னையிழந்தேனே - தப்பென்மேல்
என்றேநீயும் எடுத்தியம்ப மறந்தாயோ

*சலீம்:*

மக்களே! கேளுங்கள் இது நியாயமா? நீதியா? காதலித்தது இருவர் ஒருவருக்கு மட்டும் இந்தத் தண்டனையா? இதைத் தட்டிக்கேட்க யாருமே இல்லையா?.

**மெட்டு : பரணித்தரு**
**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : ஹரிஹாம்போதி**

*சலீம்:*

பரணி

கொடிநாட்டி அரசாளும் தந்தையின் தீர்ப்பு
கொடுமையின் சிகரமது வேறல்லாவே
அடியேனின் உயிரெடுத்து அவளை மீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபலையின் வாழ்வுக்கு உதவுவீரே

**பரணித்தரு**

சொந்த - மகனின் தவறினை அகற்றி
சாதுவுக்குத் தீர்ப்பளித்தல் முறையோ கேளீர்
சிந்தை நிறைந்த வென்காதலியை - மன்னன்
சிறிது மிரக்கமின்றி அழித்திடல் தகுமோ
பாரோரே ஒரு பதில்கூற மாட்டீரோ

மண்ணில் - அநியாய மாயரசன் குற்றமற்ற
கன்னியுயிர் தன்னைப் பறித்தானே
விண்ணில் நாமிணைய என்னுயிரை - இக்கணமே
ஈகை யாகவே கொடுத்திடல் தவறாகுமோ
ஈடிணை யற்ற மன்னாவிது நீதிதானே

**சலீம் சமாதி தலையால் இடித்து இடித்து மயங்கி வீழல்**

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

## கூத்து மூன்று

## காசியப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச்சுருக்கம்

அனுராதபுர இராசதானி இலங்கையிலிருந்த பிரதான இராசதானிகளில் ஒன்று. அதனை தாதுசேனன் என்னும் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். தாதுசேனனுக்கு இரண்டு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். மூத்தவன் மொகல்லானன் பட்டத்து இராணியின் மகனாவான். இளையவன் காசியப்பன் வைப்பாட்டியின் பிள்ளையாவான். தாதுசேனன்; தனது சகோதரியின் மகனும் சேனாதிபதி பதவி வகிப்பவனுமாகிய மீகாரன் என்பவனுக்கு தனது மகளைத் திருமணம் செய்துவைத்தான்.

ஒருநாள், கணவன் மனைவியிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறில் தனது புதல்விக்கு மீகாரன் ஏற்படுத்திய இரத்தக் காயத்தைக் கண்டு கோபமுற்று, மீகாரனின் தாயான தனது சகோதரியை நிர்வாணமாக்கி எரியூட்டிக் கொலை செய்வித்தான் தாதுசேனன்.

அவ்வாறு தனது தாயைத் தண்டித்ததற்கு தாதுசேனனைப் பழிவாங்கத் துடித்தான் மீகாரன். தாதுசேனன், மொகல்லானனுக்கு முடி சூடிட எடுக்கும் முயற்சியைப் பயன்படுத்தி, உயர்குலப் பெண்ணிற்குப் பிறக்காதவனும், சிற்பங்கள் செதுக்குவதிலும் ஓவியங்கள் வரைவதிலும் மட்டும் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த காசியப்பனுடன் சேர்ந்து, தனது தாய்மாமன் தாதுசேனனுக்கு எதிராக அவன் மனதை மாற்றி, அவனுக்கு அரசாட்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பழிக்குப்பழியாக தாதுசேனனை நிர்வாணமாக்கி உயிருடன் சமாதிகட்டவும் செய்வித்தான்...

## பாத்திரங்கள்

கட்டியகாரர்
காசியப்பன்
மீகாரன்
மாலினி
தாதுசேனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியப்பன்

## காட்சி - 1

இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

சபை விருத்தம்

மெட்டு : **விருத்தம்** இராகம் : **சங்கராபரணம்**

அங்கம் குலுங்கிட தங்கநிறக் கோலினை ஏந்தி
கிங்கிணித் தாளமும் சலங்கையும் சேர்ந் தொலிக்க
சிங்கார மாநகர மக்களுக்கு சங்கதி கூறவென்றே
மங்கல மொழி கட்டியகாரர் சபைதனில் வருகிறாரே

**கட்டியகாரர் ஆடியவாறு வரல்**

மெட்டு : **மாட்சிமை மிகு** *(பண்டாரவன்னியன், பக். 01)*
தாளம் : **சதுஸ்ர ஏகம்** (மிஸ்ர நடை) இராகம் : **சங்கராபரணம்**

*கட்டியகாரர்:*

அநுராத புரிமன்னன் கதைகூற - நாமும்
அணியாக வருகிறோம் பாருங்கோ
துணிவோடு அரசாண்ட தாதுசேனன் - ஈற்றில்
துயர்கொண்ட கதையினை கேளுங்கோ

இருதாரம் தனைக்கொண்ட முடிமன்னன் - கண்ட
இடர்மிகு வாழ்வையும் அறியுங்கோ
பெருவாழ்வு அழிந்திடக் காரணம் - என்றே
பாருளோர் அறியவும் வாருங்கோ

ஒருதாரம் பெற்றவன் அரசனாம் - என
ஒருமனதாய் முடிவு எடுத்தாராம்
மறுதார மகனிதை அறிந்ததும் - நடந்த
மர்மத்தின் தொடரினை பாருங்கோ

**கட்டியகாரர் ஆடியவாறு உள்ளே செல்லுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியப்பன் வரவு

மெட்டு : சிறுகுமதியிதளி *(தேவசகாயம்பிள்ளை, பக். 19)*
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை) இராகம் : நடபைரவி

*காசியப்பன்:*

சிற்றுளியெடுத்து அற்புதச் சிலைகள் வடித்தே - எழில்
செழித்து நின்றொழிர விழித்தபார்வை நிலைத்திட
கற்பனைச் சிலைகண்டு யிரோட்டமுள்ள தென்று - தொட்டு
களித்திடும் காட்சி கலைத்திறனுக்கு சாட்சி

இத்தனை சிறப்பி வித்தரைவாழும் காசியப்பன் - எனும்
இணையிலா கலைஞன் உங்கள்முன் வந்தேனே
வித்தகர் போற்றிட விந்தையாய் வடிவமைத்து - நாட்டின்
வளத்திற்கு வளம்சேர்க்கும் காசியப்பன் நான்தானே

**திரை விலகல்**

## இடம் : சிற்பக்கூடம்

**சிற்பக்கூடத்தைப் பார்வையிட்டுவிட்டு சிலையைச் செதுக்குதல்**

மெட்டு : பூரண சந்திரோதயம் *(கருங்குயில் குன்றத்துக் கொலை)*
தாளம் : ஆதி இராகம் : சிந்துபைரவி

*காசியப்பன்:*

கற்பனை மெருகேறி சிலையானதோ எந்தன்
கைகளில் சிற்றுளிதான் விளையாடுதோ எந்த
விற்பனரும் போற்றிநிற்க அற்புதமா யமைந்த
விழிகளின் எழில்தான் வினோதமா யமைந்ததே

கண்கவரும் சிற்பத்திற் காதலைக் கொண்டோரின்
கருத்து இனிதாகுமோ யாரதை அறிவார்
புண்பட்ட நெஞ்சத்தின் புணுகாக நிலைநின்று
பண்ணாக இதம்தந்து பரிகாரமா யமைந்ததே

**காசியப்பன் சிலை செதுக்கியவாறு இருத்தல்**

**மீகாரன் வரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : கனலொடு முந்திய** *(தேவசகாயம்பிள்ளை, பக். 109)*

**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

***மீகாரன்:***

அனுராத புரமெனும் நாட்டிலே
அலையெனப் புரளும் படைகொண்டு
அணிசேர நெறிகொண்டு நடத்திடும்
அதிவீர தளபதி நானன்றோ

அனலோடு சேர்ந்திட்ட தீயைப்போல்
அயல்நாடார் விதைத்த இடர்கண்டு
தணலாகும் முன்னமே தடையாக்கிடும்
தன்மான மீகாரன் நானல்லோ

தாய்நாடு என்கின்ற உணர்வோடே
துணைசெய் கின்றோர் துயர்கண்டு
சேயென்றே அணைத்துத் துணையாகும்
செம்மலாம் மன்னரின் மருகனும்நானே

***காசியப்பன்:***

மைத்துனரே! நாட்டின் சேனாதிபதியே! தாங்கள் இங்குவர இக் குடில் என்ன பேறுபெற்றதோ?.

***மீகாரன்:***

வரவேண்டிய நேரம் வந்தது உடன் சந்திக்க ஓடோடி வந்தேன்.

**காசியப்பன் எழுந்து நிற்றல்**

***காசியப்பன்:***

ஏதோ முக்கியமான விடயம் போலிருக்கிறது. சொல் மீகாரன்.

***மீகாரன்:***

இந்த நாட்டை ஆளும் உரிமை உனக்கும் உண்டுதானே.

***காசியப்பன்:***

அதிலென்ன சந்தேகம்.

***மீகாரன்:***

சந்தேகம் கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது.

***காசியப்பன்:***

சமயம் வரும்போது தந்தை பார்த்துக்கொள்வார். இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீகாரன்:*

காசியப்பா நீ சிற்பங்களையும் ஓவியங்களையும் புரிந்து கொண்ட அளவிற்கு உன் தந்தையைப் புரிந்து கொள்ளாத வனாகவே இருக்கிறாய்.

*காசியப்பன்:*

என்ன சொல்கிறாய் மீகாரா?

*மீகாரன்:*

உன்னைப் புறக்கணித்து அவசர அவசரமாக உன் சகோதரன் மொகல்லானனுக்கு பட்டம் சூட்டப்போகிறார் உன்தந்தை.

*காசியப்பன்:*

உண்மையாகவா?... இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**மெட்டு : ஆழிப்பார்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 73)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** **இராகம் : நடபைரவி**

*காசியப்பன்:*

என்தந்தை இழிசெயல் செய்வதோ
ஏனிந்த எண்ணத்தை கொண்டாரோ
என்ஆட்சி கைமாறிச் செல்வதா
ஏற்றுநான் மௌனமாய் இருப்பேனோ

ஈனந்தான் இச்செயல் இம்மண்ணில்
இதையேற்க என்மனம் இணங்குமோ
கூனித்தான் குழிதோண்ட நினைத்தாரோ
குதர்க்கத்தை கருவிலே அழிப்பேனே

*மீகாரன்:*

மெச்சினேன் மைத்துனன் கோபத்தை
மகிபனாய் வாழ்ந்திடும் ரோசத்தை
மிச்சத்தை வாங்கிடும் கோழையல்ல
மங்காத உணர்வினைக் கண்டேனே

*மீகாரன்:*

நன்று காசியப்பா. அடங்கிக் கிடக்க நீ கோழையல்ல. வீரமிகு கலைஞன்.

*காசியப்பன்:*

உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீகாரன்:*

இல்லை. உண்மையை உணர்ந்துள்ளாய். நீ ஆத்திரத்தை வெளிப்படுத்துவதில் மட்டும் நின்றுவிட்டால் அது அர்த்த மற்றதாகிவிடும்.

*காசியப்பன்:*

என்ன செய்யவேண்டும்?

*மீகாரன்:*

இப்போதே உன் தந்தையிடம் செல். உனது உரிமையைக் கேள்.

*காசியப்பன்:*

நிச்சயமாக... இன்று மாலையே தந்தையைச் சந்திக்கிறேன்.

*மீகாரன்:*

நான் விடைபெறட்டுமா?

*காசியப்பன்:*

ஆகட்டும்.

**காசியப்பன் சிலையோரமாக சிந்தனையுடன் இருத்தல்**
**மாலினி வரல்**

**மெட்டு : பூவுல கெல்லாம் விளங்க** *(தேவசகாயம்பிள்ளை, பக். 52)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : நடபைரவி**

பாரிவள்ளல் பேரெடுத்த பண்டுமன்னர் பூட்டி
புகழ்பெருக ஆட்சி செய்தோன் குலமகள்தானே
பார்புகழும் அனுராதபுரி மன்னன் மகன்தேடி
பாவைநானும் ஓடிவந்தேன் கலையகம் நோக்கி

அந்தரங்க மாகப்பேசி வருகிறோம் பலநாளாய்
அண்ணல்முகம் காணாவிடின் உறக்க மில்லைத்தானே
எந்தவினை வந்தபோதும் எடுத்துரை பலகூறி
எண்ணித்துணி யச்செய்யும் மாலினி நான்தானே

*காசியப்பன்:*

வரவேண்டும் என் உள்ளம் கவர்ந்தவளே.

*மாலினி:*

வார்த்தையிலிருக்கும் மகிழ்வு வதனத்திலில்லையே.

*காசியப்பன்:*

உண்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாலினி:**

காரணத்தை நான் அறியலாமா.

**காசியப்பன்:**

என் சகோதரன் மொகல்லானனுக்கு முடிசூட்டப் போகிறா ராம் என்தந்தை.

**மாலினி:**

இது துரோகமில்லையா?

**காசியப்பன்:**

தந்தையின் இந்த முடிவுக்கு ஏதோவொரு காரணமிருக்கலாம். நான் பட்டத்துராணியின் மகனல்லவே.

**மாலினி:**

நீங்கள் அரசனுக்கு மகன்தானே.

**காசியப்பன்:**

இருந்தாலும் நான்...

**மாலினி:**

போதும். அது உங்களுடைய தப்பு அல்ல. நாடாளும் உரிமை உங்களுக்கு உண்டு. மன்னன் என்ற மகத்துவம் உங்களுக்கு உண்டு. ஐயங்களை விடுத்து உரிமையைப் பெற்றுக் கொள் ளுங்கள்.

**காசியப்பன்:**

ஆகட்டும் மாலினி.

**மாலினி:**

இப்போது உங்கள் முகத்தில் ஒளியைக் காண்கிறேன். மகிழ் வைக் காண்கின்றேன்.

**காசியப்பன்:** (புன்னகைத்தல்)

மாலினி!

**மெட்டு : கச்சளமொத்து நெய்** *(அலங்காரரூபன், பக். 78)*

**தாளம் : ஆதி** **இராகம் : நடபைரவி**

**காசியப்பன்:**

சந்திரனையொத்த சந்தண முகத்தாளின்
சிந்தைகுளிர அன்போ டுருண்டு
கந்தோதம் மலர்மேனி நெருக்கியணைத்து
கற்பனை போல்மனம் செருக்கி
களிக்கக் கிடையாதோ - முகம்
முளிக்கக் கிடையாதோ - மையல்
அளிக்கக் கிடையாதோ - பரி
மளிக்கக் கிடையாதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைநிறப் பொட்டசையும் நெற்றியில்
இச்சைபெற சுட்டியசையச் சொர்க்கத்தைப்
பருக்கி உருக்கும் கன்னிப்பூண்முலை
நெருக்கி நெருக்கி கிள்ளிக் கனலீலை
படிக்கக் கிடையாதோ - இதழ்
கடிக்கக் கிடையாதோ - சுவை
குடிக்கக் கிடையாதோ - கால்
பிடிக்கக் கிடையாதோ

**மாலினி:**

சந்தோஷத்தில் உங்களையே மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது.

**காசியப்பன்:**

உண்மைதான். என்னையே மறந்து நிற்கிறேன் என் சிலைகளிலொன்று உயிர்பெற்றுவிட்டதோ? என்ற ஐயத்தோடு.

**மாலினி:**

இந்தப் பேச்சுக்கு மட்டும் குறைவில்லை.

**மெட்டு : கொஞ்சும் கிளி மொழி** *(விஜய மனோகரன், பக். 56)*
**தாளம் : ஆதி** **இராகம் : கீரவாணி**

**காசியப்பன்:**

கற்பனை மெருகேறிய கற்சிலைபோலே
காட்சிதரும் மெல்லிடையாளே
சிற்பியின் உளிபட்ட குரும்பையாய்
சிலிர்த்திடும் கொங்கையாளே

**மாலினி:**

பஞ்சின்மெது கொண்ட கரங்களால்
பங்கமின்றி படைப்பவரே
கெஞ்சத் தோன்றும் விழிகளையும்
கச்சிதமாய் படைப்பவரே

**காசியப்பன்:**

நித்தமும் இன்பங் கிளர்த்திடும்
நிகரற்ற மேனியாளே
முத்தமொன்று தாராயோ எனக்கு
முத்தமொன்று தாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாலினி:*

நீங்கள் சிற்பியல்ல பெருங் கவிஞர்தான்.

*காசியப்பன்:*

நீ மட்டும் மாதிரியாய் நின்றிருக்காவிடில் உயிரோட்டமுள்ள இத்தனை சிலைகளையும் வடித்திருக்க முடியுமா? இத்தனை ஓவியங்களை வரைந்திருக்க முடியுமாவா... என் அருகிலே வா.

**காசியப்பன் மாலினியை அணைப்பதுபோல் வரல்**
**மாலினி விலகிச் செல்லுதல்**

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 2

## இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

தாதுசேனன் வரவு

மெட்டு : சுப சுப சுபகுண (கண்டி அரசன், பக். 07)
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை) இராகம் : ஹம்சத்வனி, கீரவாணி

*தாதுசேனன்:*

தருமத்தை ஒருமித்து நிறைத்தவன் - புத்த
தவநெறி முறைகொண்டு ஆளுவோன் - அருள்
வரையொத்த புயசித்திர ஜெயமுற்றிய எனவல்லோர்துதி
வரப்பெற்ற மிகுவல்ல விற்பன்னன் நானே

திரிலோகமும் புகழும் உயர்திண்ணலன் - அனுராத
புரியாளும் புகழ்பெற்ற மன்னவன் - மதப்
பரிபாலன் எனவுலகோர் மனமகிழ்வில் புகழ்கின்ற
பலங்கொண்ட தாதுசேன மன்னனும் நானே

திரை விலகல்

## இடம் : அரண்மனை

தாதுசேனன் மாளிகையில் அமர்தல்
காசியப்பன் வரல்

மெட்டு : கனகங்கள் ஒளிதங்கு (தேவசகாயம்பிள்ளை, பக். 01)
தாளம் : சதுஸ்ரஏகம் (மிஸ்ர நடை) இராகம் : ஹரஹரப்பிரியா, சாருகேசி

*காசியப்பன்:*

பகலவனோ டிருமணிகள் ஒளிவிளங்கு
பதக்கமணி மார்பினான் - காதில்
புகலுமணிக் குண்டலமும் கவசமும்
பிரகாசம் கொண்ட மன்னவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காமல் குலங்காத்து வளஞ்சேர்த்து
களிகொள்ளும் நெஞ்சினான் - வயல்
நிலங்காத்து குளங்கட்டி நீர்ப்பாச்சும்
நியமத்தை காத்திடும் மன்னரே

**தாதுசேனன்:**

வா காசியப்பா

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

**காசியப்பன்:**

எந்தையே எனைப்பெற்ற தந்தையே சரணம்
கந்தமலர ணிந்தஅழகுறு காவலனே சரணம்
வந்தார்க்கு துணையாக இருப்பவரே சரணம்
சிந்தைகுளிர வணங்கினேன் பூபதியே சரணம்

**தாதுசேனன்:**

காசியப்பா உன்னைக் கண்டு நீண்ட நாட்களாகிவிட்டது. உனது சிற்பக் கூடத்திலிருந்து வருவதற்கு இப்போதுதான் நேரம் கிடைத்ததா?

**காசியப்பன்:**

இங்கு வராமையால்தான் நடப்பவை ஒன்றையும் அறியாது இருந்துவிட்டேன்.

**தாதுசேனன்:**

உண்மைதானே! வந்தால்தானே அறியமுடியும்

**மெட்டு : ஆசைமருமகன்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 39)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : சிந்துபைரவி**

**காசியப்பன்:**

எனைப்பெற்ற தந்தையை எண்ணித் துடிக்கிறேன்
என்னென்று சொல்லுவேன் - துயர்
ஏதென்று சொல்லுவேன்

வண்ண மயமான தேசம் இத்தேசம்தான்
வந்தவர் போற்றும் வளமான நாட்டினை
எண்ணாத வகையில் ஏற்றத்தை தந்தநீர்
என்னென்று மோசம் செய்திடத் துணிந்தீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாதுசேனன்:**

அந்நியர் மோசம் செய்யவுந் துணியலாம்
ஆளுவோன் உன்தந்தை ஐயமோ கொள்வதா
எந்தையோர் ஆண்டிட்ட ஏற்றவழி செய்த
என்னையும் மோசம் செய்தவ னென்பானேன்

**காசியப்பன்:**

உரத்துச் சொல்வதால் உண்மை மறையுமா
உறவாடிக் கெடுத்திட்ட தந்தையும் நீரே
ஊரெலாம் காத்திடும் உத்தம மன்னனென்று
உண்மையை புதைத்தல் உங்களுக் காகுமோ

**தாதுசேனன்:**

காசியப்பா! உன் மனதில் மறைந்துள்ள உண்மையை நான் அறியலாமா?

**காசியப்பன்:**

தந்தையே! நான் உங்கள் மகன்தானே.

**தாதுசேனன்:**

ஏன் இந்த சந்தேகம்?

**காசியப்பன்:**

அப்படியென்றால் என்னைப் புறக்கணித்து எதற்காக மொகல்லானனுக்கு முடிசூட முடிவெடுத்தீர்கள்.

**தாதுசேனன்:**

ஓ! இதுவா உன் பிரச்சனை. காசியப்பா! உன்னுடைய பாதை வேறுபட்டது. எப்போதும் சிற்பம், ஓவியம் என்பதிலேயே உன் கவனம் இருக்கின்றது. அப்படிப்பட்ட உன்னால் நாட்டை நிர்வகிக்க முடியாது.

**மெட்டு : சுவைற்றவளசங்க** *(தேவசகாயம்பிள்ளை, பக். 80)*
**தாளம் : சதுஸ்ரஏகம் (மிஸ்ர நடை)** **இராகம் : ஹம்சத்வனி, கீரவாணி**

**காசியப்பன்:**

நாட்டை மொகல்லானனுக்கு நீட்டிக் கொடுப்பதற்கு
நாட்டம் கொண்டவிந்த ஈனச்செய லெதற்கு
மனிதக் குணமுமற்று புனிதத் தனமுமற்று
வினவல் எதுவுமற்று அரசின் மரபுமற்று
நெறிகுன்றி அறிவின்றி பிறரறியா முறைநின்று
அறமற்ற வழிநின்று துயரெனக்கு செய்தீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாதுசேனன்:**

காசியப்பா நான் சொல்வதைக் கொஞ்சம் கேளப்பா.

**காசியப்பன்:**

நீசத்தனம் புரிந்தால் நாசம் விளையுமென்று
நேசமிகுந்த தந்தை நினைவிற் கொள்ளமறந்து
பொறுமைக் குணமயர்ந்து சிறுமைத் தனமுயர்ந்து
கருவறுக்க நினைத்த கயமைத் தனமழித்து
கொடுவிப்போ அரசாட்சி குடியாள முடியாட்சி
விடிவெள்ளி என்வாழ்வில் தோன்றவே நிகழட்டும்

**தாதுசேனன்:**

காசியப்பா! உன் கோபமும் வேகமும் நியாயமானதுதான். நான் சொல்வதைச் சற்றுப் பொறுமையாய்க் கேள். நாட்டை நிர்வகிக்கக்கூடிய ஒருவனிடமேதானே நாட்டின் ஆட்சியை ஒப்படைக்க முடியும். அதற்கு ஏற்றவன், பொருத்தமானவன் மொகல்லானன்.

**காசியப்பன்:**

எனக்கு நாட்டை நிர்வகிக்கத் தெரியாது என்று முடிவெடுத் தீர்களா?

**தாதுசேனன்:**

புலிக்குப் பிறந்தது பூனையாகாது.

**காசியப்பன்:**

அல்லது ஆசைநாயகியின் மகனென்று புறக்கணித்தீர்களா?

**தாதுசேனன்:**

இல்லை காசியப்பா. உன் கவனம், எண்ணம், சிந்தனை எல்லாம் சிற்பக் கலையுடனேயே நிற்கிறது. நாட்டைப் பற்றி சிந்திப்பதே கிடையாது. யாரே ஒருவரின் தூண்டுதலால்தான் நீ இதனைக் கையிலெடுத்துள்ளாய். உன் கோபத்தை விடுத்து அமைதியாக யோசித்துப் பார். எல்லாம் உனக்குப் புரியும். அதன்பின் என்னை வந்துபார். இப்போது ஓய்வெடுத்துக்கொள்.

**காசியப்பன் கோபத்துடன் வெளியேறல்**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 3

## இடம் : சிற்பக்கூடம்

**காசியப்பன் சிற்பத்தின் அருகில் நின்று யோசித்தல்**

**மெட்டு : ஐயைய்யோ கெட்டேனே** *(தேவசகாயம்பிள்ளை, பக். 41)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : சிந்துபைரவி**

*காசியப்பன் :*

துரோகத்தைக் கண்டேனே தந்தையால்
துயரத்தைக் கொண்டேனே - இப்போ
பாராள முடியாத பாவியாகியே
படுகுழி வீழ்ந்திட லானேனே

என்நெஞ்சில் உள்ளதெலாம் துயரம்
எவரிடம் சொல்வதால் தீரும் - இதை
அன்னமிட்ட அன்னை அறிந்தாலும்
ஆவன செய்திட முடியாதே

துரோகத்தைச் செய்தவர் மகிழ்வாரா
துன்பத்தில் நான்வீழ - கௌதமர்
விரோதத்தை விலக்கியே ஆண்டிடும்
வரத்தினை யெனக் கருள்வாரே

**பாடல் முடிந்ததும் மீகாரன் வந்து நிற்றல்**

*மீகாரன்:*

காசியப்பா! என்னசொன்னார் உன்தந்தை.

*காசியப்பன்:*

சிற்பியான எனக்கு நாட்டை நிர்வகிக்கத் தெரியாது என்று முடிவாகக் கூறிவிட்டார். அதனால்...

*மீகாரன்:*

அதனால்?

*காசியப்பன்:*

எனக்கு ஆட்சியுரிமை இல்லையாம். மொகல்லானனுக்கே முடிசூடப் போறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீகாரன்:*

நினைத்தேன் இதுதான் நடக்குமென்று... இப்போது கண்டாயா காசியப்பா உன் தந்தையின் மாற்றாந்தாய் மனப்பாண்மையை?

**மெட்டு : கத்துநத்தஞ்** *(எஸ்தாக்கியார், பக். 62)*
**தாளம் : (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை) இராகம் : சங்கராபரணம்**
**(சோகம்) மிஸ்ரசாபு இராகம் : வகுளாபரணம்**

*மீகாரன்:*

தந்தைஆட்சியைப் பறித்தேயுன்னை
துரத்திவிடவே துணிந்தாரோ
முந்தைநீ செய்தசேவைகள்
முற்றிலும் மறந்துவிட்டாரோ
உன்னைமிகக் குறுகவைத்தார்
சின்னமதி கொண்டதந்தை
முன்னுருமை இல்லையென்றால்
மென்னுறவை பேணுவதா

*காசியப்பன் :*

மானபங்கம் என்றேகொள்வேன்
மாகொடுமை என்றும்சொல்வேன்
ஈனத்தனமாய் இடிசொல்லுரைக்க
இதயமென்ன இரும்பாஅவர்க்கு
மன்னவனாக தகமையில்லையோ
வன்மனமன்றி வேறொன்றில்லை
சின்னவயதில் கூறியவார்த்தைகள்
சின்னபின்னமாய் சிதறிடச்செய்வதா

*மீகாரன் :*

இந்நாடென்றும் உனக்குச்சொந்தம்
இனியும்நீ ஏமாறவேண்டாம்
சிந்தைநிறைய சிறுகுணங்கொண்ட
சிறியோனாய்தந்தை உருமாறினாரே
கெஞ்சினாலுமொரு பயனில்லையன்றோ
வஞ்சகத்தைவெல்ல வஞ்சகமேதுணை
அஞ்சிடாமலினி அடியேன்சொற்கேள்
மஞ்சத்திலமர இதுவொன்றேவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீகாரன்:**

காசியப்பா இது மாபெரும் சூழ்ச்சி, உனக்கிழைத்த வஞ்சகம், வரலாற்றை மாற்றியமைக்கும் திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற விடக்கூடாது.

**காசியப்பன்:**

நாம் என்ன செய்யமுடியும்?

**மீகாரன்:**

சூழ்ச்சியை சூழ்ச்சியால்தான் வெல்லவேண்டும். வஞ்சகத்தை வஞ்சகத்தால்தான் தோற்கடிக்க முடியும்.

**காசியப்பன்:**

எவ்வாறு?

**மீகாரன்:**

சூழ்ச்சியின் சூத்திரதாரி என் மாமன் தாதுசேனன். அவனைக் கொன்றுவிட்டால்....

**காசியப்பன்:**

மீகாரா! நீ என்ன சொல்கிறாய்? நீ கொல்லச்சொல்வது என் தந்தையை.

**மீகாரன்:**

உண்மை. அப்படியில்லையென்றால் உனக்கு என்றுமே ஆட்சி கிடையாது.

**காசியப்பன்:**

அரசாட்சி செய்வதற்காக தந்தையைக் கொல்வது தர்மமா?

**மெட்டு : வாரும் வாரும நீலம்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 52)*
**தாளம் : (வீரம்) சதுஸ்ர ஏகம்** **இராகம் : ஹரிஹாம்போதி**
**(சோகம்) மிஸ்ரசாபு** **இராகம் : சங்கராபரணம்**

**மீகாரன்:**

கேளும் கேளும் காசி யப்பா - வந்த
கேடுநீங்கவழி கேளப்பா - உயர்
ஆளும்மரபில் பிறந்திலைநீ - அதன்
அரங்கேற்றமரசில்லை அறிவாய்

**காசியப்பன்:**

பித்தனைப்போல்நான் நின்றேன் - தினம்
பாசம்வைத்ததந்தை வெறுத்தார் - உளம்
மெத்தச்சினங்கொள்ளச் செய்தார் - அதனால்
மன்னராணைதனை மறுப்பதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீகாரன்:*

அரசோச்சவியலாதென உரைத்தார் - என்றும்
அடிமையென்றேயுனை நினைத்தார்
முரசொலிகேட்பதைத் தடுத்தார் - நீயும்
முட்டாளென்றேயவர் நினைத்தார்

*காசியப்பன்:*

ஆயினுமவரெந்தன் தந்தை - என்றும்
அவர்சொற்கேட்பது கடனே
தீயதைநினைப்பது வினையே - இந்தத்
தரணியில்கெடுவினை தருமே

*மீகாரன்:*

காசியப்பா! உன் தயக்கத்திற்கு அர்த்தமேயில்லை. புராணங்களை, இதிகாசங்களை புரட்டிப்பார். அரசாட்சிக்காக தந்தையை, தாயை, சகோதரர்களைக் கொன்றவர்களின் வரலாறு நிறையவேயுண்டு.

*காசியப்பன்:*

மீகாரா! எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல் இருக்கிறது. ஒருபக்கம் தந்தை. மறுபக்கம் ஆட்சியுரிமை.

*மீகாரன்:*

இரண்டில் எது தேவையென்று முடிவுசெய்துகொள். அரசிழந்து அநாதையாய் அலையப் போகிறாயா? மொகல்லானனுக்கு கைகட்டி சேவகம் செய்யப்போகிறாயா? அல்லது உன் தந்தையை இழந்து அரசுரிமையைப் பெறப்போகிறாயா?

*காசியப்பன்:*

(சிறிது நேரம் மௌனமாக யோசித்தல்)
முடிவெடுத்துவிட்டேன் மீகாரா, முடிவெடுத்துவிட்டேன்.

**மெட்டு : கல்வெட்டு சிந்து**

**தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)** **இராகம் : கீரவாணி**

*காசியப்பன்:*

அண்டம் நிறைந்த கோளங்கள் நிலைமாறினும்
அட்டதிசையால் கேடுவரினும்
அலைகடல்கள் சீறினும் மலைநிலைகள் பெயரினும்
அகிலமே பீடை தரினும்
காண்டா மிருகங்கள் திரண்டு காடுகளையழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுந்துயர் தந்திடினும்
காசியப்பன் நாம மென்றிடில் புவியெலாம்
கலங்கி நடுங்கிடாதோ

அரசுரிமை இல்லை யென்றேயென் முடிபறிக்க
ஆசை கொண்ட தாதுசேனன் கிஞ்சித்தேனும்
அஞ்சிடாமல் வஞ்சித்து நெஞ்சினில் குத்திட
எண்ணங் கொண்ட அவனை நானே
துண்டு துண்டாகவே யங்க மேங்கிட வெட்டி
தொடர் கூளியின் முன்னவே
தொல்லுலகில் என்னாண்மை வல்லபங் காட்டுவேன்
கேட்டவர் கலங்குமாறே

**மீகாரன்:**

உரிய முடிவை எடுத்திருக்கிறாய். விரைவில் ஆட்சி உனதே.

**காசியப்பன்:**

*மீகாரா! இதை நிறைவேற்றுவது யார்?*

**மீகாரன்:**

*நீ...*

**காசியப்பன்:**

*நானா? என்ன உனக்கு பைத்தியமா பிடித்துவிட்டது?*

**மீகாரன்:**

காசியப்பா ஆவேசம் கொள்ளாதே. உன் ஒருவனால்தான் இதனை இலகுவாகச் செய்ய முடியும்.

**காசியப்பன்:**

*என்ன சொல்கிறாய் மீகாரா?*

**மீகாரன்:**

உன்தந்தை இதுவரை உன் சிற்பக்கூடம் பார்க்க வந்ததுண்டா? இல்லையே. இதை எடுத்துக்கூறி நீ வடித்து வைத்திருக்கிறாயே அற்புதமான சிற்பங்கள், அழகான ஓவியங்கள். அதைப் பார்வை யிட வருமாறு அவரை அழைத்துவா.

**காசியப்பன்:**

*அழைத்துவந்து...*

**மீகாரன்:**

இங்கே அவரை உயிருடன் வைத்து சமாதி கட்டிவிடு.

**காசியப்பன்:**

*உயிருடன் சமாதியா? இது தகுமா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீகாரன்:**

காசியப்பா நீ இன்னமும் அறியாப் பருவத்திலிருக்கிறாய். உன் தந்தை ஜனகங்கை கால்வாய்க்கு அணை கட்டும்போது அணை கட்டிவந்த பாதையில் தியானத்திலிருந்த துறவி ஒருவரை அவ்விடத்திலிருந்து அகற்றாமல் அவரையும் அணைக்குள் வைத்து உயிருடன் மண்ணால் மூடினார் உன்தந்தை.

**காசியப்பன்:**

துறவியை உயிருடன் புதைத்தாரா? இது கொடுமையல்லவா?

**மீகாரன்:**

இதுமட்டுமா! என் தாயை நிர்வாணமாக்கி... பலரும் பார்க்க உயிருடன் எரியூட்டி துடிதுடிக்கக் கொன்றாரே. (அழுதல்)

**காசியப்பன்:**

தனது தங்கையை இப்படிக் கொலை செய்ய எப்படி மனம் வந்தது? இத்தனை கொடியவரா என் தந்தை? இவை ஒன்றையும் நான் அறியாது இருந்துவிட்டேனே!

**மீகாரன்:**

ஆம்... கொடியவன்... கொடியவன்... கொடியவனை அழிப்பது கொடுமையில்லை, நியாயம். அநீதியை அழிப்பது அதர்மமல்ல, தர்மம். நீ உன் எதிர்காலத்திற்காக இன்றே உறுதியெடுத்துக் கொள்... உன் முடிவில் உறுதியாய் நில்...

**காசியப்பன்:**

அமைதியாய் இருக்கவிடு மீகாரா. எனக்கு யோசிக்க அவகாசம் வேண்டும்

**மீகாரன்:**

எடுத்துக்கொள். இப்போது நான் சென்றுவருகிறேன்.

**மீகாரன் செல்லுதல்**

**காசியப்பன் தயைசைத்துவிட்டு யோசித்தவாறு நிற்றல்**

**மாலினி வரல்**

**மாலினி:**

சிலையைச் செருக்குபவரே சிலையாகிய மர்மமென்ன?

**காசியப்பன்:**

மாலினி!.. எப்போ வந்தாய்?

**மாலினி:**

ஏன் நான் வந்த தருணம் சரியில்லையோ?

**காசியப்பன்:**

அப்படியொன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : அஞ்சுகமே (தேவசகாயம்பிள்ளை, பக். 35)
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : ஹரிஹாம்போதி

**காசியப்பன்:**

மாலினியே மகிமைசேர் காதலியே - எந்தன்
மனக் குறையினைச் சொல்லக் கேளாய்
நூலினில் ஆடுகிறதேயென் உள்ளம் - வாழ்வு
நாதியற்ற நிலையாக மாறிட லாகுமா

அரசுரிமை கிடைக்குமென் றிருந்தேன் - தந்தை
அதன் தகுதி எனக்கில்லை என்றாரே
உரமேறிய என்கையால் அவரைச் சிறையிட்டு
உயிர் பறித்தலன்றி வேறொன்று மில்லையே

**மாலினி:**

கண்ணெதிரே உணர்வின்றி நொந்துவாடி - தினம்
கலங்குவதை நானறிவேன் கண்ணா
கண்ணாகவே மதிக்கின்ற அரசுரிமையை - பெறவே
கண்ணின் இமையாய் நானிருப்பேன் வல்லவரே

**காசியப்பன்:**

மாலினி! எனக்கு அரசுரிமை வேண்டுமென்றால் என் தந்தையைக் கொல்வதைவிட வேறுபாதை இல்லையென்று மீகாரன் கூறுகின்றான். என்ன சொல்வதென்று புரியவில்லை.

**மாலினி:**

... மீகாரன் சரியான பாதையையே தெரிவுசெய்து கூறியுள்ளார். என் வாழ்வில் நடந்த கதையைக் கேளுங்கள். என் தந்தையின் பெயர் தாடியன். மூன்று ஆண்டுகள் ஆட்சிசெய்த அவரைச் சூழ்ச்சியால் கொலைசெய்து இந்த நாட்டைக் கைப்பற்றிவர் உங்கள் தந்தை. அப்போது நான் சிறுமி. அவருக்கு இது சரியான தண்டனைதான்.

**காசியப்பன்:**

மாலினி! நீ என்னைத் தவறாகக் கருதுவாயோ என்று பயந்தேன். உன் சம்மதமே எனக்கு பாதி வெற்றி கிடைத்ததுபோலத்தான். நான் இப்போதே முடிவெடுத்துவிட்டேன்

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம் : வீதி

**காசியப்பன் பாடியவாறு செல்லுதல்**

**மெட்டு : மெல்லச் செல்லுவேன்** *(எஸ்தாக்கியார், பக். 36)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

துள்ளியே ஓடுவேன் தந்தையினந்தத்
தங்க மாளிகைக்கே - உடன்
அள்ளி யணைப்பேனே வரச்
சொல்லி வைப்பேனே - ஆளும்
வீரியமனத் தீரியத்துடன் ஓர்மங் கொண்டுமே
பரிகாரங் கண்டுமே

கொட்டமேயகலத் திட்டங் கொண்டுமே
கோனைச் சந்திப்பேன் - கொண்ட
திட்டமே குறியே எந்தன்
சட்டமே இனியே - மாறும்
காட்சியால்புவி ஆட்சிசெய்குவேன்
மாட்சியாய்த்தானே அத்தாட்சியாய் நானே

**காசியப்பன் உள்ளே செல்லுதல்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 4

**இடம் : அரண்மனை**

**தாதுசேனன் வழிபாட்டில் நிற்றல்**

**மெட்டு : கவி** **இராகம் : சங்கராபரணம்**

***தாதுசேனன்:***

*மாயிருஞால மெல்லாம் வகுத்திடும் பரமே போற்றி*
*தாயினு மினிமைகொண்ட தண்ணொளியுடையாய் போற்றி*
*தூயமெஞ்ஞான ரூபமாய்த் துலங்கிய சுடரே போற்றி*
*நோயில்லா வாழ்வைத் தந்த கௌதமா போற்றி போற்றி*

**காசியப்பன் வரல்**

***காசியப்பன்:***

*வந்தனம் தந்தையே!*

**மெட்டு : இன்னிசை** **இராகம் : நடபைரவி**

***காசியப்பன்:***

*சீர்மேவு தாதுசேனன் திருமனையும் செங்கோலும்*
*பேர்பெருகு அனுராதபுரி ஆளுமையும் ஆளணியும்*
*பார்போற்ற பகைவென்ற திடமான தோளுடனும்*
*பேர்பெற்ற காவலனே வளமுடன் வாழியவே*

***தாதுசேனன்:***

*வந்தனம் காசியப்பா! வந்தனம்.*

***காசியப்பன்:***

*தந்தையே! தாங்கள் கூறியபடி நன்றாக யோசித்தேன். அரச நிர்வாகம் எனக்குப் பொருத்தமற்றது என்பதை தெளிவாக உணர்ந்துகொண்டேன்.*

**மெட்டு : நவசங்க சபைதங்கு** *(தேவசகாயம்பிள்ளை, பக். 120)*
**தாளம் : ஆதி (மிஸ்ர நடை )** **இராகம் : கீரவாணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாதுசேனன்:**

புவியாள முறை யொன்று உள்ளதே - அதை
புரிந்ததாலுனக்கு நல்லதே - உயர்
அவைமுன்பு மரியாதை பெறலே - இந்த
அகிலத்தில் மேன்மையுமானதே

**காசியப்பன்:**

மதிமங்கி உமை எதிர்த் துரைத்தேனே - இப்போ
மகிழ்வோடதை ஏற்றேனப்பா - நீரே
கதியென்று மனைநாடி வந்து - கூறிடக்
கருதியே இவ்விடம் தோன்றினேன்

**தாதுசேனன்:**

மணிமுடி அணிந்திட மரபுமுறை யுண்டு - அதை
மனங்கொண்டால் சிறப்புண்டு - அரச
பணியேற்பு முள்மீதிருத்தலே - இதை
பார்த்தவர் உரைத்திட அறியாயோ

**காசியப்பன்:**

விபரமறியாது தங்களுடன் எதிராக வாதிட்டதை மன்னித்துக் கொள்ளுங்களப்பா.

**தாதுசேனன்:**

அதை நான் எப்போ மறந்துவிட்டேன்.

**காசியப்பன்:**

தந்தையே! என் சிற்பங்களும் ஓவியங்களும் புகழ்பெற்று விளங்குகின்றன. நீங்கள் மட்டும் அவற்றைப் பார்வையிடுவதில் அக்கறை காட்டுவதில்லை. நான் பட்டத்துராணியின் மகன் இல்லையென்பதற்காகவா இந்த மாற்றாந்தாய் மனப் பாண்மை?

**தாதுசேனன்:**

அப்படியில்லை காசியப்பா. எனக்கு நீயும் பிள்ளைதான். உன் உயர்வில் புகழில் எனக்கும் மகிழ்ச்சிதான். நாட்டின் நிர்வாகத் தைக் கவனிப்பதற்கே நேரம் போதாமலிருக்கிறது. அதனால் தான் வருவதில்லை.

**காசியப்பன்:**

உங்கள் ஆசீர்வாதம் எனக்குத் தேவையப்பா. நீங்கள் ஒரு தடவையேனும் வந்து சிற்பங்களைப் பார்வையிட்டு ஆசி கூறுங்கள் தந்தையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாதுசேனன்:**

நிச்சயம் உன் ஆவலை நிறைவேற்றி வைக்கிறேன். நாளை சாயந்தரம் தளபதியுடன் உன் சிற்பக்கூடத்தில் நிற்பேன்.

**காசியப்பன்:**

அப்பா! தங்களிடம் ஒரு பணிவான வேண்டுகோள்.

**தாதுசேனன்:**

சொல் காசியப்பா

**காசியப்பன்:**

தாங்கள் மன்னனாக அல்ல, என் தந்தையாகவே சிற்பக் கூடத்திற்குள் நுழையவேண்டும்.

**தாதுசேனன்:**

உன் ஆவலை நிறைவு செய்கிறேன்.

**காசியப்பன்:**

நன்றி அப்பா! இன்று நான் மகிழ்வாக இருக்கிறேன். நாளையு டன் என் தோஷங்கள் எல்லாம் தீர்ந்துவிடும். விடை பெறுகிறே னப்பா.

**திரை**

## இடம் : வீதி

**காசியப்பன் பாடியவாறு செல்லுதல்**

**மெட்டு : சுற்றாத தேசமெல்லாம்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 70)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

வில்லினில் வெளிப்பட்ட அம்பாக என்போல் - பொல்லாத
வல்லோனை இல்லாது செய்பவரெவரு முண்டோ
தொல்லைக ளினியில்லை என் வாழ்விலே - என்று
சொல்லவும் வழிசெய்தோன் யாரேனு முண்டோ

கற்றவர் போற்றிடும் சிற்பியாய் நான்நின்று - மண்ணைக்
காத்திடும் சேவையை ஆற்றுவோரெவரு முண்டோ
மாற்றாந்தாய் மனப்பாண்மை கொண் டோனை - கொண்ட
மதியாலே வென்றவரெவரேவரும் பாரினி லுண்டோ

**காசியப்பன் உள்ளே செல்லுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 5

### இடம் : சிற்பக்கூடம்

**காசியப்பன் சிற்பத்தின் அருகில் நின்று யோசித்தல்**

மெட்டு : செப்பரிய பூவில் *(தேவசகாயம்பிள்ளை, பக். 44)*
தாளம் : ரூபகம் இராகம் : நடபைரவி

*காசியப்பன்:*

அரசஅதி காரமின்றி வாழ்ந்தால் - துன்பம்
அதிகரித்து அழிவினையே தோற்றும்
பரிகாரமோ காணும்வழி துயரே - உயிப்
பறிப்பதல்லால் வேறுவழி இல்லையே

நித்தமதாய் கண்ணீர் சுரந்தழ - நிதமும்
நிலபுலம் அணிகலம் சுவையுணவு
அத்தனையும் யாசித்துப் பெறல்தகுமா - தந்தையே
அடியேன் தவறை மன்னிப்பீரே

*காசியப்பன்:*

இன்னமும் சிறிது நேரத்தில் அனுராதபுர இராசதானியின் வரலாறு மாறப்போகின்றது. அதிகாலை விடிந்ததும் நான் இந்த நாட்டுக்கு மன்னன்.

**தாதுசேனன் வாள் மற்றும் அணிகலன்களின்றி உள்ளே வரல்**
**மீகாரன் வாளுடன் வரல்**

*காசியப்பன்:*

வாருங்கள் தந்தையே! தங்களின் பொற்பாதம் பட என் சிற்பக்கூடம் என்ன தவம் செய்ததோ?

*தாதுசேனன்:*

இங்கு வரவேண்டுமென்பது எனது நீண்டநாள் ஆசை. சந்தர்ப்பமோ கிடைப்பதில்லை. வரவேண்டிய நேரம் வந்தது வந்துள்ளேன். காசியப்பா! உன் கற்பனைச் சிறப்பிற்கேற்ப மிக அழகாக இருக்கிறது இந்த சிற்பக்கூடம். இதைப் பற்றி பலர் புகழக் கேள்விப்பட்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : அங்கே பாராய்** *(விஜயமனோகரன், பக். 32)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

***காசியப்பன்:***

*இங்கே பாரும் மங்கையின் சிலை*
*இலங்குந் தோற்றமே - அதில்*
*அங்கம் முழுதும் தங்க மேனியாய்*
*அன்பின் தோற்றமே*

*சிங்கம் போலவே செங்களி மண்ணில்*
*சிற்பம் தந்தேனே - சிறு*
*பங்க மின்றியே பொங்கு மழகை*
*பருகிட ஈந்தேனே*

*எங்கும் நிறைந்த கௌதம புத்தரின்*
*எழிமை விதைத்தேனே - அவர்*
*தூங்கு மழகை துல்லிய மதாகவே*
*துலங்கிடச் செய்தேனே*

***தாதுசேனன்:***

*அத்தனையும் அற்புதமானவை; ஆச்சரியப்பட வைப்பவை.*

***காசியப்பன்:***

*அப்பா இந்த ஓவியங்களைப் பாருங்களப்பா எல்லாமே என்னால் வரையப்பட்டவைதான்.*

**மெட்டு : பூண்டேன் சிரநமஸ்காரம்** *(விஜயமனோகரன், பக். 27)*
**தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)** **இராகம் : சக்கரவாகம்**

***தாதுசேனன்:***

*கேட்டேன் காசியுன் ஞானம் - தினம்*
*கேட்டு அறிந்ததைக் காணவே வந்தேன்*
*நாட்டின் பெருமையாய் சிற்பம் - கண்டு*
*நானும் மிக்க மகிழ்வு கொண்டேன்*

*ஆண்டனர் பலமன்னர் நாட்டை - யாரும்*
*அகிலமே போற்றிட வாழ்ந்தவர் உண்டோ*
*கண்டேனுன் சிற்பக்கலை ஆட்சி - அகிலம்*
*கண்ணுற்று போற்றிட தந்தேனே ஆசி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காசியப்பன்:*

*ஆசிகள் தந்தீர் என் எண்ணமே நிறைவேற. இனியும் தாமதிப்பதில் அர்த்தமில்லை.*

*தாதுசேனன்:*

*என்ன கூறுகிறாய் காசியப்பா!*

மெட்டு : விருத்தம் இராகம் : சங்கராபரணம்

*காசியப்பன்:*

*காசியப் பனெனது கட்டளை தன்னைக்*
*கருதியே தாதுசேனா கேளாய்*
*காசினியில் உன்போ லோருவன் இருக்கலாகா*
*கடுதினி லழிப்பேனே உன்னை*

*தாதுசேனன்:*

*காசியப்பா!*

*காசியப்பன்:*

*நேசம் உள்ளாயென்று வேசத்தைப் போட்டு*
*நாசமே செய்திடும் உன்னை*
*பாசமே இல்லாமல் நாலு சுவருக்குள்*
*புதைத்தே சமாதி செய்குவேனே*

*தாதுசேனன்:*

*காசியப்பா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?*

*காசியப்பன்:*

*இது என் மாளிகை. இங்கே குற்றவாளியின் பேச்சுக்கு இடமில்லை. மீகாரா! ஏன் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்?*

*தாதுசேனன்:*

*மீகாரன்! நீதானா அந்தக் கறுப்பாடு?*

*மீகாரன்:*

*இப்போது அறிந்துகொண்டீர்கள்தானே.*

**மீகாரன், தாதுசேனனின் கைகளை பின்புறமாகக் கட்டுதல்**

*காசியப்பன்:*

*மீகாரன் !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : ஏந்தலுடை கட்டளை** *(இம்மனுவேல், பக். 29)*
**தாளம் : (வீரம்) சதுஸ்ர ஏகம்** **இராகம் : கம்பீர நாட்டை**
**(சோகம்) மிஸ்ரசாபு** **இராகம் : நீலாம்பரி**

**காசியப்பன்:**

எந்தனது கட்டளையாய் இந்த
எத்தனின் கையைக் கட்டி
சாந்தினுள்ளே வைத்து துடலைமூடி
சாகும்வரை அடைத்தி டுவாயே

**தாதுசேனன்:**

அணைத்த கையைப் பிணைத்தே - உயிர்
அணைத்திட முனைகிறாரே
கணமுமெதிர் பார்க்கா செயலை - இப்போ
கழைந்திடாயோ வெந்தன் மகனே

**மீகாரன்:**

ஆதரியென் றளுதாள் அன்னை நீயவளை
ஆடையின்றி தீயிலிட்டாய்
சாவிலும் மறவா உன்னையும் ஆடையின்றி
சுவருக்குள் அடைத் தழிப்பேனே

**தாதுசேனன்:**

என்றோ நடந்து முடிந்ததன்றோ - அதை
எண்ணியுயிர் பறிக்கலாமோ
கண்ணீர் சிந்திடாத வெனக்கு - இக்கணம்
கருணை காட்ட மாட்டீரா?

**மீகாரன்:**

ஹா.. ஹ.. உனக்கு கருணை. என் அன்னை கதறக் கதற ஆடைகளைக் கழைந்து நடுச் சந்தியில் உயிருடன் எரித்தாயே உனக்குக் கருணையா? காசியப்பா! இது வியப்பாயில்லையா?

**காசியப்பன்:**

கோடையிடியென புவியாள முடியாதென்று உரைத்த உனக்கா கருணை... மன்னிப்பு... மீகாரா! ஏன் தாமதம்? இழுத்துச் சென்று சுவருக்குள் மறைத்து சமாதி கட்டிவிடு.

**தாதுசேனனை மீகாரன் பிடித்து இழுத்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீகாரன்:*


துரோகியே வா... இனி இது உனது சாம்ராஜ்யமல்ல... எமது சாம்ராஜ்யம்.

**தாதுசேனன்:**

என்னை நம்பிக் கெடவைத்தீர்களே! சூழ்ச்சியால் எனை அழிக்கத் துணிந்தீர்களே! ஆனால், உங்கள் ஆட்சி என்றுமே நிம்மதியற்ற ஒன்றாகத்தான் இருக்கும். என் மகன் மொகல்லா னன் உங்களுக்கு சிம்மசொற்பனமாகவே இருப்பான். அவனுக்கு அஞ்சி அஞ்சியே அரசாட்சி செய்வீர்கள். இது நடக்கும்.

**மீகாரன் தாதுசேனனை இழுத்துச் செல்லுதல்**
**காசியப்பன் வெற்றிச் சிரிப்பில் நிற்றல்**

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

## கூத்து நான்கு

# மந்தரை சூழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச்சுருக்கம்

தசரதன் மன்னன் தன் செவியின் அடிப்புறத்தே, கருநிறம் மாறி வெண்ணிறம் அடைந்த ஓர் உரோமத்தை நிலக்கண்ணாடியில் கண்டான். தனக்கு முதுமை பருவம் வந்துவிட்டதை உணர்ந்து, தான் அரச பதவியிலிருந்து விலகுவதற்கும் தனது மகன் இராமனுக்கு முடிசூடிடவும் முடிவெடுத்து, அதற்கான நாள் குறித்து, உரிய ஆயத்தங்களை மேற்கொள்ளலானான்.

இராமன்மீது ஏற்கெனவே வெறுப்புற்றிருந்த மந்தரை (கூனி), இராமன் முடிசூடுவதை அறிந்து ஆத்திரமுற்றாள். அவன் சிறுவனாய் இருக்கும்போதே தன் முதுகின்மீது வில்லுருண்டையை எறிந்து, தன்னைத் தரையிலே வீழ்த்திப் பலரும் பரிகாசம் செய்து, தலை குனியச் செய்தவனைப் பழிவாங்குவதற்கு இதுதான் தகுந்த தருண மெனக் கருதி செயலில் இறங்கினாள்.

தனது தோழி கைகேயி (இராமனின் சிற்றன்னை), இராமன்மீது அதீத அன்பு வைத்திருக்கிறாள் என்று அறிந்திருந்தும் தனது சாதுரியத்தால், இராமன் முடிசூடுவதால் அவளுக்கு ஏற்படும் கேடுகள் பலவற்றை எடுத்துக்கூறி அவள் மனதை மாற்றினாள்.

முன்னொரு காலத்தில் சம்பாசுரப்போர் நடந்தபோது கைகேயி தசரதனுக்கு செய்த உதவியால் அவன் மகிழ்ந்து உவந்தளித்த இரண்டு வரங்களில் ஒன்றால் 'கைகேயியின் மகன் பரதன் நாடாளவேண்டும் எனவும், மற்றொன்றால் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும்' எனவும்; பரதனுக்கு அரசுரிமை கிடைப்பதற்குரிய உபாயங்களை எடுத்துக்கூறிய மந்தரை, கைகேயி மூலமாக இவற்றைச் செய்துமுடித்தாள்...

## பாத்திரங்கள்

கட்டியகாரர்
தசரதன்
வசிட்டர்
இராமன்
கைகேயி
மந்தரை
சபையோர்
குடிமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்தரை சூழ்ச்சி

## காட்சி - 1

### இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

**சபை விருத்தம்**

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

*அங்கம் குலுங்கிட தங்கநிறக் கோலினை ஏந்தி*
*கிங்கிணித் தாளமும் சலங்கையும் சேர்ந் தொலிக்க*
*சிங்கார மாநகர மக்களுக்கு சங்கதி கூறவென்றே*
*மங்கல மொழி கட்டியகாரர் சபைதனில் வருகிறாரே*

**கட்டியகாரர் ஆடியவாறு வரல்**

**மெட்டு : ராசமகராசனும் வந்தான்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 07)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : மாயா மாளவ கௌளை**

***கட்டியகாரர்:***

**பல்லவி**

*ராமர்கதைகூறிட வந்தோம் - கட்டியர் நாமும்*
*ராமர்கதைகூறிட வந்தோம்*

**அனுபல்லவி**

*கொட்டுமேள ஒலி முளங்க பேரிகையுமொலிக்க*
*மட்டில்லா பெருமையோடு அயோத்தி வாழுகின்ற*
*- (ராமர்கதை..)*

**சரணம்**

*சூரியகுல தோன்றல் மன்னனோ - முதுமைகண்டு*
*செங்கோலை மாற்ற வெண்ணியே*
*பாரிலுள்ளோர் துதிக்க மங்காபுகழ் கொண்ட*
*பாராளத் தகுதிகொண்ட ராமனை உடன் அழைத்த*
*- (ராமர்கதை..)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லினை யொடித்த வீரனோ - மறுத்தலற்று
வந்தனன் தாழ்பணிந் தெழுந்தே
பொல்லாவினை சூழ்ந்து வல்லோனைச் சரித்திட
பாராளும் வரன்முறை பாழான நிலை யடைந்த
- (ராமர்கதை..)

**கட்டியகாரர் ஆடியவாறு உள்ளே செல்லுதல்**
**வசிட்ட முனிவர் வரவு**

**மெட்டு : தேசமயமாயிலங்கும்** *(கருங்குயில் குன்றத்துக்கொலை)*
**தாளம் : சதுஸர ஏகம்** **இராகம் : ஹரஹரப்பிரியா**

*வசிட்டர்:*

பாரில் சிறப்பாய் விளங்கும்
பார ளு சபையை நோக்கி
பார்த்திபன் அழைப்பை ஏற்று
சென்றிடும் வசிட்டனும் நானே

வாச மலர் காவில்நிறை
வீசிடும் அயோத்தி நகர்
பாசமாய் விளங்கு மன்னர்
பகர்வதை கேட்பேன் தானே

**வசிட்ட முனிவர் உள்ளே செல்லுதல்**
**சபையோர் வரவு**

**மெட்டு : மாட்சிமை மிகு மன்னன்** *(பண்டாரவன்னியன், பக். 01)*
**தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)** **இராகம் : சங்கராபரணம்**

*சபையோர்:*

சூரியக்குலத் தோன்றல் வருகின்றார் - தொல்லை
சூழ்வதைத் தடுப்பவர் வருகின்றார்
கரகங்களில் மலர்கொண்டு தூவுங்கோ - இளங்
கன்னியர் கரகங்கள் ஆடுங்கோ

ஆழிமுத்து அலங்கார உடைமன்னன் - பெரும்
ஆனைகள் அணிகொண்டு வருகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளையர் சிலம்பாட்டம் ஆடுங்கோ - கையில்
கொடிகம்பு குடைகம்பு பிடியுங்கோ

அடர்சேனை புடைசூழ மகிழ்கின்றார் - கடல்
அலையென அயல்கொண்டு வருகின்றார்
சுடரேத்தி சுட்டிகள் நிரையுங்கோ - செவி
சுவைபட பாடல்கள் இசையுங்கோ

**சபையோர் உள்ளே செல்லுதல்**

**தசரதன் மன்னன் வரவு**

**மெட்டு : அகிலமும் புகழும்** *(கண்டி அரசன், பக். 08)*

**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

***தசரதன்:***

அறுபது ஆயிரம் ஆண்டுகள் ஆண்டவன்
அறமது புரிவதில் ஆர்வமுங் கொண்டவன்
திருமாலின் அவதார இராமனைப் பெற்றவன்
புறமுடா நிலையினில் பலநாடு வென்றவன்
தங்கக் கொலு விருந்து பங்கம் பலகழையும்
சங்கை பொங்கு தசரத மன்னனும் நானே

அயலது ஆண்டிடும் முடிமன்னர் திறைதரவே
புயலென எதிர்வரும் பகைவரைக் கொய்துமே
புயபலம் மிக்கதோர் மன்னனாய் நின்றுமே
பயமின்றி மக்களும் பாரினில் வாழவே
பெருகும் புகழொலிகள் அதிரும் அயோத்தியின்
கரும மறியக் கொலுவிடமே செல்வேனே

**திரை விலகல்**

**இடம் : அரண்மனை**

**தசரதன் மன்னன் கொலுவிருத்தல்**

**வசிட்ட முனிவர் வரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

*வசிட்டர்:*

*சிங்கணைக் கொலுவிருந்து தங்கணையில் கோலோச்சும்*
*மங்கிடாப் புகழ்படைத்த துங்கமுடிப் பேரரசே*
*பொங்குதமிழ் தேசமெங்கும் தங்குபுகழ் ஆர்ப்பரிக்க*
*சங்கசபை அழைத்ததேன் இங்கிதமாய் மொழிவீரே*

*தசரதன்:*

*மும்மூர்த்திகளோடு நான்காவது மூர்த்தி என்று எண்ணப் படுகின்ற வசிட்ட மாமுனிவரே! நான் எதிர்பார்த்திருந்த தங்களின் வரவால் பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.*

*வசிட்டர்:*

*பேரரசே! தாங்கள் என்னை அழைத்த காரணத்தை அறிய லாமா?*

**மெட்டு : ஏடாகிய பதுமாமணி** *(தேவசகாயம்பிள்ளை, பக். 10)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : கீரவாணி**

*தசரதன்:*

*பாரோரடி தொழவே பணி விளங்குந் தவமுனியே - இப்போ*
*பருதிகுல மன்னர் கூறும் உரைகேளு மருள்முனியே*
*திருநகர் முடியணி ஏந்திய தலைதனில் வெண்முடியும் - கண்டு*
*திருமுடி மாற்றிடல் நலமென கருதியே நாடினேனும்மை*

*எந்தனெண் ணமிதுவே யதை உரைத்தேன் அறிவீரே - இன்று*
*என்நிலைநீரு மறிவீர் நன்னயம் செய்திட எழுவீர்*
*எந்தை மகன் முடிசூட சபையோர் தடையில்லை - தங்கள்*
*எண்ணம் எதுவென்று நானும் அறியவெடுத் துரைப்பீரே*

*தசரதன்:*

*முனிவரே என் செவிப்புறத்தே கருநிறம் மாறி வெண்ணிற மடைந்த உரோமத்தை நிலக்கண்ணாடியில் கண்டேன். இதனால் என் முதுமையை உணருகிறேன். இனியும் என்னால் அரச பாரத்தைத் தாங்க முடியாது.*

*வசிட்டர்:*

*அப்படியென்றால்...?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தசரதன்:**

பெறற்கரிய யாகாதிகளையெல்லாம் செய்து அரிதில் பெற்ற என் மகன் இராமனுக்கு திருமுடி சூட்டிவிட்டு நான் தவம் செய்யப் போகலாமென்றிருக்கிறேன்.

**மெட்டு : ஆசிரியம்** **இராகம் : சங்கராபரணம்**

**வசிட்டர்:**

புதுமலரில் மதுவண்டு பாட மயிலாட மானினமும் ஆட
நிதமுமது கடல்முத்து வீச ஒளிகாணும் பேரரசே கேளீர்
அதிமேவு இராமபிரான் முடி சூடுமுறை கேட்டே கோடி
நிதியது பெற்றவன் போலே களிகொண்டே னறிவீர் அரசே

**வசிட்டர்:** *(வசனம்)*

இராமனைப் பெற்றதால் நீயே சிறந்தவனானாய். திருமாலின் அவதாரமான இராமபிரானின் திருப்பெயரைச் சொன்னாலே துன்பம் விலகும். அதனால் உன் எண்ணப்படி இராமபிரானிடம் ஆட்சிப் பொறுப்பைவிட்டு தவத்தை மேற்கொள்ளலாம்.

**தசரதன்:**

மகிழ்வுற்றேன் முனிவரே!... இராமன் மிதிலையில் வில்லை ஒடித்த நாளைவிட, இராமனிடம் பரசுராமன் தோல்வியடைந்த நாளைவிட பெரு மகிழ்ச்சி அடைகிறேன்...

**வசிட்டர்:**

இராமபிரான் இதனை அறிவாரா?

**தசரதன்:**

இல்லை, இராமனை வரும்படி தகவல் அனுப்பியுள்ளேன். அவர் வருவதற்குள் சோதிடம் கணிப்பவர்களிடம் கலந்துபேசி முடி புனைவதற்கு ஏற்ற நாளை தெரிவுசெய்யவேண்டும்.

**வசிட்டர்:**

நல்லது பேரரசே!

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 2

## இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

இராமன் வரவு

மெட்டு : அரிராமராமா (தேவசகாயம்பிள்ளை, பக். 45)
தாளம் : ஆதி இராகம் : சங்கராபரணம்

இராமன்:

அதிஉத்தம தேச அதிகாரராசன்
அரசர்க்கரச ரான தசதரமன்னன்
துதிபாதம் நாடி கருமத்தைக்கூற
தோன்றிய தனையன் இராமனும்நானே

அழைத்ததன் சேதி அறிந்திடநானும்
அரண்மனை தேடி நடமிடுவேனே
நுழைந்திடின் பகைமை கழைந்திடவேண்டி
நயத்துடன் உரைப்பது கடமையும்தானே

திரை விலகல்

## இடம் : அரண்மனை

தசரதன் மன்னன் கொலுவில் இருத்தல்
வசிட்ட முனிவர் இருக்கையில் இருத்தல்
இராமன் வரல்

மெட்டு : இசலி
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை) இராகம் : சங்கராபரணம்

இராமன்:

நன்னன்புகொண்ட பிரியங்கள்கூறு மிருகண்களான தந்தாய்
வினைதீர்க்கவல்ல தவவாழ்வுகண்ட அருளுரைகூறும் குருவே
பிணியற்றவாழ்வை பாரினிற்தந்த பரமனைப்போற்றி நாளும்
பணிசெய்துவாழ துணைநின்ற பெரியோரேபோற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராமன்:**

வந்தனம் தந்தையே! வந்தனம் குருதேவா!

**வசிட்டன்:**

நல்லாசிகள் பெறுக. நடப்பவை நல்லனவாய் அமைக.

**இராமன்:**

தந்தையே! என்னை அழைத்த காரணத்தைச் சொல்லுங்கள். தங்கள் சித்தம் எதுவோ, அதுவே என் பாக்கியம்.

**மெட்டு : அப்பனே அப்பனே** *(தேவசகாயம்பிள்ளை, பக். 32)*

**தாளம் : ரூபகம்** **இராகம் : பஹேறம்ச**

**தசரதன்:**

நலந்தங்கி யுலகெங்கும் வளங்கு மயோத்தி
நகர்தனில் உயர்பெறு நற்குணனே ராமா
பலம்மிக்க வலியோனாய் பாரிலு யர்ந்தாய்
பருதிகுல வழிநின்று நாட்டினை யாள்வாய்

தந்தையென் பெயரோங்க பண்புடன் வாழும்
தனயனாய் உனைக்கண்டு மகிழ்ச்சி யுற்றேனே
விந்தை யென்றில்லை முதுமை நிலையானேன்
வல்லோனே திருமுடி மறுப்பின்றி யேற்பீர்

**தசரதன்:**

மைந்தனே! நான் இதுவரை பூமி பாரத்தைத் தாங்கியதால் உடல் இளைத்து முதுமை அடைந்துவிட்டேன். இனிமேல் அரச பாரத்தை தாங்க முடியாது. அதனால்...

**இராமன்:**

அதனால்...!

**தசரதன்:**

உயர்ந்த பெருமைமிக்க சூரிய குலத்தில் தோன்றிய என் சொல்லை மறுக்காமல் திருமுடி புனைந்து அரச பாரத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டும்.

**இராமன்:**

.... (மௌனம்)

**வசிட்டர்:**

இராமா! உனது மௌனத்தின் காரணம் அறியலாமா?

**இராமன்:**

குருதேவா! தந்தையின் வார்த்தையை என்றேனும் நான் ஏற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்ததில்லையே. தந்தையின் உத்தரவு எதுவோ அதனை உங்களின் ஆசியுடன் நிறைவுசெய்கிறேன்.

**வசிட்டர்:**

நல்லது இராமா நல்லது. உன்னுடைய கீழ்ப்படிவு உலகுக்கு கோர் எடுத்துக்காட்டு.

**தசரதன்:**

மைந்தனே!

**மெட்டு : கவி** **இராகம் : சங்கராபரணம்**

**தசரதன்:**

மகிழ்வுற்றேன் மணிமுடி ஏற்பதால்
மங்கிடாப் பெருமையும் கொண்டேன்
பாக்யமானேன் உன்னைப் பெற்றதால்
பாராண்ட சிறப்பினில் மீண்டேன்
அகிலத்தோர் வாழ்த்தொலி இசைப்பர்
அறமது மாண்புடன் நிறையும்
யுகயுகமாய் உன்புகழ் விளங்கும்
யெயபேரிகை எந்நாளும் ஒலிக்கும்

**தசரதன்:**

மாமுனியே! என் மகிழ்வுக்கு அளவேயில்லை. மைந்தா! உன் பிறவிப் பெருமையை துலங்கிடச் செய்தாய்.

**வசிட்டர்:**

பேரரசே! இராமபிரானுக்கு எப்போது திருமுடி சூட்டுவதாக உத்தேசித்துள்ளீர்கள்?

**தசரதன்:**

சோதிடம் கணிக்கும் வல்லுனர்களை அழைத்துக் கேட்டிருந்தேன். அவர்கள் நாளையே முடிசூடுதற்குப் பொருத்தமான நாளென முடிவாகக் கூறிவிட்டார்கள்.

**வசிட்டர்:**

ஆகவேண்டிய காரியங்கள் நிறைய உள்ளதே.

**தசரதன்:**

காலங்காலமாய் அரசாட்சி செய்யும் இக்கொலு மண்டபத்திலிருந்து இப்போதே அறிவிக்கிறேன். நாளை சாயந்தரம் சூரிய அஸ்மனத்திற்கு முன்னர் இராமனுக்கு திருமுடி சூட்டப் படும். அனைத்து அரசர்களும் அயோத்திக்கு வருமாறு நிருபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்படும். நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தப்படும்.

**வசிட்டர்:**

பேரரசே! இராமபிரானைப் புனிதப்படுத்தும் சடங்கு செய்ய வேண்டியிருப்பதால் அவரை நான் திருமால் கோவிலுக்கு அழைத்துச் செல்லவேண்டும். தங்கள் உத்தரவிற்காய் காத்திருக்கிறேன்.


**தசரதன்:**

அனைத்தும் அறிந்த உங்களுக்கு என் உத்தரவு தேவையில்லை. ஆகவேண்டிய ஆயத்தங்களை மேற்கொள்ளுங்கள். இராமா! சென்றுவா வசிட்ட முனிவருடன்.

**இராமன்:**

தங்கள் ஆணை. போய் வருகிறேன் தந்தையே.

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 3

## இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

மந்தரை (கூனி) வரவு

**மெட்டு : சுற்றாத தேசமெல்லாம்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 70)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

*மந்தரை:*

அயோத்தி நகரமெல்லாந் தேடியோடிப் - பார்த்தாலும்
அறிவாளி என்போல்யாரும் கண்டவருண்டோ
சுயபுத்தி கொண்டியங்கும் வல்லவருண்டோ - சொல்லில்
சுருதியை சேர்த்துரைக்கும் மந்தரைநானே

எண்ணத்துக் குள்ளானவேகம் கொண்டவருண்டோ - புத்தி
என்னைப்போ லுரைப்போர் மண்ணினிலுண்டோ
திண்ணமாய் எடுத்துக்கூறி கண்ணியமாயுரைக்க - என்றும்
திடங்கொண்ட கூனியென்றழைக்கும் மந்தரைநானே

மந்தரை (கூனி) உள்ளே செல்லுதல்
கட்டியக்காரர் வரல்

**மெட்டு : பொங்கொளி செறிந்தமணி** *(விஜயமனோகரன், பக். 02)*
**தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)** **இராகம் : சங்கராபரணம்**

*கட்டியகாரர்:*

மணியொளிர் முடிசூடப் போறார் ராமர் - கையில்
மாண்பொரு கோல்கொண்டு ஆளப்போறார்
மின்மணி மிளிர்மணி வைரமுடனே - தினம்
மதிபொங்கு புகழ்கொண்டு ஆளப்போறார்

திருமாலின் அவதாரம் பெற்றவர் ராகவன் - மண்ணில்
தருமத்தை காப்பதில் நிகரற்றவர்
வரும்பகை எதிர்கொண்டு ஜெயங்கொண்டு - வீர
வரலாறாய் நிற்பவர்முடி சூடப்போறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கட்டியன்-1:*

மகா சனங்களே! மன்னரின் அறிவிப்பைக் கேளுங்கள். நாளை சூரிய அஸ்தமனத்திற்கு முன்னர் இராமபிரானுக்கு திருமுடி சூட்டும் வைபவம் நடைபெறப் போகின்றது. டும் டும் டும்

*கட்டியன்-2:*

இராமபிரானின் முடுசூட்டு விழாவை முன்னிட்டு அயோத்தி நகரை நன்றாக அலங்கரிக்குமாறு அரச உத்தரவு. எனவே நீங்கள் ஒன்றிணைந்து உங்கள் விழாவாக அலங்கரியுங்கள். டும்.

**கட்டியக்காரர் வணங்கிவிட்டுச் செல்லுதல்**

**சபையோர் வரல்**

**மெட்டு : நவசங்க சபைதங்கு** *(தேவசகாயம்பிள்ளை, பக். 120)*

**தாளம் : ஆதி (மிஸ்ர நடை)** **இராகம் : கீரவாணி**

*சபையோர் :*

நிறைகுடம் போலன்றோ தழும்பாத - மன்னன்
தசரதன் புகழினை போற்றியே - முடி
தரிப்பதை உரைப்பதற்காகவும் - இந்தச்
சபைதன்னில் நாமின்று தோன்றினோம்

திருமாலின் அவதாரம் ராகவன் - நெறி
தவறாத உத்தம புத்திரன் - நாளை
திருமுடி புனைந்திடப்போகிறார் - நீவிர்
தவறாமல் அலங்காரம் செய்யுங்கோ

வில்லினை ஒடித்தவர் இராமரே - பேர்
விளங்கிட வாழ்ப ராவாரே - அன்று
நல்லோரின் வாழ்த்துகள் ஒலிக்கட்டும் - தினம்
நாமும் அவர்பாதம் வணங்குவோம்

**ஆணும் பெண்ணும் (குடிமக்கள் ) வரல்**

**மெட்டு : மானேர் மடவஞ்சியரே** *(மரியதாசன், பக். 19)*

**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சிந்துபைரவி**

*ஆண்:*

கேளாய் எழிலஞ்சுகமே எந்தன்
தோள் சாயும் பெண்ணாளே - இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் மகராசன் ஆணைகேட்டோம்
அலங்காரம் செய் திடுவோம்

**பெண்:**

ஆடவர் புகழ்ந்திடும் ஆரணங்கே
ஆற்றல் மிகுந்த கண்ணாளா - இப்போ
படமிட்டு மலர்ப்பந்தல் போட்டிடுவோம்
பதமிட்டு நடனம் ஆடிடுவோம்

**ஆண்:**

தங்கக் குடக்கொங்கை யாளே
தாரகை போலெழிலோய் - இன்றே
தங்கச் சிகரத்தை நாட்டிடுவோம்
தளிரான வாழை கட்டிடுவோம்

**மந்தரை (கூனி) வந்து இருவரையும் பார்த்தவாறு நிற்றல்**

**பெண்:**

தீரமே கொண்டவீரத் துணைவனே
தாராள மனம்போல யாவுமே - செய்து
சீருடன் முடிசூட்டு விழாவினை
சிறப்புற செய்யலாம் வாருங்கோ

**மந்தரை:**

அதிகாலையிலேயே அயோத்தி நகர் ஆரவாரமாயிருக்கிறதே! கண்டோர் வியக்கும்படி அலங்காரங்கள் நடைபெறுகிறதே! என்ன நடக்கப்போகிறது இங்கே?

**பெண்:**

என்னம்மா எதுவுமே தெரியாததுபோல கேட்கிறீங்க.

**மந்தரை:**

உண்மையிலேயே எனக்கு எதுவும் தெரியாது. இப்போதுதான் நான் துயிலெழுந்து வந்தேன்.

**பெண்:**

மிதிலையில் பலரும் வியக்க வில்லை ஒடித்த வீரன்.

**ஆண்:**

எவராலும் வெல்லமுடியாத பரசுராமனைத் தோற்கடித்த தீரன்.

**பெண்:**

எங்கள் சகோதரன் இரமபிரானுக்கு நாளை சாயந்தரம் திருமுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டும் விழா நடைபெறப்போகிறது.

**மந்தரை:**

என்ன இராமனுக்கு முடிசூட்டு விழாவா?

**ஆண்:**

அம்மா! எங்களுக்கு அலங்கரிக்கவேண்டிய வேலை நிறையவே இருக்கிறது. நாங்கள் விடைபெறுகிறோம். அம்மா! நீங்களும் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்.

**ஆணும் பெண்ணும் உள்ளே செல்லுதல்**

**மந்தரை:**

ஆமாம்... நடந்தால்தானே கலந்துகொள்வதற்கு... அவன் சிறுவனாய் இருக்கும்போதே என் முதுகின்மீது வில்லுருண் டையை எறிந்து, என்னைத் தரையிலே வீழ்த்திப் பலரும் பரிகாசம் செய்து என்னைத் தலைகுனியச் செய்தவன் முடிசூடுவதா?

**மெட்டு : கல்வெட்டு சிந்து**
**தாளம் : சதுஸ்ர ஏகம்** மெட்டு : **கீரவாணி**

**மந்தரை:**

**பல்லவி**

எப்படியும் விடுவேனோ - முடிசூட்டிட
எப்படியும் விடுவேனோ

**அனுபல்லவி**

வில்லொடித்தவீரனென்று வீராப்பு பேசியராமனை
வல்லவர்கள்நாணிநிற்க தாடகையைக் கொன்றவனை
வில்லுருண்டைவீசிஎன்னை வீழ்த்தியவன் தலைகுனிய
தொல்லுலகில்முடிசூடிட முடியாமல் செய்திடுவேன்

**சரணங்கள்**

எங்கெல்லாமிருந்து வந்தோர் இங்குவுள்ளோரஞ்ச
சிங்கவரியணையில் தங்கிட நினைத்தவனுமொழிய
சிறிதேனும் மறப்பேனோ - என்பலத்தை
அறியாதார் இருப்பாரோ - தேடிவந்து
பொருள்தந்து கறைகண்ட தம்வாழ்வுசிறந்திட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுரை கேட்டிடும் பலரைநான் கொண்டிருக்க
கூனியென்று விழித்தானோ - சீண்டி
நாணமுறச் செய்தானோ - சீக்கரமாய்
கையேயி யிடமேசென்று கருத்தாக இடித்துரைத்து
மெய்யாக மகுடந்தன்னை சூடாமல் தடுத்திடுவேன்

(எப்படியும்...)

## திரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 4

## இடம் : கைகேயியின் இருப்பிடம்

கைகேயி வரவு

மெட்டு : கொன்னஞ் சேர் *(எஸ்தாக்கியார், பக். 143)*
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : சங்கராபரணம், சிந்துபைரவி

**கைகேயி:**

சிறப்புச்சேர் கானகம் கொண்ட
சீர்பெறு சூர்ய கோத்திர
நெறிதனைமாறா கேகயன் மன்னர் - புத்திரி
நானல்லவோ இப்பாரின்மீதிலே

பேரரசர் மனைவியான கைகேயி
பிறநாடார் போற்றும் அரசி
பார்போற்றும் நற்குண மைந்தரின் - தாயார்
நானல்லவோ அயோத்திநகரிலே

**கைகேயி இருக்கையில் அமர்ந்து சிந்தனையிலிருத்தல்**
**மந்தரை உள்ளே வரல்**

**கைகேயி:**

வா மந்தரை! இன்று நேரத்துடன் வந்துவிட்டாயே! ஏதேனும் தகவல் கொண்டுவந்தாயா?

**மந்தரை:**

நாகம் விழுங்கும் அளவும் உணராது ஒளி வீசும் முழு நிலவினைப்போல உனக்கு வருகின்ற பேராபத்தினை உணராது இருக்கிறாயே.

**கைகேயி:**

வேதமேயென விளங்கும் இராமபிரானை மகனாகப் பெற்ற எனக்குத் துன்பம் வருமா?

**மந்தரை:**

வீழ்ந்தது நின்நலம்; திருவும் வீழ்ந்தது; வாழ்ந்தனள் கோசலை மதியினால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகேயி:

புதிதாக இனி நல்வாழ்வு கோசலைக்கு வரவேண்டியதில்லை. இப்பொழுதே நல்ல வாழ்க்கைதான் கோசலை பெற்றுள்ளாள்.

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

மந்தரை:

ஆடவர் நகையுற ஆண்மை மாசுற
தாடகை எனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளைவாழ்வு இதுவன்றோ *

கைகேயி: (ஆவலுடன்)

என்ன சொன்னாய்? இராமன் நாளை கோமுடி சூடப் போகின்றானா? எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. உண்மையாகவா?

மந்தரை:

உண்மைதான்; வீரர்கள் இகழவும் ஆண்மைத் தன்மைக்கு குற்றமுண்டாகவும் தாடகை என்னும் பெண்ணை அழித்த இராமன்தான் நாளை முடிசூடப்போகிறான்.

கைகேயி:

மந்தரை இன்று எனக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி. இராமன் திருமுடி சூடப்போவதை முதலில் தெரியப்படுத்திய உனக்கு இந்த மணிமாலையைப் பரிசாகத் தருகிறேன்.

**கைகேயி தனது கழுத்தில் கிடந்த மணிமாலையைக் கழற்றி மந்தரைக்குக் கொடுத்தல்.**
**மந்தரை கோபத்துடன் அம்மாலையை தரையில் வீசி எறிதல்**

**மெட்டு : ஆழிப்பார்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 73)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** **இராகம் : நடபைரவி**

மந்தரை:

புகழ்பெற்ற எனதரு கூற்றினை
புறந்தள்ள திடமது கொண்டாயோ
அகமுற்றே அறிவுரை மறுத்திட
அதர்மத்தை மனதில் கொண்டாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தைக் காத்திடும் குலமன்றோ
மாற்றாரை நகைத்திட விடுவதா
ஈனத்தைக் கொண்டவர் செயலினை
இனங்காண நீயும் மறந்தாயோ

**மந்தரை:**

அறிவு இல்லாதவளே! கோசலை கெட்டிக்காரி. தன் மகன் இராமனுக்கு முடிசூட்டும்படி செய்துவிட்டாள்.

**கைகேயி:**

அப்படிச்சொல்லாதே மந்தரை. இராமனும் என் மகன்தான்.

**மந்தரை:**

நீ அறிவு இல்லாதவள். கோசலைக்கும் உனக்கும் உள்ள வேறுபாடு அறியாத நீ, நின் வயிற்றில் பிறந்த பரதனோடு பெருந்துயரினை அக்கோசலையால் படுக. நான் உன் மாற்றாளாகிய கோசலையின் தாதிகளுக்கு ஏவல் செய்யப் பொறுக்க மாட்டேன்.

**கைகேயி:**

மந்தரை வார்த்தையை அளந்து பேசு. நான் வேறு கோசலை வேறு அல்ல

**மந்தரை:**

உன் பிள்ளை பரதன் இனி காட்டிற்குத்தான் போகவேண்டும். இனி நீ வறுமையை அடைவாய். எல்லாப் பெருமைகளையும் இழந்து தவிக்கப் போகிறாய். பல கேடுகள் உன்னைச் சூழ்ந்திருக்கும்.

**மெட்டு : சுவனற்றவளைசங்க** *(தேவசகாயம்பிள்ளை, பக். 80)*
**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : ஹம்சவத்வனி, கீரவாணி**

**கைகேயி:**

ஈனத்தன முனக்கு இடையே வந்ததெதற்கு
மானமளி வதற்கு மார்க்கமுரைக்க வந்து
மனிதக் குணமுமற்று புனிதத் தனமுமற்று
மனதிற்சினம் புகுத்தி உரைக்கத் துணிவுகொண்டு
மதிகெட்ட மொழியுரைத்து நெறிகெட்ட பதிலுரைத்து
மரபிற்கு குறையுரைத்து மறுத்துரைக்க நீயாரோ

நேசமகனைப் பெற்ற பாசத்தா யெனக்கு
நீசத்தனமாய் நீயும் பாசவலை விரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசஞ் செய்திடவே ஆசையெனக் குரைத்து
தேச வொழுங்குதனை தூசாய் கருதிக்கொண்டு
படியேறி வந்தாயோ பழியைச் சுமந்துகொண்டு
கடிதினில் சென்றிடுவாய் களங்கத்தை சுமந்தவளே

மந்தரை:

நான் என்ன சொல்லிவிட்டேன் என்று ஆத்திரமடைகிறாய்? உனக்கு எற்படக்கூடிய துன்பத்தைத்தானே சொன்னேன்.

கைகேயி:

இந்தக் குலத்துக்கு குற்றம் உண்டாகும்படி பேசி விட்டாய்! நீ எனக்கோ என் மகனுக்கோ நன்மை செய்யவில்லை. இதனால் உனக்கும் நன்மையில்லை. இப்போ என் எதிரில் நிற்காதே போ...

மந்தரை:

கைகேயி நான் உன் தோழி. உனக்கு ஏற்றதைத்தான் சொல்லு வேன். நான் சொல்வது தவறானால் உன்கையால் நான் சாகவும் தயார். ஆனால், நீ பாழுங் கிணற்றில் விழ விடமாட்டேன். சீதையும் இராமனும் உயர்ந்த அரியாசனத்தில் வீற்றிருக்க நின்மகன் பரதன் நாணித் தலை குனிந்தவனாக அரியாசனம் இல்லாதவனாய் இருக்க நேரக்கூடாது என்பதற்காகத்தானே பாடுபடுகிறேன்.

கைகேயி:

.....

மந்தரை:

இராமபிரான் அரச செல்வத்தை பெற்று சிறந்து விளங்க, நின்மகனோ எல்லா செல்வத்தையும் இழந்து நிற்பான். செல்வ மில்லாத அவன் இறந்தானில்லை. உனக்கு மகனாய்ப் பிறந்த தனால் இவ்வுலகில் அவன் பிறந்தும் பிறவாதவன் ஆகினான்.

கைகேயி:

.....

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

மந்தரை:

அரசரில் பிறந்துபின் அரசரில் வளர்ந்து
அரசரில் புகுந்துபேர் அரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை உணர்தியோ நீயும் *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைகேயி:**

என்ன சொல்கிறாய் மந்தரை?

**மந்தரை:**

பிறந்தது முதல் இளவரசியாகவும் புகுந்தது முதல் பேரசியா கவும் விளங்கும் நீ மாற்றாளின் துன்பக் கடலில் விழப் போகிறாய்.

**கைகேயி:**

நீ சொல்வதெல்லாம்...

**மந்தரை:**

நடுவு நிலையிலிருந்து நீங்கி நாட்டினை இராமனுக்குக் கொடுக் கின்ற தன்மையினால் தந்தையும் கொடியவன். அதனைக் கேட்டு மகிழ்வுறுகின்ற இத்தாயும் கொடியவள். இவ்வாறு இருவருமே உன் நலனுக்கு மாறாகச் செயல்படும் போது பரதனே! என் தந்தையே இனி என்ன செய்யப் போகிறாய்? (அழுதல்)

**கைகேயி:**

.....

**மந்தரை:**

உன் கணவன் தசதர மன்னன் உன்மகன் பரதனை நெடிது தூரத்திலுள்ள கேகய நாட்டிற்கு அனுப்பியது எதற்காக? பாசத்தினாலா? இரமனுக்கு முடிசூடுவதற்கு பரதன் தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக

**மெட்டு : வாரும் வாரும் நீலம்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 52)*
**தாளம் : (வீரம்) மிஸ்ரசாபு** **இராகம் : ஹரிஹாம்போதி**
**(சோகம்) சதுஸ்ர ஏகம்** **: சங்கராபரணம்**

**மந்தரை:**

கேளாய் கேளாய் எந்தன் தோழி - உயர்
கேடுசொல்லவந்த எனைத் தள்ளாய்
ஆளும் அரசியாய் இங்குள்ளாய் - இப்போ
ஆவதொன்றையும் நீ அறியாய்

**கைகேயி:**

நாள்தோறும் என்னுடன் அன்பாய் - மன்னர்
நல்மனங் கொண்டோராய் உள்ளார்
வாழுகின்றோம் குறையேதும் இன்றி - இப்போ
வினைவந்து புகுந்ததே இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்தரை:**

பேருங்குலமுஞ் சிறந் துள்ளாய் - துயர்
புகுந்திடாத வகைநீயோ வாழ்வாய்
பாரிலுனக்கொரு பெருமை வந்துதிக்க - புது
பாதையை வகுத்தேநீ கொள்வாய்

**கைகேயி:** *(வசனம்)*

நீ சொல்வது உண்மையாக இருக்குமா?

**மந்தரை:**

என்னுடைய அனுபவத்தின் கண்டுபிடிப்பு கைகேயி.

**கைகேயி:**

என்நெஞ்சில் புகுந்ததே துயரம் - அதை
எடுத்துரைத்திட வழியேது அறியேன்
என்னென்று மனந் துணிந்தாரோ - இன்று
என்மகன் வாழ்வுமே பெரிதே

**கைகேயி:**

இராமன் முடிசூடுவதால் எனக்கும் பரதனுக்கும் ஏற்படப் போகும் துன்பத்தை உணருகிறேன். என் மகன் பரதனுக்கு அரசுரிமை கிடைக்க என்ன வழி?

**மந்தரை:**

இப்போதாவது உன் இடரை நீ உணர்ந்தாயே... கைகேயி! சம்பராசுரப் போரில் நடந்த நிகழ்வை நினைத்துப்பார்.

**கைகேயி:**

அங்கு நடைபெற்ற கடும் யுத்தத்தில் என் கணவர் வெற்றிவாகை சூடினார். அவரது தேருக்குப் பாகனாக நான் இருந்தேன்.

**மந்தரை:**

யுத்தம் நடைபெற்றபோது சூழ்நிலை அறிந்து நீ தேரோட்டிய சாதுரியத்தால் தசரதன் உயிர் தப்பினார். அந்த யுத்தத்திலும் வென்றார்.

**கைகேயி:**

அதுதான் உண்மை.

**மந்தரை:**

அப்போது உனது சேவையைப் பாராட்டி இரண்டு வரங்கள் உவந்தளித்தாரே உன் கணவன்.

**கைகேயி:**

ஆமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மந்தரை:*

நீ இதுவரை பயன்படுத்தாத அந்த இரண்டு வரங்களையும் இப்போதுதான் பயன்படுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது. இதுதான் தகுந்த தருணம்.

**மெட்டு : எண்சீர் விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

*மந்தரை:*

மண்டலமாள் மன்னனை கணவனாய்க் கொண்டு
மாண்புடைய குலத்தின் மகிமை சேரும்
விண்டலஞ்சேர் தண்மதியை வென்ற எழில்
வெல்லமொழி மெல்லியளே விளம்பக் கேளும்
நன்றெனவே ஒருவரத்தால் பரதன் நாடாளவும்
நாடிழந்து இராமன் காடேகிட மறுவரமும்
மண்டிருள் சூழ்வதற்குள் மன்னனிடம் பெற்றிடவே
மார்க்கத்தை தேடிடு மனதினை வரிந்திடு

*கைகேயி:*

உள்ளம் தெளிந்தேன் மந்தரை!

*மந்தரை:*

தவறவிடாதே! ஒரு வரத்தில் பரதன் முடிசூடவேண்டும். மறு வரத்தில் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும்.

*கைகேயி:*

காலமறிந்து நல்ல உபாயத்தைக் கூறினாய். அதனால் உன்னைப் பாராட்டுகிறேன். நான் அடைந்த சந்தோஷத்தில் இதோ எனது பரிசு.

**கைகேயி தனது கழுத்தில் கிடந்த முத்துமாலையை கழற்றி மந்தரைக்கு அணிதல்**

*மந்தரை:*

எனக்கு ஏன் இவையெல்லாம். கடமையைத்தானே செய்தேன். சின்ன வயதில் என் முதுகில் வில்லுருண்டையால் எறிந்து என்னை நகைப்புரியவளாக்கிய இராமனை இலகுவில் மறப்பேனா? பழிக்குப் பழி... கைகேயி நான் விடைபெறுகிறேன்.

**மந்தரை வெளியே செல்லுதல்**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் : வீதி (திரைக்கு முன்)

ஆண் - பெண் (குடியானவர்கள்) வரல்
தொடர்ந்து சபையோர் வரல்

மெட்டு : ஏல யேலோம் (எஸ்தாக்கியார், பக். 46)
தாளம் : ரூபகம் இராகம் : சிந்துபைரவி

**ஆண்:**

பல்லவி

கோடி மகிழ்வோமே கூடி ஆடி - தந்தணத்தோம்
கூடியாடி பாடிமகிழ்வோமே
(கோடி மகிழ்...)

சரணம்

மேலோங்கு அயோத்தி நகர் - நாங்கள்
முகம் மலர்ந்தோம் அலங்கரித்தே
கோலோச்சிட இராம பிரான் - இன்று
கோமுடியை சூடிக் கொள்வார்

**பெண்:**

பாலகர் கன்னியர் பாங்குடன் சென்று
பூச்சரம் தொடுத்து பாமாலை இசைத்து
ஆலாத்தி எடுக்க ஆவலாய் அன்னையர்
ஆர்ப்பரித் தெழும் காட்சியும் சிறக்கும்

**சபையோர் - 1:**

வாணவெடி வெடிக்க மாமறை உரைத்து
வாழ்த்துகள் ஒலிக்க வாயாரப் புகழ்ந்து
சீனவெடி படபடக்க சிறப்புகள் முளங்க
சீருடன் ராகவன் வீதிவலம் வருவார்
(கோடி மகிழ்...)

ஆண் - பெண் - சபையோர் உள்ளே செல்லுதல்
இராமபிரான் வரல்

மெட்டு : கிரீடத்தரசர் முடி (தேவசகாயம்பிள்ளை, பக். 15)
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை) இராகம் : ஹம்சத்வனி, கீரவாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராமன்:**

பரசுராமன் தலை உருளக்கணை தொடுத்து
அரக்கி தாடகையை அழித்தபுய தீரன்
குருபரன் அருளோடு குலமது சிறந்திட
திருநகர் முடியணி சூடிடச் செல்வேனே

வில்லை யொடித்துப் பலமன்னரை பணியவைத்து
தொல்லை தரும்பேரை தொலைத்த நல்வீரன்
கோலாகலக் கோலம் நகர்கொள்ளக் கண்டேனே
காலால்படை தொடர முடிசூடச் செல்வேனே

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 5

## இடம் : கைகேயியின் இருப்பிடம்

**கைகேயி தன்னை அலங்கோலப்படுத்தினாள்**
**தரையில் படுத்தாள்**
**தசரதன் மன்னன் சேதி சொல்ல சந்தோஷத்துடன் வரல்**

**மெட்டு : காணரும் மேலான காட்சி** *(எஸ்தாக்கியார், பக். 26)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** மெட்டு **: சங்கராபரணம், மாயாமாளவ கௌளை**

*தசரதன்:*

*பல்லவி*

தேவி உந்தன் கோலமென்னவோ - இப்புவிமீதில்
தேவி உந்தன் கோலமென்னவோ

**அனுபல்லவி**

மனக்குறை கொண்டோ மண்ணில் உருள்கிறாய்
வானமும் பூமியும் தாங்காதே தலைவிரிகோலம்

*சரணம்*

அயோத்தி நகரத்து அன்பான பெண்ணாளே
பயமற்று போர்க்களம் புகுந்திடும் கணையாளே
நியமத்தை புறந்தள்ளி கிடப்பவளே உன்னால்
புயமோ நடுங்க துயரம் வருகுதே - என்னென்றுரைத்து
எண்ணத்தை அறியத் தாராயோ - எழுந்துநின்று
கண்ணீரை விடுத்து உன்குறை தீர்க்காயோ

**கைகேயி எழுதல்**

**மெட்டு : தாழிசை** **இராகம் : நடபைரவி**

*கைகேயி:*

சீரும் சிறப்பும் சிதைவதுபோல் மனம்
சிறுமையுற்று துயராகுதே
ஆரும் நினைத்திடா திட்டம் கேட்டு
அனலிட்ட புழுவானேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் புகழும் பருதிமுன் பனிபோல
பாகாயுருகிட துவளுறேனே
தீருமா என்துயர் என்றேங்கி கணம்
திடமிழந்து எனையிழந்தேனே

***தசரதன்:***

உனக்கு என்ன துன்பம் உண்டானது? அதைப் போக்குகிறேன். உனக்கு என்ன வேண்டும்? வள்ளல் இராமபிரான்மீது ஆணை யாகத் தடையின்றித் தருகிறேன் கேள்.

**மெட்டு : ஓகோ நீலகண்டா** *(தேவசகாயம்பிள்ளை, பக். 127)*
**தாளம் : (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)** **இராகம் : நடபைரவி**
**(சோகம்) மிஸ்ரசாபு** **: நடனபைரவி**

***தசரதன்:***

கேளாய் மகராணி தாளாதகோல மேன்கொண்டாய் - இப்போ
மீளாத துயரென்று சொல்லி மனதிலேன் பயம்கொண்டாய்

***கைகேயி:***

யாருமில்லை யென்றே தாரமெனை மறந்தீரோ - இத்
தரையில டியாளாகி உயிரிழந்திடுவேன் மெய்யாய்

***தசரதன்:***

என்னிற் குறைதன்னைக் கண்டவள் போலவிள்ளாதே- கேட்க
உன்னெண் ணத்தைக் கூறாமலே நீதுள்ளாதே

***கைகேயி:***

என்நாடுசேர விருப்பம் மிகவெனக் குண்டு - இங்கு
துன்புற்று வாழவோ துணிவெனக்கில்லை அறிவீரே

***தசரதன்:***

ஆற்றல்மிகு என்மனையாள்நீ சாற்றிடத் தயங்கிடாதே- எனை
சீற்றங் கொள்ளச் செய்திடவே மனங்கொண்டாயோநீ

***கைகேயி:***

சாற்றுகிறேன் உண்மைதனை என்மகனை விடுத்து - முடி
ராமனுக்கு சூட்டிடத் திடங்கொண்டது தகுமா

***தசரதன்:*** *(வசனம்)*

என்ன சொல்கிறாய் கைகேயி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைகேயி:**

நீங்கள் செய்வது முற்றிலும் முரணானது. என் மகன் பரதனை தந்திரமாக கேகய நாட்டிற்கு அனுப்பிவிட்டு இராமபிரானுக்கு முடிசூட்டிட தாங்கள் எடுத்த முடிவு தவறானது.

**தசரதன்:**

பரதனைவிட இராமனை உன் பிள்ளையாய் நேசிக்கும் நீயா இப்படிக் கூறுகிறாய்?

**கைகேயி:**

தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுதானே.

**தசரதன்:**

சரி... இப்போது என்ன சொல்ல வருகிறாய்?

**கைகேயி:**

சம்பாசுரப் போர் நடந்த காலத்தில் தாங்கள் எனக்கு இரண்டு வரங்கள் அளித்தீர்களல்லவா? அவற்றை இப்போது தருதல் வேண்டும். அவற்றால் மாற்றங்களை எதிர்பார்க்கின்றேன்.

**தசரதன்:**

கைகேயி!

**மெட்டு : வந்ததிந்த மாய** *(தேவசகாயம்பிள்ளை, பக். 16)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சிந்துபைரவி**

**தசரதன்:**

கொச்சகம்

பந்தமெனத் திருமணம் புரிந்து என் உடலாய் இணைந்தவளே
சிந்தைநிறை சுந்தரிய மாதே நானோ தவறிழைத்தே னென்றாய்
தந்தையாக நானிருந்து செய்தமுறை பிழையானதோ

தரு

வந்ததின்று துயரமென்நெஞ்சில் - மனம்வருட
வரிந்துநின்று வரமென்றுரைத்து கலங்கச் செய்தாயே
என்நிலையில் என்னசெய்குவேன் - இப்புவிமீதில்
என்னாலான வினையை நான் சுமந்தேனே

சிந்தைகொதித்தெழவே என்கண்ணில் - நீர்சொரிய
வந்தஉறவும் அணைத்த மார்பும் அங்கலாய்க்குதே
என்விதியே இங்கு விதைத்தாயோ - வரந்தா
என்றே நீயும் எந்தன்மார்பில் எட்டியுதைத்தாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தசரதன்:** (வசனம்)

வரம் கேட்பதற்குப் பொருத்தமான தருணம் இதுவல்ல. இராமனின் பட்டாபிஷேகம் முடியட்டும். பின்னர் வரத்தைக் கேள் தருகிறேன்.

**மெட்டு : சந்தத விருத்தம்**

**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சங்கராபரணம்**

**கைகேயி:**

தந்த வரமதை கேட்டிட சகுனம் பார்ப்பது முறையன்றோ
சந்திரக் கிரீடமுடி புனைந் தரசாளும் பேரரசிற்குத் தகுமோ
இந்நிலம் தனிலெந்தன் வரமதை பெற்றிட கணமும் தயங்கேன்
மைந்தன் நாடாள இராமன் காடேக இருவரம் தந்திடுவீரே

**தசரதன்:**

கைகேயி! நீ இதை உணர்ந்துதான் சொல்கிறாயா?

**கைகேயி:**

ஆம். நீங்கள் தருவதாக உறுதியளித்த இரண்டு வரங்களில், ஒன்றால் என்மகன் பரதன் நாடாளவேண்டும். மற்றொன்றால் இராமன் பதிநான்கு ஆண்டுகள் காடாளச் செல்லல் வேண்டும்.

**தசரதன்:**

கைகேயி! இது கொடுமை...

**கைகேயி:**

நீங்கள் செய்வதுதான் கொடுமை என் முடிவில் மாற்றமில்லை.

**மெட்டு : பரணித்தரு**

**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : ஹரிஹாம்போதி**

**தசரதன்:**

**பரணி**

முடி சூடி அரசாள வரங்கேட்கும் கூற்று
முற்றிலும் கொடுமை இப்புவியிலே
அடியேனும் மறுத்திட முடியாத வரத்தால்
ஆலைவாயில் கரும்புபோலானே

**பரணித்தரு**

இந்த - நகர்மீது யாவு முந்தன்
பொருளாக அள்ளித் தாறேனம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாளும் உரிமை உன்மகனதே - ஏற்று
அருங்குண மகன் காடாள வேண்டாம்
கருணைகூர்ந்து கருத்தை மாற்றுமம்மா

இல்லை - என்றே சொல்ல மாட்டேன்
என்னிடம் உள்ளதெலாம் உனக்குத்தாறேன்
என்னுயிர் தன்னை வதைக்காதே - உந்தன்
கனிவான பாதம்தொட்டு யாசிக்கும் என்மேல்
மனமிரங்கி ஒருவரம் மாற்றிடாயோ

***தசரதன்:***

கைகேயி நம் குலத்திற்கே பழி உண்டாகும்படியான செயலைச் செய்கிறாய். பரதனும் உன் விருப்பத்திற்கு இணங்கமாட்டான். எனவே உன் எண்ணத்தை விட்டுவிடு.

**கைகேயி:**

நான் முடிவாகக் கூறுகிறேன். வரம் கொடுத்தால் மகிழ்வேன்; இல்லையெனில் உமக்குப் பழி உண்டாக இக்கணமே சாவேன். எது தேவை என்று நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள்.

**தசரதன் கைகேயியின் கால்களில் விழல்**

***தசரதன்:***

பெண்ணே! கேகயன் மானே! உனக்குத் தரவேண்டிய வரத்தால் என் கண்ணைக் கேட்டாலும் கொடுக்கிறேன். என் உயிரையும் உனக்குத் தருகிறேன். நீ விரும்பிய மண்ணையே வாயில் போட்டுக்கொள். ஆனால் என் மகன் இராமனை மட்டும் காட்டுக்குப் போகச் சொல்லாதே.

**கைகேயி:**

கொடுத்த வரத்தை மறுப்பது சத்தியம் தவறுதலாகும். அப்படி மறுப்பது அறமாகுமா? பேரரசராகிய நீங்களே சொல்லுங்கள்.

**மெட்டு : கலித்துறை** **இராகம் : பைரவி**

***தசரதன்:***

கட்டுண்டேன் வரமெனும் சூழ்ச்சியில் சிக்குண்டு பலியானேன்
வெட்டுண்டு மாண்டினும் சத்தியம் தவறிடவே மாட்டேன்
எட்டுண்ட திக்கும் இழிசெயல் வரலாறாய் தொடர்ந்திருக்கும்
கெட்டின்று போனேன் கொட்டிய தேளாள் துயருறலானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தசரதன்:**

தந்தேன்; வரந் தந்தேன்... என் மகன் கானகம் ஆளட்டும். இனி நான் வானகம் ஆளச் செல்கிறேன். நீயும் உன் மகனும் இம் மண்ணகத்தை ஆண்டு உலகம் உள்ளளவும் பழியெனும் கடலகத்தில் வீழ்ந்து அழுந்துங்கள்.

**தசரதன் மன்னன் தள்ளாடியபடி உள்ளே செல்லுதல்**
**கைகேயி மகிழ்வில் அவிழ்ந்த கூந்தலை முடித்தல்**

**மெட்டு : வெற்றி வீரன் நானையா** *(தேவசகாயம்பிள்ளை, பக். 61)*
**தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)** **இராகம் : கல்யாணி**

**கைகேயி:**

பல்லவி

வரத்தைப் பெற்ற மாதையா - இம்மண்ணில்
வரத்தைப் பெற்ற மாதையா

சரணம்

பெற்ற வரத்தோடு பரதனிந்த மண்ணைஆள
பெற்ற வயிறுமின்று அக்களிப்பால் துள்ளிட
மாற்றாள் மகன்ராமன் காடாளச் சென்றிட
மகிழ்வு கொண்டேனே நினைத்ததை முடித்திட
(வரத்தை...)

மந்தரை புத்தியால் மண்ணில் உயர்ந்தேனே
மதிகேட்டு செய்ததால் வரத்தைப் பெற்றேனே
தந்திரம் பலித்ததால் பலன்களை அடைந்தேனே
தரணியில் தனியொரு சிறப்பைப் பெற்றிட
(வரத்தை...)

**கைகேயி புன்னகையுடன் இருக்கையில் அமர்தல்**
**இராமன் உள்ளே வரல்**

**கைகேயி:**

இராமா! உன் வரவையே எதிர்பார்த்திருந்தேன். தக்க தருணத்தில் வந்துவிட்டாய்.

**இராமன்:**

அன்னையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : விருத்தம் இராகம் : சங்கராபரணம்

**இராமன்:**

அன்னையாய் இருந்தென்னை அன்புடன் ஆள்பவரே
நன்னயம் செய்யென நல்லுரைகள் உரைப்பவரே
இன்னாசெய் தோரை ஒறுத்திடெனச் சொல்பவரே
நின்பாதம் தொழுதேன் நல்லாசிகூறும் சிற்றன்னையே

**இராமன் கைகேயியின் பாதம் தொடுதல்**

**கைகேயி:**

உன் புகழ் ஓங்க நல்நிலை பெறுவாய்...

**இராமன்:**

தங்கள் ஆசிகள் அன்னையே!

**கைகேயி:**

இராமா! தந்தை உன்னைக்காண நீண்டநேரமாகக் காத்திருந் தார். நீ வரவில்லை. இப்போது அவர் அசதியில் உறங்கி விட்டார்... அவர் உனக்கு அறிவிக்க விரும்பிய செய்தி ஒன்று உண்டு. நீ விரும்பினால் கூறுகிறேன்.

**இராமன்:**

தந்தை கட்டளையிட, தாய் அதைச் சொல்ல, கேட்டதைச் செய்வது எனக்குக் கிடைத்த பெரும்பேறே. தந்தையும் தாயும் நீங்களே. சொல்லுங்கள் நான் என்ன செய்யவேண்டும்.

மெட்டு : செப்பரிய பூவில் *(தேவசகாயம்பிள்ளை, பக். 44)*
தாளம் : ரூபகம் இராகம் : நடபைரவி

**கைகேயி:**

பேருசொல்ல வாழ்ந்தவனும் நீயே - வந்த
பேரிடரை சொல்லவேண்டும் நானே
பாரிலுந்தன் தந்தைசெய்கை யாலே - நாமோ
பலிக்கடாவாய் ஆகினோமே ராமா

**இராமன்:**

எந்தன்தந்தை செய்ததென்ன தாயே - இப்போ
என்புருக ஏக்கமுற்றதென்ன தாயே
உன்மகனாய் என்னைக்கொண்ட பின்பும் - தங்கள்
உள்ளத்திலே சஞ்சலம்மென்ன தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைகேயி:**

முடிபுனைவை மறுத்துவிட்ட அநீதி - இப்போ
முன்னதற்கு முரணல்லவோ தானே
மன்னராகும் தகுதியை பறித்தால் - கோசலை
மனமொடிந்து போய்விடுவாள் ராமா

**கைகேயி:** *(வசனம்)*

இராமா! கடல் சூழ்ந்த உலகத்தை பரதனே ஆளவேண்டுமென தந்தை விரும்புகிறார்.

**இராமன்:**

அரசபாரம் நீங்கிவிட்ட தாலே - மகிழ்வு
அடைகின்றேனே கவலையில்லை தாயே
சீர்பெறுவோன் பரதனென்றால் நன்றே - இதைச்
சொல்வதற்கு தயக்கமேனோ தாயே

**கைகேயி:** *(வசனம்)*

இன்னொன்றும் உண்டு ராமா.

**இராமன்:**

சொல்லுங்கள் தாயே!

**கைகேயி:**

பரதன் நாடாள, நீ போய் தாழிருஞ் சடைகள் தாங்கி, தாங்கரும் தவம் மேற்கொண்டு, புண்ணிய நதிகளில் நீராடி, பதினான்கு ஆண்டுகள் கழித்து வருதல் வேண்டும் என்று மன்னவர் கூறியுள்ளார்.

**இராமன்:**

தாயே! தந்தையின் கட்டளையாக இல்லாதிருந்து நீங்கள் இட்ட கட்டளையென்றாலும் அதனை நான் மறுக்கமாட்டேன். என் பின்னவன் பெற்ற செல்வம் அடியேனே பெற்றதைப் போன்றதாகும். இதைவிட சிறந்த நன்மை எனக்கு வேறில்லை. இன்றே கானகம் போகின்றேன். உங்களிடம் விடைபெறுகிறேன் தாயே.

**இராமபிரான் கைகேயியை கரங்கூப்பி வணங்கிவிட்டுச் செல்லுதல்**
**கைகேயி மகிழ்வுடன் நிற்றல்**

**திரை**

( * இக்குறியிட்ட கவிதைகள் கம்பராமாயணத்திலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

## கூத்து ஐந்து

# சங்கிலி

# செகராசசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச்சுருக்கம்

யாழ்ப்பாண வரலாற்றில் சங்கிலி செகராசசேகரன் மன்னன்; கி.பி. 1519 - 1565 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்து இயற்கை மரணம் எய்தியுள்ளான். சங்கிலி செகராசசேகரனைத் தொடர்ந்து ஐந்து மன்னர்கள் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்து வந்துள்ளார்கள். ஆறாவதாக ஆட்சிபுரிந்தவன் சங்கிலிகுமாரன் செகராசசேகரன். இவனே போர்த்துக்கேயருடன் நடைபெற்ற போரில் அவர்களால் கைதுசெய்யப்பட்டு, குடும்பத்துடன் கோவைக்கு (இந்தியா) அனுப்பப்பட்டு அங்கு சிரச்சேதம் செய்யப்பட்டவனாவான்.

சங்கிலி செகராசசேகரனின் ஆட்சிக்காலத்தின்போது; யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உட்பட்ட மன்னார் நகரில், போர்த்துக் கேயரால் மக்கள் மதமாற்றம் செய்யப்படும் நிகழ்வு அரங்கேறிக் கொண்டிருந்தது. இந்தத் தகவலை சங்கிலி செகராசசேகரன் அறிந்துகொள்கிறான். கோபமுற்ற அவன் இதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டுமென்று கருதி மதம் மாறியவர்களைக் கொன்றுவிட முடிவெடுத்துப் புறப்பட ஆயத்தமானான். இதனைப் பலர் தடுத்த போதும் அவற்றையெல்லாம் புறக்கணித்து, 1543 இல் யாழ் நகரிலிருந்து மன்னார் நகரை நோக்கிப் படையெடுத்துச் சென்று அங்கு மதம் மாறிவர்களெனை இனங்காணப்பட்ட 600 பேரைச் சிரச்சேதம் செய்கிறான்...

## பாத்திரங்கள்

| | |
|---|---|
| கட்டியகாரன் - 1 | |
| வீரர்கள் | |
| சங்கிலியன் | ( மன்னன் ) |
| அமுதவல்லி | |
| அமைச்சர் | |
| தளபதி | |
| கிராமத்தலைவர் | |
| இளஞ்சிங்கன் | |
| 1ம் பெண் | ( சபையோர் ) |
| 2ம் பெண் | ( சபையோர் ) |
| 3ம் பெண் | ( சபையோர் ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி செகராசசேகரன்

## காட்சி - 1

### இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

**சபை விருத்தம்**

**மெட்டு : விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

அங்கம் குலுங்கிட தங்கநிறக் கோலினை ஏந்தி
கிங்கிணித் தாளமும் சலங்கையும் சேர்ந் தொலிக்க
சிங்கார மாநகர மக்களுக்கு சங்கதி கூறவென்றே
மங்கல மொழி கட்டியகாரர் சபைதனில் வருகிறாரே

**கட்டியகாரர் பாடிக்கொண்டு வரல்**

**மெட்டு : சொல்லமுடியாது** *(தேவசகாயம்பிள்ளை, பக். 24)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : மாயா மாளவ கௌளை**

*பல்லவி*

கட்டியம்கூறவந்தோமே - உங்கள்முன்னே
கட்டியம்கூறவந்தோமே

**அனுபல்லவி**

கட்டியம்கூறவல்ல வல்லவர் நாமிருவர்
கட்டளைவந்ததுமே காற்றாய் பறந்திடுவோம்
கட்டுறுதிகொண்ட மன்னனின் காதையை
கடுகேனும்பிசகின்றி தருகின்றோம் கேளீர்

*சரணம்*

யாழ்மண்ணையாண்ட யானையை யொத்தவீரன்
யாருமெயெதிர்கொள்ளா வீரருள் வீரனவன்
சூழ்நகர்மன்னரெல்லாம் சாமரம் வீசிடுவர்
சொல்வதைச்செய்வதில் சூராதி சூரனவன்

(கட்டி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமும்அரசியலும் மன்னனின் கண்களாமே
மதிக்காதார்சிரசுகள் மறுகணம் வீழ்ந்திடுமே
மதம்மாறியமக்களுக்கு மன்னனிட்ட தீர்ப்பை
முறையாகக்கூறிடும் கதையினைக் கேளுங்களே
(கட்டி...)

**கட்டியகாரர் பாடிக்கொண்டு உள்ளே செல்லுதல்**

**சபையோர் வரவு**

மெட்டு : **கனகங்கள் ஒளிதங்கு** (தேவசகாயம்பிள்ளை, பக். 01)
*தாளம் : **சதுஸ்ர ஏகம்** (மிஸ்ர நடை)* *இராகம் : **ஹரஹரப்பிரியா, சாருகேசி***

***சபையோர்:***

சீரோங்கு பேரோங்கு இடர்கண்டு
சிரந்தாழா மன்னவன் - இவர்
பாரெங்கும் புகழோங்க தோழோங்க
படைகொண்டு பொருதுனன்

பகலவன் போலொளி முத்துக்கள்
புரளுதிட மார்பினன் - வீர
செகராச சேகரனெனப் பெயர்கொண்ட
சங்கிலி மன்னவன்

கற்றவர் காமுறும் கொற்றவன்
கொலுநோக்கி வருகின்றார் - காண
சுற்றத்தார் எல்லோரும் வாருங்கோ
சுடரோனைப் பாருங்கோ

மங்கையர் பூவிதழ்கள் வீசிநின்றே
மகிபனை வாழ்த்துங்கள் - இப்போ
தங்கத்தின் தேரிலேறி வருகின்ற
தண்ணொளி பாருங்கோ

**சபையோர் அரை வட்டமாக நிற்றல்**

**சங்கிலி மன்னன் வரவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : அகிலமும் புகழும் (கண்டி அரசன், பக். 08)
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : கீரவாணி

*சங்கிலி:*

ஈழத்தின் தலையது யாழ்நகர் காவலன்
வேழத்தை வீழ்த்தி வெற்றியும் கண்டவன்
செழுமணி முடியது சூடிய மன்னவன்
தொழுதடி பணியாதோர் யாருமே இல்லையே
யாழின் கொடிபறக்க யாழின் இசையொலிக்க
பாழும் துயர்துடைக்கும் பார்த்திபன் நானே

அயலவர் புகழ்ந்திட ஆட்சி செய்பவன்
கயவரை இனங்கண்டு தாக்கி அழிப்பவன்
புயபல வீரரின் படையணி கொண்டவன்
புயலெனப் பாய்வதில் பாராட்டப் பெற்றவன்
எங்கும் அணிதிரளும் பங்கம் புரிபவர்கள்
அங்கம் சிதறிவிழ ஆள்பவன் நானே

## திரை விலகல்

## இடம் : அரண்மனை

**சங்கிலி மன்னன் கொலு ஏறுதல்**
**சபையோர் ஆடியவாறு விலகி உள்ளே செல்லுதல்**
**அமுதவல்லி வரவு**

மெட்டு : பூவுல கெல்லாம் விளங்க (தேவசகாயம்பிள்ளை, பக். 52)
தாளம் : ரூபகம் இராகம் : நடபைரவி

*அமுதவல்லி:*

சோழமண்ணை ஆழுமன்னன் புத்திரியும்நானே
சோலைக்கிளி பேசுகின்ற நாடுஎனதுநாடே
யாழின்மன்னன் மணம்புரிந்த குலமகளும்நானே
யாதுமெந்தன் கணவரென்றே வாழ்பவளும்நானே

இந்நாள்வரை எந்தக்குறை இல்லையென்பேனே
இருமனமும் ஒருமனமாய் வாழுகிறோம்நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரங்கம் எம்மிடத்தில் ஏதுமில்லையாமே
அன்பொழுக வாழுகின்ற தம்பதிகளானோமே

**சங்கிலியன் கொலுநோக்கி அமுதவல்லி செல்லுதல்**

மெட்டு : **ஆசிரியம்** இராகம் : **சங்கராபரணம்**

***அமுதவல்லி:***

நல்லூரில் மாளிகையில் நாவலர் போற்ற நல்லோர் வாழ்த்த
நல்லூரான் அருளில் நல்லாட்சி செய்யும் நாயகனே வாழ்க
கல்லும் உருகிடக் கருணை புரிந்திடும் காவலனே வாழ்க
பல்துறை வித்தகர் பரம்பரை வந்த கண்ணாளனே போற்றி

***சங்கிலி:***

போதும் தேவி! புகழ்ந்தது போதும் தேவி! தாங்கள் அந்தப்புர மிருந்து அரண்மனை வந்ததேனோ?

***அமுதவல்லி:***

அரச பணியென்று அலைகிறீர்கள். என்னைத்தேடி அந்தப்புரம் வந்ததில்லை. அடியேன் சந்திப்பதற்கு வேறு எங்கும் செல்ல முடியுமா?

***சங்கிலி:***

கோபத்திலும் நீ அழகாக இருக்கிறாய். நீ கோபித்ததை இதுவரை கண்டதில்லையே?

***அமுதவல்லி:***

அதனால்தான வருவதில்லையோ?

மெட்டு : **காணரும் மேலான காட்சி** *(எஸ்தாக்கியார், பக். 153)*
தாளம் : **சதுஸ்ரஏகம்** மெட்டு : **சங்கராபரணம், மாயாமாளவ கௌளை**

***சங்கிலி:***

**பல்லவி**

சோழ இளவலே ஜோதிவடிவாளே - மனங்கவர்ந்த
சோழ இளவலே ஜோதிவடிவாளே

**அனுபல்லவி**

தேவலோக கன்னியராய் எழிலூட்டும் நங்கை
தேகமோ சூரியபிர காசமோ சந்திரோதயமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

சிந்தைநிறை வித்தகியாய் வீசுமொளி பிம்பமோ
அந்திவான கதிரவனின் அழகினை யொத்தவளோ
சந்தித்ததும் மனங்கவர்ந்த சுந்தரியே என்னவளே
உந்தன் அன்பு உயிரின் மேன்மையே - உணர்வாயணைத்து
எண்ணத்தை நிறைவு செய்யாயோ - அருகிருந்து
திண்ணமாய் நின்றே என்குறை தீர்க்காயோ

**அமுதவல்லி:**

கண்ணாளா! ஓய்வின்றி தினமும் காரியமாற்றுகின்றீர்கள். இந்த நிலை தொடர்ந்தால் உங்கள் உடல் பாதிப்படையாதா? மனைவி எனக்கு கவலை கிடையாதா?

**சங்கிலி:**

தேவி! என்ன செய்வது? மக்களின் தேவைகள் ஒருபுறம். அன்னியரின் ஊடுருவல் மறுபுறம். உடனிருந்தே சூழ்ச்சி செய்பவர்கள் இன்னொருபுறம் இந்நிலையில் நான் எப்படி ஓய்வெடுக்க முடியும்.

**அமுதவல்லி:**

உங்களுக்கு நாட்டின்மீது அக்கறை. எனக்கு உங்கள்மீது மட்டும்தான் அக்கறை.

**மெட்டு : மதனத்துரையே** *(அலங்காரரூபன், பக். 90)*
**தாளம் : ஆதி** **இராகம் : சிந்துபைரவி**

**சங்கிலி:**

கண்ணின் மணியே தண்ணொளி நிலவே
கருணையின் உருவே - மண்ணில்
பெண்ணாய் பெற்றவன் பேறு பெற்றோனே
பெண்மையின் குணங்கள் நிறைந்த - உன்னை
மணந்ததால் சிறப்பை யடைந்தேனே

**அமுதவல்லி:**

கள்ளங் கபடம் கண்டிலேன் நானே
காதலும் கொண்டேனே - உங்கள்
உள்ளங் கவர்ந்ததில் உன்னத மடைந்தேனே
உளமுருகிட உணவர்வற்ற வளானேனே - இப்போ
பிள்ளையைப் பெற்று மகிழ்ந்தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கிலி:*

செந்தமிழ் மண்ணின் சித்திரப் பாவையே
சோழத்தின் இளமயிலே - உந்தன்
பைந்தமிழ் தோகையின் ஆட்டங் கண்டேனே
பலாக் கனியாய்ச் சுவைத்தேனே - உந்தன்
பல் சுவையினில் முகிழ்ந்தேனே

*அமுதவல்லி:*

மண்ணில் உயர்வான மன்னரில் மன்னரே
மங்கல திருவிளக்கே - என்னை
மாண்புடன் மணந்துமே மகிழ்வினைத் தந்தீரே
மானம் பெரிதென வாழ்பவரே - தினம்
மனையாளை மறக்காது வாருமையா

*சங்கிலி:*

அமுதவல்லி! எனது உடல், உயிர், உணர்வு எல்லாமே நீதான். உன்னை மறந்திருக்க முடியுமா என் மாணிக்கமே.

*அமுதவல்லி:*

இதற்குமட்டும் குறைவில்லை.

*சங்கிலி:*

இப்போ அந்தப்புரம் வரவேண்டும் அவ்வளவுதானே. இதோ வருகிறேன்.

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 2

### இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

மன்னார் கிராமத் தலைவன் வரவு

மெட்டு : ராசமகாராசன் *(தேவசகாயம்பிள்ளை, பக். 07)*
தாளம் : சதுஸ்ர ஏகம் இராகம் : மாயா மாளவ கௌளை

**கி. தலைவன்:**

பல்லவி

மன்னரடிதேடியே செல்வேன் - கண்டதைச்சொல்ல
மன்னரடிதேடியே செல்வேன்

அனுபல்லவி

கலக்கமற்று மக்கள்வாழ பகைவர்கள் மாண்டுவீழ
கண்ணாக மண்ணினையே கருதிஆட்சி செய்யும்
(மன்ன...)

சரணம்

மாற்றார் நிழல் மன்னாரில் காணவே - அதி விரைவாய்
மத மாற்றம் நிகழ்வதுகண்டே
ஏற்றவிறக்கங் களின்றி கண்டதைக் கண்டபடி
எடுத்துரைத்து நானும் நல்லபெயர் பெற்றிடவே
(மன்ன...)

ஆற்றல் மிகு ஆதிபன் முன்னிலே - அறிந்தவற்றை
ஆரவாரம் எதுவுமின்றியே
சீற்றங்கொள்ளச் செய்யும் சேதியைக் கேட்டவுடன்
சிறுத்தைபோல பாயும் சீற்றத்தைப் பார்த்திடவே
(மன்ன...)

மந்திரி வரவு

மெட்டு : பொன்னின் நிறமும் *(தேவசகாயம்பிள்ளை, பக். 77)*
தாளம் : ரூபகம் இராகம் : சிந்துபைரவி

***அமைச்சர்:***

முத்துமணி யிலங்கும் நல்லூரின் மனையில்
எத்தகை வீரமுமாய் மண்ணினை ஆள்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவித சாமரங்க ளெத்திசையுமாக
அசையுதேயையா - இதைவிட - ஆசி ஏதையா

சிங்கணை கொலுவில் தங்கமுடியோடு
பங்கமுற நாட்டினை நீதியாய் ஆள்பவர்
இன்றவர் சமூகம் சென்றுமேநானும்
இன்னல்விலகிட - நல்மதிகூறச் - செல்லுவேனே

**மந்திரி உள்ளே போதல்**
**தளபதி வரவு**

மெட்டு : **பெருமை பெருமை** *(ஜெனோவா)*
தாளம் : **சதுஸ்ரஏகம்** (மிஸ்ரநடை) இராகம் : **மாயா மாளவ கௌளை**

*தளபதி:*

மன்னரெனை யழைத்த சேதியை அறிந்தேனே
முறையுடன் சென்றுமே மீட்சியைக் காண்பேனே
மன்னரின் வீரத்தை பலதேசம் அறியுமே
மாற்றானின் நிழல்தனை நெருங்கிட விடமாட்டேன்

வீரம் நிறைந்தஎம் யாழ்ப்பாண மன்னரை
வழிபட மறுப்போரை உயிருடன் விடமாட்டேன்
வீரியம் பேசிகின்ற வீணர்கள் அனைவரையும்
வாளுக்கு இரையாக கொடுத்திடத் தயங்கேனே

## திரை விலகல்

## இடம் : அரண்மனை

**சங்கிலி சிம்மாசனத்தில் நின்று கடவுளை வணங்குதல்**

மெட்டு : **விருத்தம்** இராகம் : **சங்கராபரணம்**

*சங்கிலி:*

வணங்கினேன் நல்லூர் கந்தா வாழுநாளில் வளமுடன் வாழ
துணையாக வாரும் கந்தா துணிவினை எனக்குத் தாரும்
இணையில்லா உந்தன் அன்பு இம்மண்ணில் நின்று நிலைத்திட
அணையா விளக்காக நின்றனை வரையும் காத்தருளும் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : கவி** **இராகம் : சங்கராபரணம்**

*மந்திரி:*

கரகாட்டம் மயிலாட்டம் வாழ கலைக ளனைத்தும் செழிக்க
சீருடனும் சிறப்புடனும் ஆழும் எங்கள் மன்னவா போற்றி

*தளபதி:*

வலுவூட்டி வீரர்கள் சிறக்க வலிமைமிகு படைகள் பெருக
குலமதைக் காத்து நிற்கும் குறையற்ற காவலனே போற்றி

*சங்கிலி:*

மந்திரியாரே!

**மெட்டு : அப்பனே அப்பனே** *(தேவசகாயம்பிள்ளை, பக். 32)*
**தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)** **இராகம் : கீரவாணி**

*சங்கிலி:*

எந்தையர் ஆண்டிட்ட எம்மீழ மண்ணினை
முந்தையோர் போலவே மதிப்பவர் நீரன்றோ
சந்தித்த இடரிலெல்லாம் மதிகூறிய மந்திரியே
சிந்தாமல் செப்புவீர் தேசத்தின் சிறப்பினை

*மந்திரி:*

மறக்காமல் செப்புவேன் மனதினில் உள்ளதை
அறஞ்செழித் தோங்கியே அமைதியும் நிலவுது
குறைகூறும் மக்கள் எவருமோ இங்கில்லை
குறைவின்றி வானமும் பூமியும் செழிக்குது

*சங்கிலி:*

நிறைவான தகவலால் நிம்மதி பெற்றனே
முறையான ஆட்சிக்குப் படைகளும் ஒன்றே
இறைமையைக் காப்பவர் என்றும் அவர்களே
மறைப்பின்றி கூறுவீர் வீரநல் தளபதியே

*தளபதி:*

சோழநாடு சென்றுமே வென்றது எம்படை
ஈழநாட்டிலும் இணையின்றி யுள்ளது எம்படை
சூழ்பகையால் நாட்டுக்கு ஆபத்து நேரிட்டால்
மாழும் நிலையிலும் மகிழ்வுடன் எதிர்கொள்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி:**

அனைத்தையும் கேட்டேன் ஆனந்தம் கொண்டேன்
இணையற்ற வீரரை இம்மண் பெற்றதால்
துணையின்றி மக்கள் துணிவுடன் செல்வர்
துணையாக நானிருப்பேன் தொடரட்டும் உம்பணி

**தளபதி / மந்திரி:**

நன்றி மன்னவா!

**வீரன் வரல்**

**வீரன்:**

மன்னிக்க வேண்டும் வேந்தே!

**சங்கிலி:**

ம்...

**வீரன்:**

மன்னாரிலிருந்து கிராமத்து தலைவர் உங்களைக் காண வந்திருக்கிறார்.

**சங்கிலி:**

நல்லது. அவரை உள்ளே அனுமதிக்கலாம்.

**வீரன்:**

உத்தரவு வேந்தே!

**வீரன் போதல்**
**கிராமத்துத் தலைவன் வரல்**

மெட்டு : **விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

**கி. தலைவன்:**

யாழ்அரசை ஆளும் எங்கள் ஜெயவீரன் வேந்தே கேளும்
யாருமெதிர் பார்க்காத நிலையில் யாரோ சிலர் புகுந்தனர்
பாழ்நிலை தோன்றுதல் கண்டு வாழதிருக்க முடியவில்லை
பதம்நாடி வந்தேன் மன்னா பார்த்ததை நேரில் எடுத்துரைக்க

**சங்கிலி:** (வசனம்)

மன்னாரில் வாழும் விசுவாசமுள்ள கிராமத்துத் தலைவரே! புதிய தகவலைக் கொண்டுவந்துள்ளீர். அங்கே கண்டதைச் சொல்லிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : பூண்டேன் சிரநமஸ்காரம் *(விஜய மனோகரன், பக். 27)*
தாளம் : சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை) இராகம் : சக்கரவாகம்

**கி. தலைவன்:**

கண்டேன் கருங்காலி கூட்டம் - எங்கள்
காட்டி லவர்கள் நடமாடக் கண்டேன்
வெண்மை நிறத்தவர் கூட்டம் - கொண்டு
வந்தனர் உணவுடை பல பலகாரம்

அனுதினம் கந்தனில் நாட்டம் - மக்கள்
அனைவரும் மதமதை மாறிடும் கட்டம்
கணமதில் கண்டதால் ஈடாட்டம் - யாவும்
கருத்துடன் உரைத்திட வந்தேனே நானே

பலநூறு மக்களின் கூட்டம் - மதப்
பற்றின்றி மாறிடும் தகவலைக் கேட்டேன்
குலமாளும் மன்னர்க்கு தெரிவிக்க வேண்டி - உடன்
கால்நடை யாகவே வந்தேனே நாடி

**சங்கிலி:**

கிராமத்துத் தலைவரே!

**மெட்டு : கல்வெட்டு சிந்து**
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **மெட்டு : கீரவாணி**

**களிநெடில்**

யாழ்பாடி பெற்றதனை ஆழுகின்ற மன்னரென்னை
யாழிசை இசைத்தே தொழுதுநிற்பர்
சூழ்கலி கண்டவுடன் வில்லினின் அம்புஎன
சுழன்று சென்றே முடித்துவைப்பேன்
ஆழிவழி வரும்பகையை நொடியினில் தடுத்து
அலையென எழுந்தே அமிழ்த்திடுவேன்
ஊழியாய் வந்தெமை அழிக்க நினைத்தாலும்
உடனடியாகவே தடுக்கவல்ல எந்தன்

**சிந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பல்லவி

நாட்டிற்குள் நுழைந்துவிட்டானோ - பயந்தானென
கெட்டியாய் முடிவெடுத்தானோ

### அனுபல்லவி

நாட்டிற்குள் நுழைந்தானோ நழுவிட நினைத்தானோ
கொட்டம் அடித்தானோ கோலோச்சத் துணிந்தானோ
நாட்டிற்குள் நுழைந்துவிட்ட துட்டரின் சிரமறுத்து
காட்டிற்குள் எறிந்து வழிகாட்டுவேன் திண்ணமதாய்

### சரணம்

மதம்மாற்ற முடிவெடுத்து மன்னாரில் புகுந்தவரின்
மதங்கொண்ட செயலின் விந்தையை நினைக்கும்போது
மனதினில் அதிவேகம் - உண்டாகுது
கணமதில் கடுங்கோபம் - தேடிவந்து
கறைதந்து கவர்ந்தெடுக்க கடிதினில் துணிந்தவரின்
வெறிகொண்ட எண்ணத்தின் தன்மையை நினைக்கும்போது
சுளருதே பூகோளம் - திக்கெட்டும்
சிரிக்குதே மனிதகுலம் - சீக்கரந்தனிற்
அந்நியர் தலைகொய்து அன்னாரை அழித்தொழித்து
முந்தையோர் மதத்தினை முழுமையாய்க் காப்பேனே
(நாட்டி...)

பண்டுதொட் டிம்மண்ணில் நுழைந்திடும் அண்டலர்கள்
நிண்டுதலை தாழ்த்தி கொண்டேவல் செய்திடும்
பண்பினைக் கண்டறியாரோ - அல்லாலிந்த
மண்ணினில் கால்வைப்பாரோ - துணிந்துவந்து
நெஞ்சினில் நெருப்பைவைத்து அச்ச உணர்வைத்தந்து
விஞ்சிட நினைத்துமே மதத்தைக் கையிலெடுத்து
என்னையும் எதிர்ப்பாரோ - கைகட்டிநின்று
கண்ணியம் பார்ப்பேனோ - மன்னாரிலின்று
கால்வைத்தோரை அழித்து மதம்மாறி யோரையும்மழித்து
காட்டில் புகுந்தவரின் கழுத்தை வெட்டியெறிவேனே
(நாட்டி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தளபதி:**

ஆணை இடுங்கள் மன்னா! அற்பரைப் பந்தாடி விடுவோம்.

**சங்கிலி:**

ஆம்... அதுதான் வழி... ஆயத்தமாகட்டும் அணிகலன்கள், ஆயுதங்கள், கடற்கலங்கள்... இக்கணமே புறப்படுங்கள் மன்னார் நகரை நோக்கி. மதம் மாறுபவர்களையும் மதம் மாற்றுபவர்களையும் இல்லாதொழிக்க வேண்டும். இது உலகுக்குக் காட்டும் பாடமாக இருக்கவேண்டும்.

**மந்திரி:**

வேந்தே! எம் மக்களை நாமே...

**சங்கிலி:**

மதமும் அரசியலும் எனது இரண்டு கண்கள். அதில் ஒன்றை இழக்க விரும்பவில்லை. தளபதியே! பொன்னைத் துறையிலிருந்து கடற்படை புறப்பட்டுச்செல்லட்டும்... தரைப் படையும் அங்கு செல்லட்டும். நானே நேரில் வருகின்றேன். அதற்கான ஆயத்தங்களை இக்கணமே செய்யத் தொடங்குங்கள்... இத்துடன் சபை கலைகிறது.

**தளபதி:**

உத்தரவு மன்னா!

**மூவரும் வணங்கிவிட்டுச் செல்லுதல்**
**சங்கிலி கோபத்தை வெளிக்காட்டியவாறு அங்குமிங்கும் நடத்தல்**
**அமுதவல்லி விரைந்து வரல்**

**அமுதவல்லி:**

பிரபு!

**சங்கிலி:**

என்ன?

**மெட்டு : செப்பரிய பூவில்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 44)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : நடபைரவி**

**அமுதவல்லி:**

என்துணைவா உந்தன் மொழியாலே - பெரும்
ஏக்கமதை கொண்டேனே இப்போதே
கண்ணினை விற்றே காட்சிகொள்வதோ - மனு
காக்கும் மன்னர்க் கழகிதுவன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி:**

என்ன நடந்தது இப்போது? எதற்காக இந்தப் புலம்பல்?

**அமுதவல்லி:**

சொன்னவார்த்தை இன்ன தென்றறியீரோ - யாரைக்
கொன்றிடவே ஆணை உரைத்தீரோ
எண்ணமுமக் கென்றும் வரலாமோ - தீது
எம்மவர்க்கே என்பதை அறியீரோ

**சங்கிலி:**

அறிந்துதான் ஆணை கொடுத்தேன். மதம் மாறியவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களே.

**அமுதவல்லி:**

தன்னுடலில் அங்கம் அறுக்கலாமோ - இப்போ
தங்களாணை அதற் கொப்பானதே
கண்ணாளனே காப்பதும் கடனன்றோ - மதங்
கொண்டவராய் மாறாதரசாட்சி செய்வீரே

**சங்கிலி:**

அமுதவல்லி உனக்குப் பொருத்தமற்றவற்றில் நீ ஈடுபடுகிறாய். இது நாடு, அரசாட்சி, அந்தப்புரமல்ல.

**அமுதவல்லி:**

என் தந்தை சோழ நாட்டை ஆழ்பவர். அவர் மகளுக்கு அரசியல் புதிதல்ல பிரபு.

**சங்கிலி:**

வேண்டாம் தேவி. நான் கோபத்தில் நிற்கிறேன். அதற்கு நெய் வார்க்காதே.

**அமுதவல்லி:**

தவறைச் சுட்டுவதற்கு மனைவிக்கு உரிமையில்லையா?

**மெட்டு : ஊனற்றவளைசங்க** *(தேவசகாயம்பிள்ளை, பக். 80)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** (மிஸ்ரநடை) **இராகம் : ஹம்சவத்வனி, கீரவாணி**

**சங்கிலி:**

சேனைபலம்மிகுந்த சங்கிலி மன்னன் தன்னை
சோழனின் மகளென்ற கர்வத்திலே சினந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனையென்றே வாழ்ந்திட உபதேசம் செய்தாயோ
பழிபாவத்துக் கஞ்சாது பாராள்வோன் அறியாயோ
முறையற்று அரசாள மூத்தவனை நஞ்சூட்டி
அறமுறை மீறியன்றே கணமதில் கொன்றேனே

எந்தன்நலங்காக்க எதையும் செய்திடத் துணிந்த
என்னண்ணன் பண்டாரன் சிரந்தனை அறுத்த
தந்தையைக் கானகம் ஏகிடவழி காட்டிய
தனையனும் நான்தானே என்பதை அறியாயோ
வைப்பாட்டி மகனென்ற வசையினைத் தீர்த்திட
எப்பாடு பட்டேனும் என்கர்வம் விடமாட்டேன்

**அமுதவல்லி:**

என்ன சொல்கிறீர்கள்?

**சங்கிலி:**

ஆசைநாயகியின் மகன் அரசாள முடியாதாம்.

**அமுதவல்லி:**

அதற்காக...

**சங்கிலி:**

பரத்தையின் மகனுக்கு பாராள முறையில்லையாம்.

**அமுதவல்லி:**

அதனால்...

**சங்கிலி:**

மூத்தவன் சிங்கவாகுவை நஞ்சூட்டிக் கொன்றேன். அடுத்தவன் பண்டாரத்தை பூஞ்சோலையில் வாளால் வெட்டிக் கொன்றேன். இதுகண்டு தந்தை காடேகினார். நான் நாட்டின் அரசனானேன்.

**அமுதவல்லி:**

புத்திசாலித்தனமாக பேசுவதாக கருதுகிறீர்களா?

**சங்கிலி:**

ஆம்... என் புத்தியைப் பயன்படுத்தி அண்ணன் பரநிருபசிங்கனை கையுக்குள் போட்டு அவன் கிளர்ந்தெழ முடியாமல் செய்தேன்.

**அமுதவல்லி:**

தங்களின் வீரப்பட்டியலில் மன்னாரும் ஒன்றா?

**சங்கிலி:**

உண்மை... மதமும் அரசியலும் எனது இரண்டு கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் விரோதிகளை அரவமின்றி அழித்தேன். மதம் மாறியவர்களை அழித்திடத் துணிந்தேன்... இதனிலும் அரசியல் உண்டு. மதம் மாறியவர்கள் அந்நியர் ஊடுருவ வழிசெய்வார் கள்... இது புரியாது உனக்கு.

*அமுதவல்லி:*

இப்படிப்பட்ட கொடியவரா என்கணவர்?

*சங்கிலி:*

இது அரசியல் சாணக்கியம். அதை தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் உனக்கில்லை. நீ அந்தப்புரம் செல். என் உத்தரவு.

**அமுதவல்லி ஆவேசமாக உள்ளே செல்லுதல்**
**சபையோர் பாடியவாறு வரல்**

**மெட்டு : கேடுசொல்ல போகுமோ** *(தேவசகாயம்பிள்ளை, பக். 20)*
**தாளம் : ஆதி** **இராகம் : தோடி**

*சபையோர்:*

பல்லவி

தேடிச்சிரங் கொய்ய போறீரோ - மக்களைத்
தேடிச்சிரங் கொய்ய போறீரோ

சரணம்

தேடிச்சிரங் கொய்யலாகுமோ தேசத்து மக்களினை
கேடுவந்துமை சூழுமே கொடியவடு ஆகிடுமே
நாடுநகரங்க ளனைத்தும் நாசமாகுதல் நல்லதா
நாடேசுடு காடாகிடாமல் எண்ணத்தை நீமாற்றுமையா
(தேடிச்சிரங்...)

கொல்லுவது மன்னனாணை சொல்லுவது மக்களன்றோ
தொல்லுலகில் சாதிப்பது கொல்லுவது என்றல்லவே
நில்லாமல் செல்வதானால் காலமெலாம் களங்கம்தானே
சொல்லெடுத்துச் சொல்லுகிறோம் ஏற்றருளும் மன்னவரே
(தேடிச்சிரங்...)

மன்னரேபாதக மென்றிதை அறியாதார் நீரன்றோ
மன்னார்வாழ் மக்களும் மன்னரின் மக்களன்றோ
துன்பத்தைக் கொடுப்பது தூயோனே உமக்காகுமா
சின்னவர் எண்ணத்தை சிதைத்திடாதீர் மன்னவரே
(தேடிச்சிரங்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : ஆழிப்பார் (தேவசகாயம்பிள்ளை, பக். 73)
தாளம் : சதுஸ்ரஏகம் இராகம் : நடபைரவி

*சங்கிலி:*

மானந்தான் பெரிதென வாழ்ந்திடும்
மன்னவன் எனதுரை கேட்டீரோ
ஈனந்தான் என்செயல் அவனியில்
ஈடிணை எனக்கினி இல்லையே

மதமெந்தன் கண்களி லொன்றே
மதம்மாற விடுவது சரியோ
நிதமிந்தன் செயலது நிகழ்ந்தால்
நிம்மதி எனக்கெங்கே உள்ளது


அந்நியர் நாட்டினில் கால்வைக்க
அன்னவர் துணையவர்க் குதவிடும்
சிந்திடும் இரத்தங்கள் யாவையும்
சிறந்த நாட்டை தந்திடுமே

*சங்கிலி:*

நான் எடுத்த முடிபு எடுத்ததுதான். உங்களின் ஆலோசனையைக் கேட்க நான் தயாராயில்லை. ம்... நீங்கள் போகலாம்.

**சபையோர் மௌனமாய் செல்லுதல்**

**திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 3

## இடம் : வீதி (திரைக்கு முன்னால்)

**மெட்டு : வெற்றிவீரன் நானையா** *(தேவசகாயம்பிள்ளை, பக். 61)*
**தாளம் : சதுஸ்ரஏகம் (மிஸ்ரநடை)** **இராகம் : கல்யாணி**

***வீரர்கள்:***

**பல்லவி**

மன்னார் நோக்கி செல்வோமே - வெற்றிபெற
மன்னார் நோக்கி செல்வோமே

**சரணம்**

வெற்றி வீரனான மன்னவரெம்மைத் தொடர
வற்றாது பணிகளால் அவரின்மனங் குளிர
சுற்றிற் சுழன்று பலரைப்பந்தாடி மீண்டு
சாதுரர் நாமென சரித்திரம் படைக்கவே
*(மன்னார்...)*

பூனையைப் போல்வந்து பதுங்கிய மூடர்தன்னை
புலியெனப் பாய்ந்துமே பலிக்கடா ஆக்கிடவே
சேனையின் பலத்தை செந்நிறத்தோர் அறிந்திடவே
செம்மலெம் மன்னரின் செழுமையை உணர்த்திட
*(மன்னார்...)*

எட்டிப் பிடித்தவரை கண்டதுண் டமாக்கிடவே
எங்கெங்கு சென்றாலும் அங்கமதை அரிந்துமே
கொட்ட மடக்கிய கொடியினை ஏற்றியே
கோலோச்சும் மன்னனின் கொள்கையை உரைத்திட
*(மன்னார்...)*

***வீரன்:***

வாருங்கள் அந்தக் கடலோரம் எமது கூடாரங்களை அமைத்துக் கொள்வோம்.

**வீரர்கள் உள்ளே செல்லுதல்**
**அரச அலுவலகரான இளஞ்சிங்கம் வரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : அத்தனருளாளி** *(தேவசகாயம்பிள்ளை, பக். 62)*
**தாளம் : மிஸ்ரசாபு** **இராகம் : சிந்துபைரவி**

**இளஞ்சிங்கன்:**

கர்த்தன் அருளால் ஜென்மவினை நீங்கி
காத்தருள் என்றே கவலையை விடுத்து
தீர்த்திட விருப்புடன் திருமுழுக்குப் பெற்று
தர்ம நெறியினைத் தழுவிடச் செய்தேன்
திறந்தவுள்ளம் துறந்தபாவம் - சிறந்ததாக இருக்குமென்னும்
பிறந்தநாள் இணைந்ததுன்பம் - அகன்றதாக மாறுமன்றோ

எம்மவர் கட்டுண்ட இன்னலைத் துடைத்து
எளிதினில் மோட்ச இராச்சியம் அடைந்திட
இம்மண்ணில் தேவனை தயங்காது ஏற்றநாம்
இடரின்றி வாழ்கின்றோம் அவரது செயலாலே
தவங்களற்று தயைவேண்டி - துணிவுடன் உரைத்துமே
செபஞ்செய்து செய்கருமம் - தவறின்றிச் செய்யவே

**குடிமக்கள் இருவர் வரல்**

**இளஞ்சிங்கம்:**

வாருங்கள் மக்களே! மன்னார் வாழ் மக்கள் எல்லோரும் முன்னரைவிட மகிழ்வாக இருக்கிறார்களா? வழிபாடுகள் கிரமமாக நடைபெறுகின்றதா?

**மெட்டு : பொன்னின் நிறமும்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 77)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : சிந்துபைரவி**

**குடிமகன் - 1:**

மன்னார் சிறப்பில் மண்ணின் வனப்பில்
மகிபன் இயேசுவின் மகிமை துலங்குது
விண்ணுறை வாழும் தேவனை தேடாவிடின்
மோட்சமேதையா - இருந்துமேன் - வாழ்வு தேவையா

**இளஞ்சிங்கன்:**

கர்மவினை நீக்க கர்த்தரை ஏற்றோமே
கடல்மடை எனவே கருணை நிறையுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மம் ஓங்கிட தானமும் செய்வோமே
தயவுதேவையே - மக்களிடம் - கருணைதேவையே

குடிமகன் - 2:

மனதில் மயக்கம் கொண்டு வாழ்ந்தோமே
மார்க்கம் இல்லையென்றே வாழ்வில் இருந்தோமே
ஈனப் பிறவியின் இருளும் நீங்குதே
இதுவரைசெய்த - பாவமும் - நீங்குதே ஐயா

இளஞ்சிங்கன்:

மின்னும் அழகில் மலரும் மானிடர்
மண்ணில் உறவாக மகிழ்ந்து வாழ்கிறார்
இணையில்லா இயேசுவின் இனிமை காண்கிறோம்
இனியமோட்சமே - எம்மை - அழைக்குதே இப்போ

**மூவரும் உள்ளே செல்லுதல்**
**வீரர்கள் வரல் தொடர்ந்து**
**சங்கிலி ஆவேசத்துடன் வாளை ஓங்கியவாறு வரல்**

**மெட்டு : கல்வெட்டு சிந்து**
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : கீரவணி**

சங்கிலி:

சீரேறும் சங்கிலியெனது நாமமது கேட்டிடில்
சத்தமே அடங்கி விடுமே
பாரினில் யாழரசை ஆழ்பவனென்னை
பார்த்தவர் பணிந்து நிற்பர்

தேரேறி வருவதை தூரத்தே கண்டால்
தாழிட்டு வணங்கி வரவேற்பர்
நேரெதிரே மலைநின்றால் வேரோடுபாறுமே
நெடியமரம் ஒடிந்து விடுமே

பேரேறு மென்னெதிரே மாறாக வந்தவரை
பார்வையே சுட்டு எரிக்க
காரென்று குரலெழுப்ப காவலன் நானும்
கயவரை வதை புரிகுவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து

வெட்டிடுவேனென்றே யுரையடா - மதம் மாறியோரை
வெட்டிடுவேனென்றே யுரையடா
வெட்டிடுவேனென்றே யுரைத்து
விட்டிடுவேன்னென்ற கருத்தை
விட்டவரைச் சரித்து - வட்டமாயத் தலை குவிக்க
(வெட்டிடு...)

மிக்கவே கர்வமே கொண்டு - கால்பதித்தவரை
அக்குவேறாக்கி நரிகளுக்கீந்து
கண்டவர் உளம் துடிக்க
மன்னாரிலுள்ளோர் வெடிக்க
அண்டையோர் சிலிர்க்க - அந்நியருடல் நடுங்க
(வெட்டிடு...)

அன்னியர்க் கெண்ணமென்னடா - கால் பதிக்க
அன்னவர்க்குத் துணிவேதடா
தப்பென்றே மதத்தை எண்ணி
செப்பியவன் சிரத்தை வெட்டி
அப்படியே எடுத்து - அக்கினியில் பொசுக்கிடவே
(வெட்டிடு...)

**வீரர் இளஞ்சிங்கத்தை அழைத்துவரல்**

***வீரன்:***

வேந்தே! இவர் மன்னார் அரச அலுவலகர் இளஞ்சிங்கம். இங்கு நடைபெறும் மதமாற்றத்திற்கு இவர்தான காரணம் என்று அறிகிறோம்.

**மெட்டு : ஓகோ நீலகண்டா** *(தேவசகாயம்பிள்ளை, பக். 127)*
**தாளம் : (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)** **இராகம் : நடபைரவி**
**(சோகம்) மிஸ்ரசாபு** **இராகம் : நடனபைரவி**

***சங்கிலி:***

வாருமிளஞ்சிங்கா விரும்பாக்கோலம் கொண்டாய் - ஏனோ
வற்றாதநதியாக வாழுமிந்து மதத்தை மீறியும்சென்றாயோ

***இளஞ்சிங்கன்:***

மண்ணகவாழ்வன்றே விண்ணக வாழ்வுபெரிதே - இம்
மண்ணினிலன்பாய் வாழ்ந்தாலே விண்ணகம்மெய்யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கிலி:*

கண்ணாலேவிண்ணை கண்டவன் போல்துள்ளாதே - தலை
துண்டாடிவிட்டால் உயிரில்லை என்பதையறியாயோ

**இளஞ்சிங்கன்:**

விண்ணகம்சேர விருப்பம்மிக வெனக்குண்டு - தலை
துண்டித்தாலும் உத்தமனாய் விண்ணரசேகுவேன்

*சங்கிலி:*

மன்னனுக்கூழியம் செய்திட நீவந்தாயோ - மத
மாற்றமேசெய்யும் பணியேற்க வந்தாயோ

**இளஞ்சிங்கன்:**

மன்னர்க்கேபணி செய்தேன் மனநிறைவாக - தினம்
விண்ணகதேவனுக்கு பணிசெய் வதென்னுரிமை

*சங்கிலி:*

காரணம் கேட்டதற்கு குதர்க்கமான பதிலா?

**மெட்டு : ஆழிப்பார்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 73)*
**தாளம் : சதுஸ்ரஏகம்** **இராகம் : நடபைரவி**

*சங்கிலி:*

மண்ணினை யொருகண்ணாய் ஆண்டிடும்
மன்னவன் என்னுரைக் கெதிர்ப்பா
ஈனத்தை உடையோனே உனக்கு
இரக்கம் என்பதே இல்லையினி

மதத்தினை மறுகண்ணாய் கொண்டிடும்
மரணத்திற் கஞ்சாதோனுக் கெதிருரையா
சிதைத்திடவே கட்டளை கொடுக்கிறேன்
சிரமதை கொய்தே விலங்குக்கிடவே

*சங்கிலி:*

தளபதி!

**தளபதி :**

மன்னா!

*சங்கிலி:*

எனக்கு அரசபணியாற்ற வந்தவன் எனக்கெதிராய் மதப்பணி ஆற்றுகின்றான். இவன் தலையை இக்கணமே துண்டித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு விலங்குகளுக்கு உணவாகக் கொடுங்கள்.

**தளபதி:**

உத்தரவு மன்னா.

**சங்கிலி:**

தளபதி! கிடைத்த தகவலின்படி எத்தனைபேர் கத்தோலிக்கர் களாக மாறியுள்ளார்கள்?

**தளபதி:**

ஐநூறு பேருக்கும் அதிகமாகிக்கொண்டு போகிறதாம்.

**சங்கிலி:**

தாமதமின்றி ஒரு படையணியுடன் சென்று மதம்மாறிய அனைவர் தலையையும் கொய்துவிட உத்தரவிடுகிறேன். நானே அதனை நேரில் கண்காணிக்கிறேன்.

**தளபதி:**

ஆகட்டும் மன்னா.

**சங்கிலியன் ஆவேசத்துடன் உள்ளே போதல்**

**மெட்டு : வந்ததிந்த மாய** *(தேவசகாயம்பிள்ளை, பக். 16)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இராகம் : சிந்துபைரவி**

**இளஞ்சிங்கம்:**

கொச்சகம்

முடிசூடி அரசாள்வோன் தீர்ப்பு முற்றும் அநியாயமே
கொடியோனாய் நாட்டு மன்னன் கோலோச்சு கின்றானே
முடிவேதும் இல்லாது எங்கள் உயிர் துறக்கின்றோமே

தரு

இதயம்நிறைதுயர மெம்மண்ணில் - மனதுமாறி
மதமும்மாறி உயிரை இழக்கத் துணிந்தோம் நாமே
எம்மிறைவா என்னசெய்குவேன் - இந்தமண்ணில்
எண்ணிலடங்கா வலியைச் சுமந்து நின்றோமே

துன்பம்முகிழ்ந்தெழவே எம்கண்ணில் - நீர்சொரிய
சுமந்ததோழும் அணைத்த மார்பும் அங்கலாய்க்குதே
என்மக்களை இழக்க விழைந்தேனே - ஒப்பில்லாத
எந்தன் தேவா எங்கள்ஆன்மா உம்மிடம்தானே

**இளஞ்சிங்கத்தை வீரர்கள் இழுத்துச் செல்லுதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி வாளைச் சுழற்றியவாறு வரல்**
**மேடையில் வட்டமாகச் சென்று உள்ளே செல்லுதல்**

**வீரர்களும் ஆட்களைத் தேடுவதைப்போல் வாளுடன் வட்டமாகச் செல்லுதல்**

**சபையோர் பாடியவாறு வரல்**

**மெட்டு : ஆசைமருமகன்** *(தேவசகாயம்பிள்ளை, பக். 39)*
**தாளம் : ரூபகம்** **இராகம் : சிந்துபைரவி**

*பல்லவி*

*1ம் பெண்:*

மதவெறி கொண்டோனாய் மன்னனிருக்கிறார்
இதயமே இல்லையன்றோ - கடுந்துயரமே வந்ததன்றோ

*சரணம்*

நீசரென்றேதலை வெட்டிக் குவித்தாரே
பாசமுள்ளோரை பாதியாய்ப் பிளந்தாரே
மாசணுகாமல் காத்தவர் பிள்ளைகள்
மோசஞ்செய் தனரென்று நினைத்தாரோ
(மதவெறி...)

*2ம் பெண்:*

கண்ணின்மணியாக காத்து வளர்த்தவர்
கள்ளமறியாத பிள்ளைகள் ஈன்றவர்
எண்ணமெலாம் சிதைந்தேக்க முற்றதை
என்னென்று சொல்வது ஏற்றமுள்ளோரே
(மதவெறி...)

*3ம் பெண்:*

புண்ணியபூமியாய் மன்னார் துலங்குதே
கண்ணியமற்றதால் கலங்கித் தவிக்குதே
கண்ணெதிரே அறுநூறு உயிர்களை
கொன்றிடத் துணிந்தாரே ஏதுநாம்சொல்ல
(மதவெறி...)

**பாடல் முடிவில் சபையோர் அரைவட்டமாக நிற்றல்**
**கட்டியகாரன் வரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு : வசனகவி

தாளம் : ரூபகம் இராகம் : நடபைரவி

மன்னவனின் ஆணையிதோ மக்களே கேளுங்கோ
மன்னாரில் அறுநூறு விரோதிகளைக் கொன்றதனால்
கண்ணாகப் போற்றிடும் எங்கள் மதத்தினையும்
அந்நியர் புகுந்திடாமலும் காத்திட முடிந்தது


ஆத்திரம் மிகக்கொண்ட போத்துக்கல் நாட்டவர்
அனைத்துப் படைகளுடன் யாழ்ப்பாணம் வருகிறார்
அத்தனை மக்களும் அணியாய்த் திரண்டு
அந்நியப் படைகளை அழித்திடல் வேண்டும்
இது மன்னரின் கட்டளை பராக்... பராக்...

திரை மூடுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கூத்துக்கள்

## மாதிரிப் பாடல்கள்

# பின்னிணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மாதிரி காப்பு பாடல்கள்

**மெட்டு : காப்பு விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

*(எஸ்தாக்கியார், பக். 1)*

ஏராரும்மணிறோமை தனைமேற்காத்த
எளில்திறையான் சேனைகளின் தலைவனாகிப்
பாராரும்புகலுபிலா சிதுவோன்பின்னர்
பரிசுத்ததமதிரீத் துவத்தினாலே
நீராருந்தெளிவடைந்தெஸ் தாக்கிநாமம்
நேர்மையாய்ப்பூண்டுபரற் காய்வான் சேர்ந்த
பேரார்ருஞ்சரிதையை நாடகமாய்ப்பாடப்
பிஞ்சுமதி ஏறுகன்னி சரண்காப்பாமே

**மெட்டு : காப்பு விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

*(தேவசகாயம்பிள்ளை, பக். 0)*

சீர்கொண்ட உலகம் யாவும் சேர்பல பொருளுந் தந்து
நேர்கொண்டு காக்க வல்ல நிருமலன் பாதம் போற்றி
தார்கொண்ட தமிழாற் தேவ சகாயன்தன் சரிதை பாட
கார்கொண்ட மலையில் வந்த கத்தன்றாள் காப்ப தாமே

**மெட்டு : காப்பு விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**

*(மனம்போல் மாங்கல்யம், பக். 1)*

சீரோங்கு மாமேதை சேக்ஸ் பியர்தன்
சிறுகாதை மனம்போல்மாங் கல்யம் தன்னை
நேரோங்கு நாட்டுக்கூத் தாகப் பாடி
நேமிதனில் நடிப்பதற்கு நாட்டங் கொண்டே
பேரோங்கு செகஞ்சிறக்க மனுவாய் வந்து
பேரறிவுப் போதனைகள் தந்த யேசின்
பாரோங்கு காயமைந்தும் அஞ்ச லித்தேன்
பரனவர் பதமலர்கள் காப்ப தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : மறு விருத்தம்** **இராகம் : சங்கராபரணம்**
*(தேவசகாயம்பிள்ளை, பக். 0)*

உருவாங்கோட் டுழுஞ்சா லெங்கும் உதிர்முத்தை யன்னம் கண்டு
கருவாங்கோ டுறுமென் சாலில் காத்தடை கிடக்கும் செஞ்சூல்
திருவாங்கோட் டிருக்கும் தேவ சகாயன்தன் கீர்த்தி பாட
தருவாங்கோ டுறுகூ ராணி தங்கியபதம் காப்ப தாமே

**மெட்டு : வெண்பா** **இராகம் : சங்கராபரணம்**
*(எஸ்தாக்கியார், பக். 1)*

சர்ப்பத் தலையதனைத் காலால் மிதித்தவளே
தற்பரனைத் தந்த தயாபரியே - அற்புதஞ்சேர்
தூயவெஸ் தாக்கிகதை சொல்லவ்ருள் நல்கிடவுன்
சேயனைமன் றாடியருள் செய்

**மெட்டு : தோடயம்** *(மரியதாசன், பக். 1)*
**தாளம் : சதுஸ்ர ஏகம்** **இரர்கம் : சங்கராபரணம்**

ஆதி பிதா சுதன் ஸ்பிரீத்து
அமலதிரீத்துவ ஏக பரன்
அவரது துணைமன நினைவுகொண்டு
அருங்கதையைப் பாட

அன்புறு சுத்த சந்தானாள் பெற்ற
அற்புதக் கன்னி அடைக்கலத்தாய்
நண்புறு மரியதாஸ் அவர் சரிதை
நானிலத்தில் பாட

இன்பரசாகிய சூசையப்பர்
இவருடன் சந்தந் தோனி முனி
தன்னருள் நாவின் சுவையிலங்கு
தங்கக்கதை பாட

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மாதிரி வாழி பாடல்கள்

மெட்டு : வாழி விருத்தம் இராகம் : சங்கராபரணம்
*(தேவசகாயம்பிள்ளை, பக். 138)*

மூவரொான் றாகிய பரனின் மறையிற் சேர்ந்து
முத்திநெறி வழிநடந்தோர் முனைந்து வாழி
காவலர் கள்செங் கோன்மை குன்றா வாழி
கர்த்தர்மெய்ம் மறைக்குரவர் களித்து வாழி
பாவ சமயங்களையே வெறுத்துத் தள்ளும்
பரிசுத்த கன்னியர்கள் பரந்து வாழி
தேவ சகாயன் றனது சரித்தி ரத்தைச்
சீராகப் பாடியரா டினரும் வாழி

மெட்டு : வாழி விருத்தம் இராகம் : சங்கராபரணம்
*(மனம்போல் மாங்கல்யம், பக். 136)*

செகம்புகழுஞ் சிறுகாதை செப்பிச் சென்ற
சேக்ஸ்பியர்தன் நாமமது சிறந்து வாழி
அகம்மகிழ நாட்டுக்கூத் துருவ தாக்கி
அரங்குறச்செய் யோசேப்பு நீடு வாழி
மிகமுயன்று மேடையேற்றி மகிழ மக்கள்
மேன்மையுற நடித்தோரும் நலமே வாழி
சுகமதுடன் ஆயுள்கூடிச் சேவை செய்யத்
துணைநின்ற தற்பரனார் வாழி வாழி

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ३. மாதிரி மங்களம் பாடல்கள்

தாளம் : ஆதி (மிஸ்ரநடை) இராகம் : நடபைரவி

*(விசயமனோகரன், பக். 150)*

தேவ திரித்துவ ஏக பரனுக்கே மங்களம் - புகழ்
சேணாடர்க் கரசியாம் தாய் மரியாய்க்குமே மங்களம்

தேங் கமழ் பூங்கொடியேந்து சந்சூசைக்கும் மங்களம் - சிட்ட
தேசிக அந்தோனி மாமுனிவர்க்குமே மங்களம்

அத்தனின் பாதம் அமர்ந்திடும் தூதர்க்கும் மங்களம் - வான
அர்ச்சிய சிட்டர்க்கும் உத்தம மானோர்க்கும் மங்களம்

சத்திய மறைநிதம் புத்துயிர் ஓங்கவே மங்களம் - நீதி
சாரும் பலதிற மானோர்க்குமே சுப மங்களம்.

பாடியிந் நாடகம் பரிந்து தந்தோர்க்குமே மங்களம் - ஏக
பரனருள் என்றென்றும் பாலிக்க வேண்டினோம் மங்களம்.

தாளம் : ரூபகம் இராகம் : ஆனந்தபைரவி

*(மனம்போல் மாங்கல்யம், பக். 136)*

மூவரொன் றாகிய முழுமுதற் சோதிக்கே மங்களம் - மக்கள்
பாவமே போக்கிடப் பார்மனு வானோர்க்கே மங்களம்

மாசணு காதநல் மாமரித் தாயார்க்கும் மங்களம் - யேசு
நேசகைத் தாதையாம் சூசைமா முனிவர்க்கும் மங்களம்

திருச்சபைத் தலைவராம் தந்தைபாப் பரசர்க்கும் மங்களம் -
இறை
அருட்தகை கொண்டிடும் ஆயர் குரவோர்க்கும் மங்களம்

விண்ணிறை பணிபுரி விரத்தர் கன்னியர்க்கும் மங்களம் - என்றும்
மண்ணதில் நற்செயல் மலிந்திட உழைப்போர்க்கும் மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலம் ஆண்டிடும் மக்களின் தலைவர்க்கும் மங்களம் - நல்ல
கானிலம் திருத்தியே சுமந்தனைச் செய்வோர்க்கும் மங்களம்

நாட்டுநற் கூத்தாய் நாடியே நடித்தோர்க்கும் மங்களம் - அருட்
பாட்டினைக் கருத்துடன் கேட்டிடப் படித்தோர்க்கும் மங்களம்

பண்ணமைத் தார்வயமாய் பாடுவித் தோருக்கும் மங்களம் - நல
வண்ணமார் பாக்களைப் பாடியிங் களித்தோர்க்கும் மங்களம்

கூத்ததைக் கண்டுமே களித்திட வந்தோர்க்கும் மங்களம் -
எமைக்
காத்திட இறையடி இறைஞ்சிடு வோர்க்குஞ்சுப மங்களம்

மங்களம் மங்களம் மாநிலம் சிறந்தோங்க மங்களம் - தூய
அன்புளம் கொண்டுமே அக்களிப் போர்க்குஞ்சுப மங்களம்.

❖ ❖ ❖






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














# வெளிவந்த ஆக்கங்கள்

## கவிதைத் தொகுப்பு

தடுமாறும் சாஸ்திரங்கள் - 1993

அவலத்தின் இராகங்கள் - 1995

## அறிவியல்

தமிழ்ச்சோலை - 1994

செயல்முறைக் கணிப்பொறி - 1999

கணிப்பொறி 2000 - 2001

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய முன்னோடிக் குறிப்புகள் - 2009

## பல்துறை

குருநகர் கலைமாட்சி - 2003

கடலலைகள் கொஞ்சும் நகர் - 2006

(வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் விருது பெற்றது)

குருதிக்குளியல் - 2007

(வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் விருது பெற்றது)

ஆன்மீகத்தில் குருநகர் மக்கள் - 2008

## தென்மோடி நாட்டுக்கூத்து

களம் தந்த களங்கம் - 2003

கூத்துக்கள் - 5 - 2009

(அரச இலக்கிய (சாகித்திய) விருது மற்றும் தமிழியல் விருது பெற்றது)

குறுங்கூத்துக்கள் - 2011

## பாடல் இறுவட்டு

யாகப்பரே எங்கள் காவலரே! - 2002

## சிறுகதை தொகுப்பு

ஆகுதி - 2009

ISBN 978-955-01970-1-9

ஜெயந்த் சென்ரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

